DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com
homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East (2nd Flr) Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

25 வது வெள்ளி விழா
2021
UTHAYAN
உதயன்
Canada's Other Voices
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca
உதயம் 1345
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday January 14, 2022

பஞ் சொக்கலிங்கம்
வீடு விற்க
416.786.2463
416.PUNCH ME
416punchme@gmail.com
RE/MAX ACE

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

# ரொறன்ரோ மாநகரில் வீடுகள் இன்றி வீதி ஓரங்களில் உறங்குபவர்களுக்காக ஒரு இலட்சம் டாலர்கள் சேகரித்த மனித நேய அமைப்பு



ரொறன்ரோ மாநகரில் வீடுகள் இன்றி வீதி ஓரங்களில் உறங்குபவர்களின் நலன்கள் கருதி நகரத்தில் இயங்கும் மனித நேய அமைப்பு ஒன்று ஒரு இலட்சம் டாலர்களை சேகரித்த நற்பணியை பாராட்டுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ரொறன்ரோவில் பாதிக்கப்பட்டவர்களின் நலன்களுக்காக இயங்கிவரும் 'கைதிக-ளின் உரிமைகளுக்காக வாதிடும் ஒரு அமைப்பு,' என்னும் அமைப்பு ஏனைய சமூகக் சேவை குழுக்களுடன் இணைந்து, இரண்டு நாட்களில் இந்த தொகையை சேகரித்திருப்பது பாராட்டுக்குரியதாக பேசப்பட்டு வரும் இந்த நேரத்தில் ரொறன்ரோ நகர சபைக்கு எதிராக பலத்த கண்டணங்களும் எழுந்துள்ளதாக அறியப்படுகின்றது.

*(தொடர்ச்சி உள்ளே 3ம் பக்கத்தில்)*

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
SIVARAJAH
ignite
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

## 'எமது மாகாணத்தில் தடுப்பூசி போட்டுக்கொண்ட மக்களுக்கு அரசாங்கம் என்ற வகையில் கடமைப்பட்டிருக்கிறோம்'

### – கியுபெக் மாகாண முதல்வர் பிரான்சுவா லெகால்ட்



"தடுப்பூசியின் முதல் டோஸ் பெறாதவர்கள் தண்டப் பணமாக எவ்வளவு கட்டணம் செலுத்த வேண்டும் என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை. எனினும் எமது கியுபெக் மாகா-ண மக்களில் பெருந்தொகையானோர் அர்ப்பணிப்புக்களைச் செய்து தடுப்பூசி போட்டுக்கொண்டார்கள். அவர்களுக்கு இந்த தண்டப்பணம் அறிவிப்பு நியாயமா-னதாக இருக்கும் என்று நினைக்கிறேன். அத்துடன் அரசாங்கம் என்ற வகையில் நாமும் தடுப்பூசி போட்டுக்கொண்ட அவர்களுக்கு கடமைப்பட்டிருக்கிறோம் என்று நான் நினைக்கிறேன்" என கியுபெக் மாகாண முதல்வர் பிரான்சுவா லெகால்ட் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

*(தொடர்ச்சி உள்ளே 3ம் பக்கத்தில்)*

RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
Mobile: 416.710.9150
ALL IN 1
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

வீடு வாங்க விற்க
PIRAPA SIVALINGAM
Sales Representative
416-999-7482
RE/MAX




## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

### COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

**VARUNAN: 416-894-6244**

### LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.

Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

**RAJAN: 416-464-2415**




### ATSIN LAW
### சட்ட அலுவலகம்

உங்கள் சட்டத் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்

Matrimonial/Family
- property equalization, custody, access, child/ spousal support, domestic agreements, divorce

Real Estate
- residential purchase, sale & refinance transactions

Powers of Attorney, Guardianship, Wills

Notary Public/Commissioner

**SAROJINI SINIVASAN**
Barrister, Solicitor & Notary Public
250 Consumers Road, Suite 517
Toronto, Ontario M2J 4V6
Office: (416) 613 8998
Fax: (416) 494 8938 --- Email: atsinlaw@gmail.com

### ஆலயத்தின் சமையலறைக்கு உதவியாளர் தேவை

ஸ்காபுறோவில் அமைந்துள்ள நன்கு அறியப்பெற்ற ஆலயமொன்றின் சமையலறையில். உதவியாளராகப் பணியாற்றக் கூடிய ஆண்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றார்கள். தகுந்த சம்பளம் வழங்கப்படும். முன்னைய அனுபவம் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு:

**சிவா 647 891 7725**

### HOUSE for RENT

**Scarborough** நகரில்
**Markham / Ellesmere**
சந்திப்புக்கு அருகில்
**3 bedroom house, main floor with all facilities**
வாடகைக்கு உண்டு.

**Close to all amenities.**

**Call: (416) 724-7362**

### நேரலை வீடியோ ஒளிபரப்பு சேவை

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்திலும் கியுபெக் மாகாணத்திலும் தமிழ் மக்கள் மத்தியில் இடம்பெறும் சுப வைபவங்கள் மற்றும் இறுதிக்கிரிகைகள் ஆகியவற்றை நேரடியாக வீடியோ ஒளிப்பதிவு செய்வது மாத்திரமன்றி. அந்த நிகழ்வுகளை நேரடியாக முகநூல் மற்றும் இணையத் தளங்களில் நேரலையாக ஒளிபரப்பவும் எம்மை அழையுங்கள். குறைந்த கட்டணமே அறவிடப்படும் அழையுங்கள்

**சிவா 647 891 7725**

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# இலங்கைச் சிறையொன்றில் ஒரு இலக்கியவாதி உருவாகின்றாராம்!. வாழ்த்திடுவோம் அவரை வாருங்கள்!

இலங்கை அரசின் கொடிதான கொலைக் கரங்களுக்கு இலட்சக் கணக்கில் போராளிகளும் அப்பாவி மக்களும் அறிஞர்களும் புத்திஜீவிகளும் பலியாகிப் போனதற்கு இன்னும் நீதி கேட்டுப் போராடுகின்ற ஒன்றுபட்ட முயற்சிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்ற இவ்வேளையில். அந்த ஆபத்தான அரசின் கொடிய சிறைகளில் எண்ணிலடங்கா அப்பாவிகளும் கற்று புத்திஜீவிகளாக தங்களை வளர்த்துக் கொண்டவர்களும் அடைபட்டுக்கிடக்கின்றார்கள்.

அவர்களின் விடுதலைக்காக அவர்களின் உறவினர்கள் தொடர்ச்சியாக குரலெழுப்பிய வண்ணம் போராடிக் கொண்டிருந்தாலும் செவிடாகப் போன காதுகளுக்கு உரியது போன்று அந்த அரசாங்கம் விசாரணைகள் எதுவுமின்றி அவர்களை சிறைகளிலி அடைத்து கொடுமைப்படுத்தி வருகின்றது.

இவ்வாறானவர்களின் விடுதலைக்காக தொடர்ச்சியாக வீதி ஓரங்களில் நின்று 'ஓலமிடும்" அவர்களின் உறவுகள் இந்த பொங்கல் பண்டிகையன்றும். பொங்கிய வண்ணம் தங்கள் உள்ளத்தில் பொங்கியெழும் உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

அடக்குமுறையைக் கையாளும் அரசின் சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி,யாழ்ப்பாணத்தில் விடுதலை பொங்கல் நிகழ்வு ஒன்று இடம்பெற்றுள்ளது தொடர்பான செய்தி இவ்வார இதழில் பிரசுரமாகியுள்ளது. இந்த செய்தியை எழுதிக்கொண்டிருக்கையில் கொதித்திடும் எமது உள்ள உணர்வுகளை கட்டுப்படுத்திக் கொண்டே அவர்களுக்காக பிரார்த்தனை செய்கின்றோம்.

நிகழ்வுகள் யாழ்ப்பாணம் வீரசிங்க மண்டபத்துக்கு முன்பாக அமைந்துள்ள,தமிழர் ஆராய்ச்சி படுகொலை நினைவுத் தூபிக்கு அருகில் இடம்பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அங்கு கண்ணீர் விட்டழுத வண்ணம் பொறியியல் பட்டம் பெற்ற தனது மகன் தொடர்பாக தந்தையார் குறிப்பிட்ட வரிகள் எமது இதயங்களை தாக்கக் கூடிய சக்தி கொண்டுத என்றே கூறவேண்டும். தந்தை தொடர்ந்து தனது மகனது ஆற்றலை வெளிக்கொணரும் வியடம் ஒன்றையும் பகிர்ந்து கொண்டுள்ளார் என்பதையும் நாம் நன்கு கவனிக்க வேண்டும். பொறியியல் பட்டத்தோடு சிறையில்ெ வாடும் அவர் ஒரு எழுத்தாளராக உருவாகி வருவதாகவும் தனது எழுத்துக்களின் மூலம் பல மாற்றங்களை கொண்டு வரலாம் என்று அவர் நம்பிக்கைகளை தாங்கிய வண்ணம் இருட்டறைக்குள் தனது நாட்களைக் கழிப்பாதாகவும் அந்த தந்தை உருக்கமாக தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டுள்ளார்.

தற்போது கொழும்பு மகசின் சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள அவரது புதல்வர். இன்று வரை விடுதலை செய்யப்படவில்லை என்றும் தனது மகன் சிறந்த எழுத்தாளன்,இதுவரை 5 நாவல்கள் மற்றும் ஒரு சிறு கதைத் தொகுதியையும் எழுதி வைத்துள்ளார் என்றும் கவலையும் உற்சாகமும் கலந்து வார்த்தைகளைப் பகிர்ந்து கொண்டுள்ளார் என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

இவ்வாறாக எமது தாயக மண்ணில் வாழும் பல தந்தையர்கள். தாய்மார்கள் அனுபவிக்கும் துயரங்கள் எமது செவிகளுக்கு வந்து சேர்கையில் நாம் ஒன்றாகச் சேர்ந்த அவர்களின் துயர் துடைக்க தயாராக வேண்டும். அவர்களின் கண்ணீரைத் நீக்க வழி செய்ய வேண்டும்.

பொங்கி மகிழும் இந்த நாளில் எம் உள்ளத்தில் புதிய சிந்தனைகளும் பாதிக்கபட்ட மக்களுக்கு உதவும் திட்டங்களும் எமது சிந்தனைகளிலும் பொங்கிவரவேண்டும்.!

முன்பக்கத் தொடர்ச்சி..

# ரொறன்ரோ மாநகரில் வீடுகள் இன்றி வீதி ஓரங்களில் உறங்குபவர்களுக்காக....

ரொறன்ரோ நகரத்தில் இயங்கிவரும் பல வீடற்றவர்களின் தங்குமிடங்கள் அங்கு தங்குகின்றவர்களால். நிரம்பியிருப்பதாலும், வெப்பநிலை வீழ்ச்சியடைவதாலும், நகரின் வீடுகளற்ற மக்கள் தங்கும் இடங்களை வெப்பமுடையவையாக வைத்திருக்கும் நோக்கத்திற்காக இந்த தொகை பயன்படுத்தப்படவுள்ளது என மேற்படி அமைப்பு வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வானிலை எச்சரிக்கை ஜனவரி 7 முதல் நடைமுறைக்கு வந்தபோது, சூடாக்கப்பட்ட வசதிகளைக் கொண்ட தங்குமிடங்களைத் திறப்பதாக நகர சபை அறிவித்தது, ஆனால் தேவைப்படும் மக்களுக்கு படுக்கைகள் எதுவும் கிடைக்கவில்லை என்றும் நிதி சேகரிப்பு முயற்சியில் ஈடுபட்ட அமைப்பு தெரிவித்துள்ளது.

தங்களால் திரட்டப்பட்ட ஒரு இலட்சம் டாலர்கள் நிதிக்கு சுமார் 1,500 தனி நபர்கள் தங்கள் நன்கொடைகளை வழங்கியதாகக் குறிப்பிட்ட அமைப்பின் பிரமுகர் ஒருவர், "எமது சமூகத்தை நாம் அணிதிரட்ட முடியும் என்பதையும், நம் மக்களுக்குத் தேவையானதைப் பெறுவதற்கு மேயர் ஜான் டோரி அல்லது பிற அரசாங்க அதிகாரிகள் எங்களுக்கு அவசியமில்லை என்பதையும் இது காட்டுகிறது." என்றும் தெரிவித்தார்.

கடந்த திங்களன்று **Toronto Prisoners' Rights Project** என்னும் இந்த அமைப்பு சமூக ஊடகங்கள் ஊடாக நன்கொடைகளை வழங்குவதற்கான அவசர அழைப்பை வெளியிட்டது, அவர்கள் இல்லாமல் உறையும் பனியில் இரவைக் கழிக்கும் மக்களுக்கு கூடாரங்கள், ம்றறும் சூடான ஆடைகள்˙ பிற தேவைகளை ஆகியவற்றை வழங்கினர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

"தெருவில் பனியின் காரணமாக உறைந்து இறக்க வேண்டிய அவசியம் யாருக்கும் இல்லை. ஒவ்வொரு நபரும் கண்ணியத்துடன் தங்குவதற்கு ஒரு சூடான இடத்திற்கு உரியவராக உள்ளார். எங்கள் மத்தியில் காணப்படும் வீடற்றவர்களுக்கு உயிர்வாழும் பொருட்களுக்கான நிதி உதவியை வழங்குவதன் மூலம் ஒருவரையொருவர் பாதுகாப்பாக வைத்திருக்க எங்களுக்கு உதவுங்கள்" என்று இன்ஸ்டாகிராம் என்னும் சமூக ஊடகத்தின் மூலம் பிரச்சாரம் செய்தார்கள் இந்த அமைப்பினர்

நிதி சேகரிப்பு ஆரம்பிக்கப்பட்ட 24 மணிநேரத்திற்குப் பிறகு, நிதி தொகையான 64,000 டாலர்களை எட்டியது. தொடர்ந்து இரண்டு நாட்களில் இந்த தொகையை ஒரு இலட்சத்தை அடைந்தது என்று மேற்படி அமைப்பினர் தெரிவித்தனர்.

முன்பக்கத் தொடர்ச்சி

# எமது மாகாணத்தில் தடுப்பூசி போட்டுக்கொண்ட மக்களுக்கு அரசாங்கம் என்ற வகையில்...

கியுபெக் மாகாணத்தின் எல்லைக்குள் வசிக்கும் மக்கள் அனைவரும் தடுப்பூசி செலுத்திக்கொள்ள வேண்டும் என்றும் அவ்வாறு செலுத்திக் கொள்ளாதவர்களுக்கு தண்டம் விதிக்க கியூபெக் மாகாண அரசு முடிவு செய்துள்ளதாக அரச அறிவிப்பு ஒன்றில் பிரசுரமான தகவல் ஒன்று தெரிவித்துள்ளது.

கியூபெக் மாகணத்தில் அதிக அளவில் கொரோனா உயிரிழப்புகள் நிகழ்ந்து வருவதனால் அதனை தவிர்ப்பதற்கு அந்த மாகாண அரசு கொரோனா தடுப்பூசி செலுத்துவதில் தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

அந்த மாகாணத்தில் 85 சதவீதத்துக்கும் அதிகமானோர் குறைந்தபட்சம் முதல் டோஸ் தடுப்பூசியை செலுத்திக்கொண்டுள்ளனர். சுமார் 13 சதவீதம் பேர் மட்டுமே முதல் டோஸ் தடுப்பூசி கூட செலுத்திக்கொள்ளமாலும் உள்ளனர்.

அவர்களையும் தடுப்பூசி செலுத்திக்கொள்ள வைப்பதற்கு மாகாண அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும் Mrs. K. Vasanthakumar ஐ தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9


உங்களுக்கும், உங்கள்
குடும்பத்தினருக்கும் எங்கள்
இனிய தைப்பொங்கல்
மற்றும் தமிழ்ப் புத்தாண்டு
வாழ்த்துகள்
Happy Thai Pongal
& Tamil New Year
நீங்கள் பொங்கல் விழாவை கொண்டாடும்
பொழுது ஒன்ராறியோ மாகாணத்தின்
சுகாதார வழிகாட்டல் விதிமுறைகளை
பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம்.
VIJAY THANIGASALAM
MPP for Scarborough-Rouge Park
Unit 105 8130 Sheppard Ave. E Toronto, ON M1B 3W3
(416) 283-8448
vijay.thanigasalam@pc.ola.org


அனைவருக்கும் இனிய
தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்!
Happy Thai Pongal!
NICKMANTAS
CITY COUNCILLOR
WARD 22
SCARBOROUGH-AGINCOURT

# நாடுகள் எம்மைப் பிரித்தாலும் மொழியால் நாம் இணைவோம் என்கிறார் தமிழக முதல்வர் ஸ்டாலின்



“நாடுகள் எம்மைப் பிரித்தாலும் நாம் எமது மொழியாலும் பண்பாட்டாலும் ஒன்றுபட்டு வாழ்வோம்” என்று தமிழக அரசின் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நேற்று வியாழக்கிழமை இணையவழி ஊடாக நடைபெற்ற அயலகத் தமிழர் நாள் விழாவில் சிறப்புரையாற்றிய தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார்.

“தமிழால் இணைவோம்“ என்ற அடிப்படையில் நாம் ஒன்றுசேர்ந்துள்ளோம். தமிழுக்குத்தான் அந்த வலிமை இருக்கிறது. மத மாயங்களையும் சாதி பேதங்களையும் வீழ்த்தும் வல்லமை மொழிக்குத்தான் உள்ளது. அதனால்தான் “தமிழால் இணைவோம்“ என்பதை நமது முழக்கமாகக் கொண்டுள்ளோம். ஒரு தமிழன் - இன்னொரு தமிழனைச் சந்திக்கும் போது தமிழைச் சொல்லி வாழ்த்து தெரிவிக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் மற்ற வேறுபாடுகள் எதற்கும் முக்கியத்துவம் தரக் கூடாது என்ற எண்ணம் தோன்றும் என்றார் இலக்கிய மேதை மு.வரதராசனார். அத்தகைய தமிழ் வாழ்த்தை உங்களுக்கு முதலில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழால் இணைந்துள்ள அனைவருக்கும் நன்றி தெரிவிக்கும் அதேவேளையில் - அயலகத் தமிழர் நாள் வாழ்த்துகளையும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று ஸ்டாலின் தனது உரையில் குறிப்பிட்டார்.

”உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் - பல்லாயிரம் மைல் கடந்தும் இன்று நாம் ஒன்றாகக் கூடி இருக்கிறோம் என்றால் - தமிழன் என்ற உணர்வோடு நாம் கூடி இருக்கிறோம். நம்மை நாடுகள் பிரிக்கின்றன. நிலங்கள் பிரிக்கின்றன. ஆனாலும் மொழி இணைக்கிறது. அந்த வல்லமை தமிழ்மொழிக்கு உண்டு. “வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்“ என்பதை தமிழ் மண்ணில் விதைத்து மொழிப்பற்றும் - “தமிழா! இன உணர்வு கொள்“ என்று முழங்கி இனமான உணர்வும் ஊட்டிய இயக்கம்தான் திராவிட இயக்கம்! மொழிக்காக போராடிய - வாதாடிய இயக்கம் மட்டுமல்ல, மொழிகாக்க தனது தேகத்தை தீக்குத் தின்னத் தந்த தீரர்களின் இயக்கம் தான் திராவிட முன்னேற்றக் கழகம்” என்று முதல்வர் மேலும் தெரிவித்தார்.

”இந்த வரிசையில்தான், வெளிநாடுகளில் உள்ள தமிழ்ச் சங்கங்களுடன் இணைந்து ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12-ம் நாள் உலகத்தமிழர் புலம்பெயர்ந்தோர் நாளாகக் கொண்டாடப்படும். இலங்கையில் இருந்து தமிழ்நாட்டை நோக்கி வந்த தமிழர்களுக்கு 317கோடி ரூபா மதிப்பீட்டில் பல்வேறு சமூக பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருவதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். கொ-ரோனா என்ற பெருந்தொற்று காலமாக இல்லாமல் இருந்திருந்தால், இந்த விழா-வை மிகப்பெரிய விழாவாக முன்னெடுத்திருப்போம். கொரோனா என்பதால் அது இயலவில்லை. ஆனால் பரந்த உள்ளம் கொண்ட நாம், காணொலியில் பெரிய அளவில் கொண்டாடிக் கொண்டு இருக்கிறோம். பல நாடுகளைச் சேர்ந்த, பல்வேறு பெருமக்கள், பல்வேறு தலைப்புகளில் பேச இருக்கிறீர்கள். உங்கள் அனைவரது உரைகளும் தமிழை - தமிழினத்தை - தமிழர்களை மேம்படுத்துவதாக அமைய வேண்டும். நம்மை பிளவுபடுத்தும் எண்ணங்களை பின்னுக்குத் தள்ளி, நம்மை இணைக்கும் எண்ணங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பவையாக உங்களது உரைகள் அமைய வேண்டும்.

இங்குள்ள தமிழர்களுக்கு எல்லாமுமாய் இந்த அரசு இருப்பதைப் போலவே அயலகத் தமிழ் மக்களுக்கும் எல்லாமுமாக இந்த அரசு இருக்கும்” என்று முதல்வர் ஸ்டாலின் உறுதியளித்துள்ளார்.

# அரசியல் கைதிகள் குடும்பத்துடன் இணைய வேண்டும் என பிரார்த்தனையோடு ''குரல் அற்றவர்களின் குரல்'' அமைப்பினால் ‘நடத்தப்பெற்ற விடுதலை பொங்கல்’ நிகழ்வு

அரசியல் கைதிகள் குடும்பத்துடன் இணைய வேண்டும் என பிரார்த்தித்து, குரல் அற்றவர்களின் குரல் அமைப்பினால் ‘விடுதலை பொங்கல்’ நிகழ்வு இடம்பெற்றது. இந் நிகழ்வில், மக்கள், உறவினர்கள், அரசியல் பிரமுகர்கள், மதத் தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

எனது மகன் ஒரு பொறியியலாளர் ,அத்துடன் ஒரு எழுத்தாளரும் கூட இன்று வரை சிறையில் வாடுவதாக , தமிழ் அரசியல் கைதியின் தந்தையொருவர் கவலை தெரிவித்துள்ளார்.

சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி,யாழ்ப்பாணத்தில் விடுதலை பொங்கல் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

நிகழ்வுகள் யாழ்ப்பாணம் வீரசிங்க மண்டபத்துக்கு முன்பாக அமைந்துள்ள,தமிழர் ஆராய்ச்சி படுகொலை நினைவுத் தூபிக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

இதன் போது அந்த தந்தை சோகத்துடன் கருத்து தெரிவிக்கையில்,.

நான் யாழ்ப்பாணம் அல்வாயில் வசிக்கின்றேன்.எனது மகன் சிவலிங்கம் ஆரூரன் 2008 ஆம் ஆண்டு கொழும்பில் சந்தேகத்தின் அடிப்படையில் பாதுகாப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.



தற்போது கொழும்பு மகசின் சிறையில் வைக்கப்பட்டுள்ளார். இன்று வரை விடுதலை செய்யப்படவில்லை. எனது மகன் சிறந்த எழுத்தாளன்,இதுவரை 5 நாவல்கள் மற்றும் ஒரு சிறு கதை எழுதியுள்ளார்.

அதற்கு அவருக்கு விருதுகளும் கிடைத்துள்ளது.இப்போதும் சிறையில் அவர் எழுதிக்கொண்டு தான் இருக்கின்றார் – என்றார்.


MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

⇒ Private Mortgage (No Income Verification)

⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா




கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC



www.mortgagecliniccanada.com

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker



Cell : 416-624-4843

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

RIGHT AT HOME REALTY INC.

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4



# இசை உலகின் "நிரந்தர இளைஞன்" கே.ஜே. யேசுதாஸின் 82வது பிறந்ததினம்

இசை ரசிகர்களின் நெஞ்சங்களில் நீங்கா இடம் பிடித்துள்ள பின்னணிப் பாடகர் கே.ஜே. யேசுதாஸின் 82வது பிறந்த தினம் இன்று. அவரது பாடல்களையும் அவைகள் செய்த மாயங்களையும் தற்போது பார்க்கலாம்.

1940ம் ஆண்டு கேரளாவில் பிறந்த கே.ஜே. யேசுதாஸ், முறைப்படி சங்கீதம் பயின்றவராக இசையுலகில் அடியெடுத்து வைத்தார். மலையாளத் திரைப்படங்களில் பாடல்களைப் பாடி வந்த அவர், வீணை எஸ். பாலசந்தரின் "பொம்மை" படத்தில் இடம்பெற்ற "நீயும் பொம்மை நானும் பொம்மை" என்ற பாடல் மூலம் தமிழில் அறிமுகமானார். மென்மையும் அமைதியுமே அவரது குரலின் அடையாளமாகிப் போனது. அது, பெருமழைக்குப் பின்னர் மனதை குளிர்விக்கும் சாரலைப் போன்று ஆன்மா நிரம்பியதாக பாடல்களில் வெளிப்படும்.

(பூவே செம்பூவே பாடல்) அதேபோல், யேசுதாஸின் குரலும் அவரது பாடல்களும், தாயின் பேரன்பிற்கு நிகரானதாகச் சொல்லலாம். ஒவ்வொரு முறையும் ரசிகர்களைத் தாலாட்டும், தலைகோதி துயர் போக்கும், தாய் மடியைப் போன்று அரவணைத்து அமைதிகொள்ள செய்திடும்.

(அம்மாஎன்றழைக்காத உயிரில்லையே பாடல்) எம்.எஸ்.வி, இளையராஜா, ஏ.ஆர். ரஹ்மான், தேவா, வித்யாசாகர், யுவன் சங்கர் ராஜா, அனிரூத் என 4 தலைமுறை இசையமைப்பாளர்களுடனும் பணியாற்றியுள்ள யேசுதாஸ், தனது குரலின் சுயத்தை ஒருபோதும் இழக்கவில்லை என்பதே உண்மை. தமிழ், மலையாளம், தெலுங்கு, இந்தி உள்ளிட்ட இந்திய மொழிகளில் பல பாடலகளை பாடியுள்ள அவர், பல விருதுகளையும் வென்று சாதனைப் படைத்துள்ளார்.

# பிரபல பாடகி லதா மங்கேஷ்கர் கொரோனா தொற்றில் பாதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்



முதுபெரும் பாடகி லதா மங்கேஷ்கருக்கு கொரோனா தொற்று இருப்பது கண்டறியப்பட்டதையடுத்து மும்பையில் உள்ள மருத்துவமனையில் இன்று அனுமதிக்கப்பட்டார்.

92 வயதான லதா மங்கேஷ்கர், தற்போது மும்பை ப்ரீச் கேண்டி மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவில் (ICU) சிகிச்சை பெற்று வருகிறார். இந்தியாவில் கொரோனா தொற்றின் மூன்றாவது அலை வேகமாக பரவி வருகிறது. கொரோனா பேரலை முன்னெப்போதும் இல்லாத அளவில் வேகமாக பரவி வருகிறது. பல மாநில முதல்வர்கள், மத்திய அமைச்சர்களே கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனுடன் ஒமிக்ரான் தொற்றும் பரவி வருகிறது.

கலைத்துறையையும் விட்டு வைக்காத கொரோனா கலைத்துறையில் பிரபலங்களையும் கொரோனா தொற்று விட்டு வைக்கவில்லை. ஹாலிவுட், பாலிவுட், கோலிவுட் என அனைத்து சினிமா வட்டாரங்களிலும் பிரபல நடிகர், நடிகைகள், இயக்குநர்கள் பிரபலங்கள் என பலரும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். நடிகர் மகேஷ்பாபு, திரிஷா, குஷ்பூ என பிரபலங்கள் பாதிக்கப்பட்டு தனிமையில் உள்ளனர்.

இந்நிலையில் அதிர்ச்சியூட்டும் விஷயமாக பிரபல பின்னணி பாடகி, இந்திய பாடல்களின் ஜகான் என அழைக்கப்படும் முதுபெரும் பின்னணி பாடகி லதா மங்கே'கரும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு ஐசியூவில் சிகிச்சை பெற்று வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. லதா மங்கே'கருக்கு வேறு உடல்நலப் பிரச்சினைகள் உள்ளன, மேலும் வயது காரணியைப் பார்த்து, மருத்துவர்கள் நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றனர் என்று மருத்துவமனை வட்டார தகவல் வெளியாகியுள்ளது. முதல் அலையின்போது 2019 நவம்பரில் மூச்சுத்திணறல் காரணமாக மங்கேஷ்கர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அப்போது, மங்கேஷ்கரின் தங்கையான உஷா, மங்கேஸ்கருக்கு வைரஸ் தொற்று இருப்பதாக கூறியிருந்தார்.

நாடே கொண்டாடிய பிறந்த நாள் கடந்த ஆண்டு செப்டம்பரில், மங்கேஷ்கர் தனது 92வது பிறந்தநாளை தனது நெருங்கிய குடும்ப உறுப்பினர்களுடன் கொண்டாடினார். அவரது பிறந்தநாள் அவரது ரசிகர்களால் பெரிதாக சமூக வலைதளங்களில் கொண்டாடப்பட்டது. சமூக ஊடகங்களில் அனைத்து தரப்பிலிருந்தும் இசை அடையாளமான லதா மங்கேஷ்கருக்கு ரசிகர்களின் அன்பின் வெளிப்பாடு மற்றும் வாழ்த்துக்களும் குவிந்தன. இந்திய பிரதமர் நரேந்திர மோடி தனது ட்விட்டர் பதிவில், மங்கேஷ்கரின் "நீண்ட மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக்காக" பிரார்த்திப்பதாக தெரிவித்திருந்தார். அவரது பிறந்த நாளை நாடே கொண்டாடியது.

"மதிப்புள்ள லதா தீதிக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள். அவளுடைய இனிமையான குரல் உலகம் முழுவதும் எதிரொலிக்கிறது. இந்திய கலாச்சாரத்தின் மீதான அவரது பணிவு மற்றும் ஆர்வத்திற்காக அவர் மதிக்கப்படுகிறார். தனிப்பட்ட முறையில், அவருடைய ஆசீர்வாதங்கள் பெரும் பலத்திற்கு ஆதாரமாக இருக்கின்றன. லதா தீதியின் நீண்ட மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக்காக நான் பிரார்த்திக்கிறேன்," என்று பிரதமர் மோடி அப்போது ட்வீட்டில் தெரிவித்திருந்தார்.

1000-க்கும் மேற்பட்ட படங்கள், 70 ஆண்டு கலைப்பயணம் எழுபது ஆண்டுகளுக்கும் மேலாக மங்கேஷ்கர் 1,000 க்கும் மேற்பட்ட ஹிந்தித் திரைப்படங்கள் மற்றும் பல்வேறு பிராந்திய மற்றும் வெளிநாட்டு மொழிகளில் ஆயிரக்கணக்கான பாடல்களை பாடியுள்ளார். இந்தியா முழுவதும் அல்லாமல் உலகெங்கும் பல்வேறு மொழி பேசும் கோடிக்கணக்கான மக்கள் அவரது ரசிகர்களாக உள்ளனர். இந்திய பிரதமர் முதல் பல்வேறு பிரபலங்கள், விவிஐபிக்கள், விஐபிக்கள் அவரது தீவிர ரசிகர்கள் என்றால் மிகையல்ல. 92 வயதாகும் லதா மங்கேஷ்கரின் கடைசிப் பாடல் "சௌகந்த் முஜே இஸ் மிட்டி கி", இது மார்ச் 30, 2021 அன்று இந்திய ராணுவத்திற்கு அஞ்சலி செலுத்தும் வகையில் வெளியிடப்பட்டது. இந்தியா முழுவதும் தனது கானக்குரலால் கட்டிப்போட்டுள்ள லதா மங்கேஷ்கருக்கு 2001 ஆம் ஆண்டில் மிக உயர்ந்த குடிமகன் விருதான பாரத ரத்னா அவருக்கு வழங்கப்பட்டது. லதா மங்கேஷ்கர் பத்ம பூஷன், பத்ம விபூஷன், தாதா சாகேப் பால்கே விருது மற்றும் பல தேசிய திரைப்பட விருதுகள் உட்பட பல விருதுகளைப் பெற்றவர். வயோதிகம் காரணமாக தொற்றால் பாதிக்கப்பட்ட அவரை மிகக்கவனமாக மருத்துவர்கள் அவரது உடல்நிலையை பேணி பாதுகாத்து வரும் நிலையில் அவர் பூரண உடல் நலன் பெற வேண்டும் என்பது கோடிக்கணக்கான அவரது ரசிகர்களின் ஆவலாக உள்ளது.

# ஷங்கரை மிஞ்சும் தமிழில் இன்னோர் பிரமாண்டம்.! ஒரு படம் எடுக்க 5 வருஷம்.! சிவகார்த்திகேயன், சூர்யா



தமிழ் சினிமாவில் ஏன் இந்திய சினிமாவிலேயே பிரமாண்ட திரைப்படங்களை சமூக கருத்தோடு இயக்கி பிரபலமானவர் இயக்குனர் ஷங்கர். இவர் ஒரு படம் இயக்க ஆரம்பித்தால் குறைந்தது 2 வருடம் ஆகும். அந்தளவுக்கு கால நேரம் எடுத்துக்கொள்வார். தனக்கு தேவையான காட்சி வரும் வரை மெனெக்கெடுவார்.

தற்போது அதே போல ஒரு இயக்குனர் தமிழ் சினிமாவில் உருவெடுத்து வருகிறார். அவர் வேறுயாருமல்ல, இன்று நேற்று நாளை பட இயக்குனர் ரவிக்குமார் தான். அப்படம் முடிந்து சில காலம் எடுத்துக்கொண்டு அயலான் படத்தினை சிவகார்த்திகேயனை நாயகனாக வைத்து தொடங்கினார். பிரமாண்ட பட்ஜெட், ஏ.ஆர்.ரகுமான் இசை, வேற்று கிரக வாசி கதைக்களம் என அப்படத்தின் கிராபிக்ஸ் பணிகளுக்கே வருடங்கள் தாண்டி வேலை செய்து வருகிறார். இன்னும் பணிகள் முடிந்த பாடில்லை. அந்தளவுக்கு காட்சி சரியாக வரவேண்டும் என மெனெக்கெடுகிறார்.

அதற்கடுத்து, ரவிக்குமார், சூர்யாவிடம் கதை கூறியுள்ளாரம். அந்த கதை 50 வருடம் கழித்து வருங்கால உலகத்தில் நடப்பது போல அமைக்கப்பட்டுள்ளதாம். சூர்யாவிற்கு அந்த கதை பிடித்துவிட்டதாம். அதற்கான முன் பணிகள் மட்டுமே 1 வருடம் நடக்குமாம். போகிற போக்கை பார்த்தல் ஷங்கரை மிஞ்சும் பிரமாண்டத்தை ரவிக்குமார் படங்களில் பார்க்கலாம் என தோன்றுகிறது. அதற்கு பதில் அயலான் திரைப்படம் தான் கூற வேண்டும்.


**Sapphire Banquet & Catering**

Specializing in Videography & Photography

- Anniversary Party
- Birthday Party
- Bridal Shower
- Children's Party
- Engagement Party
- and more...
- Family Get-together
- Graduation Party
- Holiday Party
- Religious Ceremonies
- Wedding Showers

SHIVA SUBRAMANIAM
(647) 406-4868

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இந்த வருட இறுதிக்குள் இந்த நாட்டில் என்ன நடக்கப் போகின்றது என்று தெரியாத ஒரு அச்ச நிலை ஏற்பட்டுள்ளது – ரிஷாட் பதியுதீன் எம்.பி.

ஒரு சில அரசியல் தலைமைகள் இனவாத, மதவாத சூழலை இந்த நாட்டில் ஏற்படுத்தி, தாங்கள் ஆட்சி பீடத்தில் ஏற வேண்டும் என்பதற்காக இந்த நாட்டில் இனவாதத்தையும், மதவாதத்தையும் விதைத்து வந்துள்ளனர் என முன்னாள் அமைச்சரும்,வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ரி'ாட் பதியுதீன் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவினால் ஆரம்பிக்கப்பட்ட "பிரபஞ்சம் செயற்திட்டம் சனிக்கிழமை (08) மதியம் மன்னார் எருக்கலம் பிட்டி மத்திய மகளிர் மகாவித்தியாலயத்தில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் போது கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன் 500 மில்லியன் டொலர் கடன் கட்ட வேண்டியவர்களாக இந்த அரசு இருக்கின்றது. இந்த வருட இறுதிக்குள் இந்த நாட்டிற்கு என்ன நடக்கப் போகின்றது என்று தெரியாத ஒரு அச்ச நிலை ஏற்பட்டுள்ளது. பொருட்களை இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வைத்தியசாலை பொருட்கள், உணவுப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் நிலை என்னவாகும் என்ற கேள்வி நாட்டில் ஏற்பட்டு இருக்கிறது.

இந்த நாட்டினுடைய நலனுக்காகத்தான் இந்த நாட்டின் வரலாற்றில் நாங்கள் எல்லோரும் செயல்பட்டுக்கொண்டு இருக்கின்றோம். ஆனால் ஒரு சில அரசியல் தலைமைகள் இனவாதத்தையும், மதவாதத்தையும் கக்கி இனவாத, மதவாத சூழலை இந்த நாட்டில் ஏற்படுத்தி, தாங்கள் ஆட்சி பீடத்தில் ஏற வேண்டும் என்பதற்காக இந்த நாட்டில் இனவாதத்தையும், மதவாதத்தையும் விதைத்து வந்துள்ளதை நாங்கள் பார்க்கின்றோம்.

இனவாதமும், மதவாதத்தையும் மூலதனமாக கொண்ட அரசாங்கம் தான் இந்த இரண்டு வருட காலத்துக்குள் இவ்வாறான, மோசமான நிலைக்கு இந்த நாட்டை கொண்டு சென்றுள்ளார்கள் என்பது எம் எல்லோருக்கும் தெரியும். இன்று விவசாயிகள் வீதியில் இறங்கி போராடுகின்றார்கள். தங்கள் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்க விடுங்கள்.

தமது விவசாயத்திற்கு தேவையான பசலை யை தாருங்கள் என்று வீ-



தியில் போராடுகின்ற ஒரு மோசமான நிலை இந்த நாட்டில் ஏற்பட்டுள்ளது. கேசினை பெற்றுக்கொள்ள வரிசையில் நிற்கின்றனர். ஒரு நாள் வேலையை விட்டு கேசினை பெற்றுக்கொள்ள வரிசையில் நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது.



தற்போது உணவு பொருட்களுக்கு தட்டுப்பாடு, நினைக்க முடியாத அளவிற்கு பொருட்களின் விலையேற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நானும் பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரன அவர்களும் ஒரே அமைச்சில் அமைச்சர்களாக இருந்தோம். அவர் இராஜாங்க அமைச்சராக இருந்தார்.

எங்களில் ஒரு வருடங்கள் இல்லை இரண்டு வருடங்களாக கேஸ் நிறுவனத்தினர் வந்து 250 ரூபாய் கூட்டித்தாருங்கள் என்று கேட்டார்கள். கடைசியாக 100 ரூபாய் கூட்டித்தாறுங்கள் என்று கேட்டனர். நாங்கள் கூறினோம் ஒரு ரூபாய் கூட கூட்டித்தர முடியாது.

உலகச் சந்தையில் இந்த விலை. நீங்கள் 100 ரூபாய் கூட்டித்தர கேட்டால் இந்த நாட்டில் வாழ்கின்ற மக்கள் இதனால் பாதிக்கப் படுவார்கள் என்று கூறினோம். மாவின் விலையை கூட்டுவதற்கு இலங்கையில் உள்ள இரண்டு கம்பனியினர் எங்களிடம் வந்து கேட்டார்கள். 6 ரூபாய் கூட்டி கேட்டார்கள். அதற்கு நான் இருக்கும் வரை ஒரு ரூபாய் கூட கூட்ட அனுமதிக்க மாட்டேன். என்று.

அதே போன்று தான் 100 ரூபாய்க்கு சீனியையும், அரிசியை 70 ரூபாய் வரைக்கும், பருப்பு 120 ரூபாவிற்கு விற்றோம். இவ்வாறு ஒரு மனிதனுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை நியாயமான விலைக்கு விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொண்டோம். பொருட்களின் விலையை இந்த நாட்டில் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தோம்.

ஆனால் இன்று இனவாதத்தையும், மதவாதத்தையும் மூலதனமாக கொண்டு வந்த இந்த அரசு இன்று பொருட்களின் விலையை அரசாங்கம் அல்ல, அமைச்சர்கள் அல்ல பொருட்களின் விலையை கடை முதலாளிகள், வியாபாரிகள் தீர்மானிக்கின்ற நிலைக்கு இந்த நாடு மோசமடைந்துள்ளது.

எனவே எம்மிடம் உள்ள ஒரே ஒரு ஆயுதம் பிரார்த்தனை. இந்த பிரார்த்தனை ஊடாக இந்த நாட்டிற்கு நல்லதொரு ஆட்சிக்காக எல்லா இனத்தையும் சமமாக மதிக்கின்ற நல்லாட்சிக்காக, எல்லா இனமும் ஒற்றுமையாக வாழக்கூடிய ஆட்சிக்காகவும், நமது பொருளாதாரம் மேம்பட்டு, நமது பிள்ளைகள் நாளை ஏழைகளாக மாறிவிடாது, பசியிலும், பஞ்சத்திலும் வாழ்ந்திடாமல் நிம்மதியாக வாழ்ந்திட நல்லதொரு ஆட்சிக்காக நாம். எல்லோரும் இறைவனை பிரார்த்திப்போம். என அவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் உரை நிகழ்த்தினார்.

**- மன்னார் நிருபர்**

# இலங்கையில் தனியார் துறை ஊழியர்களுக்கு 5000 ரூபாய் கொடுப்பனவை வழங்க முதலாளிகள் மறுப்பு



இலங்கையில் பொருளாதார நிலை சீராகும் வரை தனியார் துறை ஊழியர்களுக்கு 5000 ரூபாய் கொடுப்பனவை வழங்குவது கடினம் என தனியார் துறைகளின் தலைவர்களான முதலாளிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர்கள் இதனை தெரிவித்துள்ளனர்.

ஏற்றுமதி வருவாய் சரிவு, கட்டண உயர்வு, உற்பத்தி செலவுகள் அதிகரிப்பு, மூலப்பொருட்கள் இறக்குமதி மற்றும் செலவுகள் அதிகரிப்பு மற்றும் வங்கிகள் அறவிடும் அதிக வட்டி வீதங்கள் ஆகியவற்றை மேற்கோள் காட்டி அவர்கள் இந்த விசேட கொடுப்பனவை மறுத்துள்ளனர்.



# விசுவமடுவில் துப்பாக்கி சூட்டில் இளைஞர் காயம்

முல்லைத்தீவு "புதுக்குடியிருப்பு" விசுவமடு பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் காயமடைந்த நபர் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இரு தரப்பினருக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் வலுப்பெற்றதை தொடர்ந்து அப்பகுதிக்கு வந்த ஒருவரால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவத்தில் விசுவமடுவைச் சேர்ந்த 22 வயதான இளைஞர் ஒருவரே காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியொன்றே துப்பாக்கி பிரயோகத்திற்கு பயன்படுத்தப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

சந்தேகநபரை கைது செய்துள்ளதுடன் செவ்வாய்க்கிழமை (11) முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மாதகல் கடலில் இடம்பெற்ற ஒரு திட்டமிட்ட படுகொலையா?

## காணி மீட்புக்கு போராடியவரே படகு விபத்தில் கொல்லப்பட்டார் என சக மீனவர்கள் குற்றச்சாட்டு

மாதகல் காணி மீட்பு போராட்டத்தில் ஈடுபட்ட மீனவரே படகு விபத்தில் கொலை செய்யப்பட்டுள்ளார் என மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். திங்கட்கிழமை (10) இரவு மீன் பிடிக்கச் சென்ற மாதகல் பகுதி மீனவர் ஒருவர் (எட்வேட் மரியசீலன் - வயது 31) இன்று காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் குறித்து சக மீனவர்கள் மற்றும் உறவினர்கள் கருத்து தெரிவிக்கையில் செவ்வாய்கிழமை காலை 06.30 மலையளவில் தொழிலில் இருந்து கரைக்கு திரும்பும் போது, மாதகல் படகு மீது கடற்படையின் ரோந்து படகு மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது என கடற்படையினர் எமக்கு தெரிவித்தனர்.

அத்துடன், மாதகல் கடலில் சடலமாக மீட்கப்பட்ட நபர் வீடு திரும்பாத நிலையில் அவரை தேடி நாம் சென்றபோது எம்மை கடற்படையினர் மிரட்டி அனுப்பினார்கள். பின்னர், கடலின் கரையோரத்தில் அவரது சடலம் தலையில் பலத்த காயங்களுடன் கிடப்பதாக சிலர் தெரிவித்ததை அடுத்து நாம் அப்பகுதிக்கு சென்று சடலத்தை பார்த்தோம்.

மேலும், அவ்விடத்திற்கு வந்த கடற்படையினர் இந்திய ரோலர் படகு மோதியதினாலையே குறித்த விபத்து இடம்பெற்றதாக தெரிவித்தனர். ஆனால், குறித்த விபத்து இடம்பெற்ற இடத்திற்கு இந்திய இழுவை படகு நுழையவே முடியாது.



கரையில் இருந்து 200 மீற்றர் தூரத்தில், கடலின் அடியில் பாறை காணப்படும், ஆகவே பாரிய படகுகள் இங்கு அண்மையாக வர முடியாது. அதேவேளை, உயிரிழந்தவர் கடந்த காலங்களில் இடம்பெற்ற மாதகல் காணி மீட்பு போராட்டத்தில் ஈடுபட்ட நபர் ஆவார்.

கடலில் தொழிலுக்கு செல்லும் நமக்கு எவ்வித பாதுகாப்பும் இல்லை, பாதுகாப்பு தரவேண்டியவர்களுக்கு பயந்தே கடலுக்கு செல்ல வேண்டும் என்றால் நாம் எங்கு போவது எவ்வாறு தொழில் செய்வது? பாதுகாப்புக்கு வருபவர்களே, படகால் மோதி எம்மை சாகடிக்கிறார்கள் என மேலும் குற்றம்சாட்டியுள்ளனர்.

இந்தியா செய்திகள்
India News

# எச்சரிக்கை பலகையையும் மீறி "செல்பி" எடுக்க முயன்றபோது மாமியார் மருமகள் நீர் வீழ்ச்சியில் விழுந்து பலி



நவீன உலகத்தில் செல்.ஃபி எடுத்துக்கொள்வது அத்தியாவசியம் ஆகிவிட்டது. அது அளவுக்கு மீறி மோகமாய் வளர்ந்து உயிர்களும் பலியாகின்றன. ஆபத்தான் பகுதியில் பலர் செல்.ஃபி எடுக்கையில் விபத்துகளை சந்தித்துள்ளனர். பலர் உயிரிழந்திருக்கின்றனர். அப்படிப்பட்ட சம்பவம் மும்பையில் நடந்துள்ளது.

மும்பையில் வசிக்கும் ஹன்சா சோனி (50) என்றும் அவர் மருமகள் ரித்தி பிச்சாடியா (22) ஆகியோர் பெராகாட்டை சுற்றி பார்க்க சென்றனர். ஹோட்டலில் தங்கிய அவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை மாலை புதிய பெராகாட்டை பார்வையிட முடிவு அங்கு சென்றனர். அப்போது இருவரும் பாறையில் நின்று செல்.ஃபி எடுக்க முயற்சித்தனர்.

அந்த சமயத்தில் எதிர்பாராதவிதமாக ஹன்சா, நர்மதா ஆற்றில் விழுந்தார். அவரை காப்பாற்றுவதற்காக ரித்தி நீரில் குதித்தார். ஆனால் பலத்த நீரோட்டத்தில் இருவரும் நர்மதா ஆற்றில் அடித்து செல்லப்பட்டனர். இதுகுறித்து, பார்கி பகுதியின் நகரக் காவல் கண்காணிப்பாளர் (சிஎஸ்பி) பிரியங்கா சுக்லா கூறுகையில், "மும்பையில் வசிக்கும் சோனி குடும்பத்தினர் பெராகாட்டைப் பார்வையிட வந்திருந்தனர். அவர்கள் அருகில் உள்ள ஹோட்டலில் தங்கினர். வெள்ளிக்கிழமை மாலை, அவர்கள் புதிய பெராகாட்டைப் பார்வையிட முடிவு செய்தனர். ஹன்சா சோனி மற்றும் அவரது மருமகள் ரித்தி பிச்சாடியா ஆகியோர் பாறையில் நின்று செல்.ஃபி எடுத்து கொண்டிருந்தனர். ஹன்சா தனது கட்டுப்பாட்டை இழந்து நர்மதா ஆற்றில் விழுந்தார். அவளை காப்பாற்ற மருமகளும் குதித்தார். துரதிர்ஷ்டவசமாக இருவரும் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டனர். உள்ளூர் நீச்சல் வீரர்கள் உதவியுடன் தேடுதலில், வெள்ளிக்கிழமை மாலை ஹன்சா சோனியின் சடலமும், ரித்தியின் சடலம் சனிக்கிழமையும் கண்டெடுக்கப்பட்டது. சனிக்கிழமை பிரேதப் பரிசோதனையின் பின்னர் சடலங்கள் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது" என்றார்.

முன்னதாக 2017 ஆம் ஆண்டு, பெராகாட்டில் செல்.ஃபி எடுக்கும்போது ஒரு சிறுவன் ஆற்றில் தவறி விழுந்தான். அவனைக் காப்பாற்றும் முயற்சியில், அவனது சகோதரி ஆற்றில் குதித்து இறந்தார். அந்த இடத்தில் செல்.ஃபி எடுக்க தடை விதித்து எச்சரிக்கை பலகையை வைத்த மாவட்ட நிர்வாகம், மக்களின் உயிரைக் காப்பாற்ற டைவர்களையும் நியமித்தது. இருப்பினும் இதுபோன்ற அசம்பாவிதங்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன.



# தமிழ்நாடு திருச்சியில் நடைபெற்ற இனிய நந்தவனம் வெள்ளிவிழாவும் நூல் வெளியீடுகளும்

தமிழ்நாடு திருச்சியிலிருந்து 25 ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கும் "இனிய நந்தவனம்" மாத இதழின் 25ஆம் ஆண்டு விழா 10-01-2022 அன்று சிறப்பாக நடைபெற்றது. அவ்வமயம் "இனிய நந்தவனம் வெள்ளிவிழா மலர்" மற்றும் அதன் ஆசிரியர் திரு. நந்தவனம் சந்திரசேகரன் எழுதிய "சுகமாய் ஒரு ஞானம்", "இளவேனிற் காலத்து உரையாடல்கள்" என்ற இரு நூல்களும் வெளியிடப்பட்டன.

மேலும் கவிஞர் பா.தென்றல் எழுதிய "வானவில்லும் வண்ணத்துப்பூச்சிகளும்" என்ற நூலும் வெளியிடப்பட்டது. விழாவிற்குத் தலைமை தாங்கிய வி.ஜி.பி. ஹவுசிங் பிரைவேட் லிமிடெட், திருச்சி கிளையின் துணைத்தலைவர் திரு. இரா. தங்கையா நூலை வெளியிட, இலங்கையிலிருந்து வருகை புரிந்து விழாவிற்கு முன்னிலை வகித்த இலக்கியப் புரவலர் திரு.ஹாசிம் உமர் நூலின் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

லயன் டாக்டர் அச்சர் சிங், நிறுவனர், ஆசியா ஸ்டீல், திருச்சி மற்றும் முனைவர் கலையமுதன், மனிதவள மேம்பாட்டுப் பயிற்சியாளர், சேலம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். பாட்சா பிரியாணி சென்டர் உரிமையாளர் அபூபக்கர் சித்திக், கவிஞர் கவி.முருக பாரதி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். புலவர். தியாக சாந்தன் வாழ்த்துக்கவிதை வாசித்தார்.

விழாவில் நந்தவனம் பவுண்டேஷன் மூலம் "வெற்றித் தமிழன் விருது", "நம்பிக்கை நாயகன் விருது" மற்றும் "இதழியல் மாமணி விருது" ஆகியவை வழங்கப்பட்டன. கல்வெட்டு பேசுகிறது இதழாசிரியர் கவிஞர் சொர்ண பாரதி, முனைவர் மு. இரா. ஸ்ரீரோகினி, அறம் கிருஷ்ணன் ஆகியோர் ஏற்புரை வழங்கினர்.

முன்னதாக, இனிய நந்தவனம் மாத இதழ் ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரன் வரவேற்புரை வழங்க, இணைஆசிரியர் பா.தென்றல் நோக்க உரையாற்ற, முனைவர். இளவரசி முருகவேல் நிகழ்ச்சியினைச் சிறப்பாகத் தொகுத்து அளித்தார். கலாநிதி வே.த.யோகநாதன் நன்றியுரை கூறினார்.






DEBT FREE CREDIT SOLUTION

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்
  We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money
- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்
  We shield you from your creditors and offer you a guranteed protection
- கடன் கொடுத்தவர்களின் அச்சுறுத்தல்கள், சட்ட நடவடிக்கைகளிலிருந்து பாதுகாப்பு
  We package a custom solution to protect all your assets including your hard earned property, vehicle, insurance, RRSP, TFSA, RESP, Shares
- உங்கள் சேமிப்பு, சொத்து, வாகனம், முதலீடுகள் பாதுகாப்பிற்கு உரிய வழிமுறை செய்தல்
  We arrange a sensible Repayment Plan minimizing potential lossesand avoiding bankruptcy

DF CREDIT SOLUTION
SETTLEMENT | CONSUMER PROPOSAL | BANKRUPTCY

Head Office
10 Milner, Business court, Suite 334
Toronto, ON M1B 3C6

416. 834. 7227
www.dfcstoday.ca
info@dfcs.today

Branches
Mississauga | Vaughan



ELANKEERAN THAN
Certified Insolvency Counsellor

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தமிழர் தாயகமான வடகிழக்கு இலங்கை விற்பனைக்கு இல்லை

## பைடனுக்கான தமிழர்களின் அமைப்பு சீன அதிபர் ஜி ஜின்பிங்க்கு கடிதம் அனுப்பியது

ஜனவரி 12, 2022.

Re: தமிழர் தாயகமான வடகிழக்கு இலங்கை விற்பனைக்கு இல்லை

அன்புள்ள திரு. சீனக் குடியரசின் ஜனாதிபதி மற்றும் வெளியுறவு அமைச்சர்:

தமிழர் பகுதியில் எந்த நிலமும் விற்பனைக்கு இல்லை என்பதைத் தெரிவிக்கவே தமிழர்களாகிய நாம் இந்தக் கடிதத்தை எழுதுகிறோம்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மூலம், இலங்கை, சர்வதேச அமைப்புகள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை ஆகியவை தீவின் வடகிழக்கு பகுதி தமிழர்களின் தாயகம் என்பதை ஒப்புக்கொண்டன. இலங்கையின் வடகிழக்கில் நில அதிகாரம் அப்பகுதி மக்களின் பூர்வீகமான தமிழர்களுக்கு சொந்தமானது என்பதை இந்த ஒப்பந்தம் அங்கீகரிக்கிறது.

இதை மூன்று தசாப்தங்களுக்கு முன்பே ஐ.நா.வில் கூறப்பட்டது.

எனவே, இலங்கை வடக்கு கிழக்கில் ஏதேனும் காணிகளை விற்பனை செய்ய முற்பட்டால், இது சட்டத்திற்கு புறம்பான செயலாகும், இந்த பிரதேசங்களை யாரும் வாங்க வேண்டாம். இது சட்டவிரோதமானது.


தமிழர்களின் நிலத்தை வாங்க சீனர்கள் $5.5 பில்லியன் செலவழித்தால், சீனர்கள் தங்கள் பணத்தையும், தமிழர்களின் நிலத்தின் "உரிமை" என்று சொல்லப்படுவதையும் இழக்க நேரிடும்.

யுத்தம் மற்றும் சிங்களவர்களால் தமிழர்கள் மீதான இனப்படுகொலை தொடர்வதால், தமிழர்களின் அவலநிலை குறித்து சர்வதேச அளவில் விழிப்புணர்வு அதிகரித்து வருவதுடன், சுதந்திரமான இறையாண்மையுள்ள தமிழ் தேசியத்திற்கான தீர்மானம் விரைவில் எட்டப்படும்.

தமிழர் தாயகத்தில் இருந்து சீனா நிலங்களை எடுப்பது தமிழர்களை சீனர்களிடம் அதிருப்தி அடையச் செய்யும். ஐ.நா உடன்படிக்கையை மீறுவதைத் மட்டுமல்லாமல், இந்த ஆக்கிரமிப்பு நகர்வுகள் நாகரீகமற்றவை மற்றும் தமிழர் அங்கீகாரம் இல்லாமல் கௌரவிக்கப்படாது.

தமிழர்களுக்கு எதிரான இலங்கையின் இனப்படுகொலைப் போருக்கு உதவுவதற்காக 2009 இல் சிங்களர்களுக்கு ஆயுதங்களை வழங்கியதற்காக சீனர்கள் மீது தமிழர்கள் ஏற்கனவே கோபமடைந்தனர். இந்தப் போரில் 246,000 தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

தமிழர்களின் துன்பங்களுக்கோ அல்லது நாம் எதிர்கொண்ட துஂ'பிரயோகங்கள் மற்றும் அநீதிகளுக்கோ சீனர்கள் மேலும் பங்களிக்க மாட்டார்கள் என்று நம்புகிறோம்.



ஒற்றையாட்சியின் கீழ் சிங்களவர்களுடன் வாழ்வதில் தமிழர்கள் சோர்வடைந்துள்ளனர், தமிழர்கள் மீண்டும் இறையாண்மையை பெற விரும்புகிறார்கள். இலங்கையில் சிங்களவர்களிடமிருந்து தமிழ் பிரிவினையை ஆதரிப்பது குறித்து அமெரிக்காவும் பொருளாதார பலம் வாய்ந்த நாடுகளும் தீவிரமாக பரிசீலித்து வருகின்றன.

எனவே, தமிழர் தாயகத்தில் சீனர்கள் எந்தக் காணிகளையும் கொள்வனவு செய்வது அரசியல் ரீதியாக சட்டவிரோதமானது மட்டுமல்ல, புத்திசாலித்தனமான முதலீடும் அல்ல் அந்த நிலங்கள் தமிழர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்படும்போது அது வீணாகும் பணம் என்பது நிரூபிக்கப்படும்.

ஐ.நா.வில் தமிழர்களுக்கான அரசியல் தீர்மானத்தை சீனர்கள் தடுக்க முற்படலாம், ஆனால் கொசோவோவின் பிரிவினை ஐ.நா.வால் வழங்கப்படவில்லை, மாறாக அமெரிக்காவும் நேட்டோவும் ஆதரவளித்தது என்பதை சீனா நினைவில் கொள்ள வேண்டும்.

மேலும் தமிழர்களின் சுதந்திரத்திற்கு தடையாக சீன இருப்பது மேற்கத்திய உலகத்துடன் பதட்டத்தை அதிகரிக்கும். தமிழ் பிரிவினையானது இப்பகுதிக்கு நல்லது என்றும் அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் நன்மை பயக்கும் என்றும் அமெரிக்க அரசாங்கம் கருதுகிறது என்பதால், அமெரிக்கா விரைவில் தமிழீழத்தை அங்கீகரிக்கும்.

எனவே தமிழர் தாயக நிலத்தின் மீதான அக்கறையை சீன அரசு கைவிட்டு, அந்த நிலத்தை உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி.
உண்மையுள்ள,

**பைடனுக்கான தமிழர்கள்**

# வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள திருமுருகண்டி இந்து வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கப்பட்டது





கடந்த கால யுத்த நிலைமைகளினால் பாதிக்கப்பட்ட மற்றும் தற்போதைய Covid-19 காரணமாக வாழ்வாதாரம்பாதிக்கப்பட்ட பொருளாதார ரீதியாக பின்தங்கிய குடும்பங்களில் இருந்து முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள திரு முறிகண்டி இந்து வித்தியாலயத்தில் கல்வி கற்று வரும் 100 மாணவர்களுக்கு அவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் முகமாக கற்றல் உபகரணங்களை தந்துதவுமாறு பாடசாலை அதிபரினால் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்திடம் கடிதம்மூலம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க மாணவரகளுக்கு தலா ரூபா 800 பெறுமதியில் 100 மாணவர்களுக்கு ரூபா 80,000 பெறுமதியான அப்பியாச கொப்பிகள் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தால் அன்பளிப்பாக வழங்கி வைக்கபட்டுள்ளது.

இன் நிகழ்வில் மு/திருமுறிகண்டி இந்து வித்தியால,யம், அதிபர் திரு. இரத்தினதுரை - பேரின்ப நாதன், மாணவர்களுக்கான அப்பியாச கொப்பிகளை வழங்கி வைத்தார்

# வெலிக்கடை சிறைச்சாலை முன்னாள் ஆணையாளர் எமில் ரஞ்சனுக்கு மரண தண்டனை

2012 ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலையில் எட்டு கைதிகள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸ் பரிசோதகர் நியோமல் ரங்கஜீவ மற்றும் முன்னாள் சிறைச்சாலைகள் ஆணையாளர் எமில் ரஞ்சன் லமாஹேவா ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பு நேற்று அறிவிக்கப்பட்டது.

இதன்படி, களு துஷார என்ற கைதியை கடத்திச் சென்று கொலை செய்த குற்றச்சாட்டில் முன்னாள் சிறைச்சாலைகள் ஆணையாளர் எமில் ரஞ்சன் லமாஹேவாவுக்கு மரண தண்டனை விதிக்க கொழும்பு விசேட மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இதேவேளை, பொலிஸ் பரிசோதகர் நியோமல் ரங்கஜீவவிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டுக்கள் எதுவும் நிரூபிக்கப்படாததால் அவர் குற்றமற்றவர் என தெரிவிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார்.

குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக 33 குற்றச்சாட்டுகளின் கீழ் சட்டமா அதிபர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.



# கழுத்தை நெறிக்கும் கடன்கள்–மூச்சுவிட முடியாத இலங்கை

**- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் - லண்டன்)**



உதயன் வாசகர்கள் அனைவருக்கும் உளம் கனிந்த தைத்திருநாள் பொங்கல் நல்வாழ்த்துக்கள்.

தேன் இல்லாத ஜாடியில் குரங்கு கையை நுழைக்காது என்று ஒரு செலவடை உண்டு. அது சீனாவுக்கும் பொருந்தும். அப்படி தேனுடன் சேர்ந்து 42 உலக ஜாடிகளை (நாடுகளை) தேனுடன் சேர்ந்து சீனா அபகரித்துள்ளது என்று பன்னாட்டு அமைப்பு ஒன்று வெளியிட்டுள்ள ஆய்வறிக்கை கவலையளிப்பது மட்டுமின்றி மிகவும் அச்சமளிப்பதாகவும் உள்ளது.

அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் எய்ட்டேட்டா எனும் ஆய்வு நிறுவனம் அண்மையில் வெளியிட்டுள்ள தகவலின்படி உலகின் 165 நாடுகள் கூட்டாக $385 billion (பில்லியன் டாலர்கள்) கடன்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளது. இதில் 42 நாடுகள் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த வழி தெரியாமல் கண்முழிப் பிதுங்கி நிற்கின்றன. இந்த 42 நாடுகள் குறைந்த மற்றும் இடைநிலை வருவாய் உள்ள நாடுகள். சுலபமாகப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால் இலங்கை, உகாண்டா, ஜிம்பாப்வே, ஜிபோட்டி போன்ற நாடுகளும் லாவோஸ், பர்மா போன்ற ஆசிய நாடுகளும் உள்ளன. இவை அனைத்தும் தொடர்ந்து கடன் வாங்கியுள்ளன. அதாவது வாங்கிய கடனுக்கு வட்டியைச் செலுத்த மற்றொரு கடன் வாங்குவது, பிறகு அதற்கொரு கடன் இப்படி வட்டிக்கு மேல் வட்டிக்கு கடன் என்று வாங்கி கடைசியில் அடமான சொத்தை தனக்கு உரிமையாக்கிக் கொள்ளும் நவகாலனித்துவ நாடுபிடிக்கும் முறையை சீனா கையாண்டு வருகிறது என்று கடன் வாங்கிய நாடுகளும், மேற்குலக நாடுகளும் கண்டனமும் கவலையும் ஒருசேர வெளியிட்டுள்ளன.

சீன அதிபர் ஷீ ஜின்பிங்கின் ஆட்சிக் காலத்தில் பெல்ட் அண்ட் ரோட் இனிரீயேடிவ் என்றழைக்கப்படும் சாலை மூலமாக ஒரு வட்டமான பாதையை அமைப்பது அல்லது ஒரு பகுதியை சுற்றி வளைப்பது என்று பொருட்படும். இதை அவர் மிகவும் தீவிரமாக முன்னெடுக்கிறார்.

"சீனா மிகவும் விரைவாகக் குறைந்த வருவாய் மற்றும் மத்திய வருவாய் கொண்ட நாடுகளுக்கான "கந்துவட்டிக்காரனாக" மாறியுள்ளது என்பதே உண்மை என்று அந்த ஆய்வு நிறுவனம் கூறியுள்ளது. அதிகாரபூர்வமாக வளர்ச்சிப் பணிகளுக்கு அளிக்கும் உதவியை தான் அளிக்கும் கடன் அல்லது வலிந்து தன்னிடம் வாங்கும் கடனுடன் சீனா இணைந்து சிறிய நாடுகளை தனது கிடுக்கிப்பிடியில் கொண்டுவந்துள்ளது என்றும் குற்றச்சாட்டு வைக்கப்பட்டுள்ளது.



வாங்கிய கடனை வட்டியுடன் நேரத்திற்கு திருப்பிக் கொடுக்க வேண்டும் அல்லது சொத்தை எழுதிக் கொடுக்க வேண்டும் என்கிற நிலைப்பாடு தான் சீனா அல்லது சீன நிறுவனங்களின் நிலைப்பாடாக உள்ளது.

இதன் பின்புலத்திலேயே சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி இன் இலங்கை விஜயத்தைப் பார்க்க வேண்டியுள்ளது. மிகக் கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கி மீள்வதற்கு வழி தெரியாமல் அல்லாடும் இலங்கைக்கு, சீன அமைச்சரின் விஜயம் மேலோட்டமாகப் பார்க்கும் போது ஏதோ ஆதரவளிப்பது அல்லது ஆறுதல் கூறுவது போலிருந்தாலும் அதற்குப் பின்னர் ஆழமான நகர்வுகள் உள்ளன. இம்முறை தனது பயணத்தின் போது வாங் யி தம்மிடம் வாங்கிய கடன்களுக்கு இலங்கையின் பதில் என்ன என்பதை அறிந்து கொள்வதற்காகவே அமைந்தது என்று உள்தகவல்கள் தெரிவிக்கின்றன.

விமான நிலையத்தில் "பட்டத்து இளவரசர்" நாமல் ராஜபக்ச அவரை வரவேற்றதும் பின்னர் இலங்கை - சீன உறவுகள் ஏற்பட்டு 65 ஆண்டுகள் ஆவதை குறிக்கும் வகையில் வைபவ ரீதியாக சில நிகழ்வுகள் இடம்பெற்றன. உள்ளூர் ஊடகங்கள் அவரது வருகை மற்றும் அரசின் உபசரிப்புகளை "அவர் ஊதுவதும் இவர் ஆடுவதும்" என்ற வகையிலேயே இருந்தது. ஊடக அறத்தை மறந்து தமது இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்காக இலங்கை கடன் நெருக்கடியை மூடி மறைத்து அவரது விஜயத்தையும், அவர் சென்று பார்வையிட்ட இடங்கள், அவர் இலங்கை அரச தலைவர்களைச் சந்தித்தது மற்றும் இதர முக்கியஸ்தர்கள் அவரை சந்தித்தது ஆகிய செய்திகளை மட்டுமே வெளியிட்டன. ஆனால் வாங்கிய கடன்களுக்கு வாய்தா கேட்கவே இந்த சந்தர்ப்பத்தை இலங்கை பயன்படுத்தியது.

"ஐயா சாமி வாங்கிய கடனைக் கேட்காதீர்கள், மேலும் அவகாசம் கொடுங்கள், முடிந்தால் கடனை தள்ளுபடி செய்துவிடுங்கள்", பிறகு நாங்கள் புதிதாகக் கடன் வாங்க வசதியாக இருக்குமென்று ராஜபக்சக்கள் கதறியதாகச் சீன தரப்பை மேற்கோள்காட்டி அலரி மாளிகை தரப்பிலிருந்து தகவல் கசிந்துள்ளது. நாட்டில் ஏற்கனவே உணவு மற்றும் மின் தட்டுப்பாட்டு நிலவுகிறது, மக்களுக்கு எரிவாயு கிடைப்பதில்லை, கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக சுற்றுலாத்துறையில் ஏற்பட்டுள்ள பாரிய வீழ்ச்சி ஆகியவை காரணமாக கடும் நெருக்கடிகளும் அதற்குத் தீர்வு காண்பதிலும் கடும் சவால்களை இலங்கை அரசு எதிர்கொள்கிறது.

"நாங்கள் செலுத்த வேண்டிய கடன் தொகைக்கான காலக்கெடுவை மாற்றியமைத்து ஒத்திவைத்தால், பெருந்தொற்று காரணமாக ஏற்பட்டுள்ள நெருக்கடியான காலத்தில் எமக்கு அது பெரிய உதவியாக இருக்கும்" என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச சீன வெளியுறவு அமைச்சரிடம் வேண்டியுள்ளார். இதை அவரது அலுவலகமே அதிகாரபூர்வமாக தெரிவித்துள்ளது.



இலங்கையில் கையிருப்பிலுள்ள அந்நியச் செலாவணி விரைவாகக் கரைந்துவரும் நிலையில் ராஜபக்ச அரசாங்கம் வாங்கிய கடன்களைச் செலுத்த தவறிவிடும் என்று சர்வதேச தரமதிப்பீட்டு முகமைகள் எச்சரிக்கை விடுத்துள்ள நிலையிலேயே, இலங்கைக்கு மிக அதிகளவில் கடன்களை வழங்கியுள்ள சீனாவின் வெளியுறவு அமைச்சரின் அமைந்துள்ளது.

மத்திய வங்கியிடமிருக்கும் அந்நியச் செலாவணி பெருமளவு குறைந்துவிட்டதால் அவசியமான பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு, உணவுப் பொருட்களை பெற்றுக்கொள்வதிலும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டின் இறுதியில் இலங்கையிடமிருந்த அந்நியச் செலாவணி 1.5 பில்லியன் டாலருக்கும் கீழ் குறைந்துவிட்டது. அந்த தொகையின் மூலம் ஒரு மாதம் மட்டுமே இறக்குமதிகளைச் செய்ய முடியும். கையிலிருப்பிலிருந்த அந்நியச் செலாவணி குறைந்ததன் காரணமாக, அனல் மின்நிலையங்களுக்குத் தேவையான எரிபொருளை இறக்குமதி செய்ய முடியாமல் போனதால் நாடு முழுவதும் கடும் மின் தட்டுப்பாடு ஏற்பட்டு அது பகிர்ந்தளிக்கப்படும் நிலையை தோற்றுவித்தது.

கடந்த நிதியாண்டின் முடிவில் (ஏப்ரல் 2021) இலங்கைக்கு சுமார் 35 பில்லியன் டாலர்கள் வெளிநாட்டுக் கடன் உள்ளது, அதில் 10% சீனாவுக்குச் செலுத்த வேண்டியது என்று தரவுகள் காட்டுகின்றன. அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் மத்திய வங்கி திருப்பிச் செலுத்த வேண்டிய கடனையும் சேர்ந்தால் இந்த தொகை மேலும் மிகவும் அதிகமாக இருக்கக் கூடும்.




இலங்கை சீனாவிடமிருந்து உட்கட்டமைப்புகளை ஏற்படுத்துவதற்காக மிகப்பெரும் தொகையைக் கடனாகப் பெற்றுள்ளது. அப்படியாகத் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்ட பெரும்பாலான கட்டமைப்பு வசதிகள் "வெள்ளை யானைகளாகவே" இருந்துள்ளன. இதற்கு நல்லதொரு உதாரணம் "போர் வெற்றி நாயகர்" மஹிந்த ராஜபக்ச பெயரில் அம்பாந்தோட்டை- மத்தளையில் அமைக்கப்பட்ட விமான நிலையமாகும். சீன நிதியுதவியுடன் கட்டப்பட்டு 2013 ஆம் ஆண்டில் பெரும் விளம்பரம் மற்றும் மிகைப்படுத்தப்பட்ட பரபரப்பிற்கிடையே இந்த விமான நிலையம் திறக்கப்பட்டது. 210 மில்லியன் டாலர் செலவில் கட்டப்பட்ட இந்த விமான நிலையத்திற்கு சீனாவிடமிருந்து 190 மில்லியன் டாலர் கடனாகப் பெறப்பட்டது. அந்தளவுக்கு பெருந்தொகையை முதலீடு செய்து கட்டப்பட்ட விமான நிலையம் முழுமையான பயன்பாட்டிற்கு வரவுமில்லை வருமானம் ஈட்டவுமில்லை. ஒரு கட்டத்தில் தானியக் களஞ்சியமாகப் பயன்படுத்தப்படும் அவல நிலையும் ஏற்பட்டது. அதே போன்று தென்னிலங்கையிலுள்ள அம்பாந்தோட்டை துறைமுகமும் கடன் சுமையால் 99 ஆண்டுக் காலத்திற்கு சீனாவிற்கு குத்தகைக்கு அளிக்கப்பட்டது. சுமார் 15,000 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்ட அந்த துறைமுகத்திற்கு சீனாவிடமிருந்து 1.5 பில்லியன் டாலர் கடனாகப் பெறப்பட்டிருந்தது. கடனைக் கொடுத்து பின்னர் அபகரிப்பதே தொடக்கத்திலிருந்து சீனாவின் நோக்கமாக இருந்தது.

தேவையில்லாமல் உட்கட்டமைப்பு என்கிற பெயரில் ஏராளமான முதலீடுகளைச் சீனாவிடமிருந்து கடனாகப் பெறப்பட்டது. அதற்காக அவரவர்களுக்கு உரிய "கமிஷன் தொகையும்" கிடைத்தது என்கிற குற்றச்சாட்டும் நிலவுகிறது.

அம்பாந்தோட்டை துறைமுகம் கிழக்கு-மேற்கு கடல்வழி பாதை மற்றும் வர்த்தகத்தில் அமைந்துள்ளது என்றும், அதை சீனாவிற்கு நீண்டகால அடிப்படையில் குத்தகைக்கு அளிப்பது இந்தியப் பெருங்கடலில் சீனா கால்பதிக்க வழிசெய்துவிடும், அதன் மூலம் அந்தப் பிராந்தியத்தின் பாதுகாப்பிற்கு குந்தகமாக அமையும் என்றும், சீனா அந்த துறைமுகத்தை தமது இராணுவ நடவடிக்கைக்காக பயன்படுத்தும் என்று அமெரிக்காவும் இந்தியாவும் ஏற்கனவே எச்சரிக்கை விடுத்திருந்தன. அதே நிலைப்பாட்டில் தொடர்ந்தும் உள்ளன.

இன்று இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு முன்னர் போர்ச் சூழல் என்ற போர்வையிலும், பின்னர் வளர்ச்சி என்ற மேற்பூச்சைக் காரணம் காட்டி தொடர்ச்சியாக கடன்கள் பெறப்பட்டன. அதில் பெரும்பாலும் சீனாவிடமிருந்தே பெறப்பட்டன. வாங்கிய கடனை உரிய நேரத்தில் செலுத்த இலங்கைக்கு போதிய வல்லமை இல்லையென்று பொருளாதார வல்லுநர்கள், கேந்திர விவகாரங்களுக்கான ஆய்வாளர்கள் வலியுறுத்தி வந்துள்ளனர்.




"இலங்கைக்கு சீனா தொடர்ந்து உதவி செய்யும்" என்று சீன வெளியுறவு அமைச்சக பேச்சாளர் கூறியுள்ளதில் ஆழமான அர்த்தம் உள்ளது. அதாவது தொடர்ந்து நீங்கள் கடன் பெறலாம், ஒரு கட்டத்தில் வாங்கிய கடனிற்காக நாங்கள் சொத்துக்களை அபகரிக்கத் தயங்க மாட்டோம் என்பதே அதன் பொருள்.

இதனிடையே சீனாவிடம் "அரசியை நன்கொடையாக வேண்டியுள்ளோம்" என்று இலங்கையின் வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன இரு தினங்களுக்கு முன்னர் ஊடக சந்திப்பு ஒன்றில் கூறியுள்ளார்.

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

பொருள்:

முன்கூட்டியே எச்சரிக்கையாக இருந்து ஒரு தவறான செயலைத் தவிர்த்துக் கொள்ளாதவருடைய வாழ்க்கையானது நெருப்பின் முன்னால் உள்ள வைக்கோல் பொதி போல கருகிவிடும்.


# தமிழ்ப் புத்தாண்டு சித்திரையா? தையா?

- கனடா நக்கீரன்

தமிழர்கள் கொண்டாடும் விழாக்களில் மூன்று விழாக்கள் முக்கியமானவை. தைப்பொங்கல், சித்திரைப் புத்தாண்டு மற்றது தீபாவளி. இந்த மூன்றோடு ஆங்கிலப் புத்தாண்டும் இன்று சேர்ந்து கொண்டது. இவற்றில் தைப்பொங்கல் விழாவே மிகச் உலக-ளாவிய அளவில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

நெல் விதைத்ததில் இருந்து அறுவடை வரை ஒரு உழவனுக்கு தோள் கொடுப்பவர்கள் மூன்று வகையினர். ஒன்று அவனது கால் நடை. இரண்டு பொய்யா வானம் பொழியும் மழை. மூன்றாவது எல்லா உயிரினங்களுக்கும் ஆதாரமாக விளங்கும் ஞாயிறு.

பண்டைக் காலத்தில் ஞாயிறு வணக்கம் எல்லாப் பண்பாடுகளிலும் காணப்பட்டது. பண்டைய எகிப்தில் சூரியக் கடவுளான இரா வழிபாடு புகழுடன் இருந்தது. ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான




சிலப்பதிகாரத்தில் இளங்கோ கடவுள் வாழ்த்துக்குப் பதில் இயற்கையை வாழ்த்துகிறார்.

திங்களைப் போற்றுதும்! திங்களைப் போற்றுதும்!

ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்!

மா மழை போற்றுதும்! மா மழை போற்றுதும்! ( புகார் காண்டம் - மங்கல வாழ்த்து)

பொங்கல் விழா எப்போது தொடங்கப்பட்டது என்பதற்கு இலக்கியச் சான்றுகள் இல்லை. ஆனால் பொங்கல் விழா மதம் கடந்து தமிழர் பண்பாட்டில் முக்கிய இடம் பிடித்துள்ளது என்பது மட்டும் உண்மை. சித்திரைப் புத்தாண்டும் தீபாவளியும் வைதீக மதத்தோடு, புராண, இதிகாசங்களோடு தொடர்புடையவை.

சித்திரை தமிழரின் மரபார்ந்த புத்தாண்டு அல்ல என்ற மாற்றுக்கருத்து சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றியது. இக்கருத்து வலுப்பெற முக்கிய காரணம், தை முதலாம் நாள் தமிழரின் புத்தாண்டின் தொடக்கமாகவும் அதனை திருவள்ளுவர் பெயரால் அழைக்கப்பட வேண்டும் எனவும் திருவள்ளுவர் பிறந்த நாள் கிமு 31 ஆண்டென்றும் திருவள்ளுவர் பிறந்த நாளை தை இரண்டில் கொண்டாடப்பட வேண்டும் எனத் தமிழறிஞர்கள் மறைமலை அடிகளது தலைமையில் கூடித் தீர்மானம் நிறைவேற்றியதாகும்.

அதுவரை நடைமுறையில் பிரபவ தொடங்கி அஷய ஈறாக இருந்த 60 ஆண்டுகள் சுழற்சி முறையிலான வட மொழிப் பெயர்களைக் கொண்ட ஆண்டுமுறை ஆகும். இது வரலாற்றைப் பதிவு செய்ய உதவாது. எனவே தமிழர்களுக்கு ஒரு தொடர் ஆண்டுமுறை வேண்டும் என்றும் அதுவும் பொதுமறை தந்த திருவள்ளுவர் பெயரில் இருக்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த மாற்றம் 1981 இல் நடந்த மதுரை உலகத்தமிழ் மாநாட்டில் உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இப்பின்னணியில், தை முதல்நாள்தான் தமிழ்ப் புத்தாண்டு என்றும், தை இரண்டாம் நாள் திருவள்ளுவர் பிறந்த நாள் என்றும் திமுக அரசு 2008 தை மாதம் 23 ஆம் நாள் அரசாணை பிறப்பித்தது. இது 2011இல் ஆட்சிக்கு வந்த அதிமுக அரசால் இரத்து செய்யப்பட்டு மீண்டும் சித்திரை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டாக அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்களுக்கும் அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களுக்கும் இடையில் பெரிய சொற்போரே நடந்தது. இருவரும் தங்களது வாதத்துக்கு இலக்கியங்களில் இருந்தும் வரலாற்றுக் குறிப்புகளிலிருந்தும் மேற்கோள் காட்டி வாதித்தார்கள். ஜெயலலிதாவின் வாதம் பின்வருமாறு இருந்தது.

சித்திரை மாதம் புத்தாண்டின் தொடக்கம் என்பது, வான நூலையும், பருவங்களின் சுழற்சியையும் அடிப்படையாகக் கொண்டது. பூமி, சூரியனை ஒரு முறை சுற்றி வர எடுக்கும் காலம் ஓர் ஆண்டு. சூரியன் பூமியின் நடுக்கோட்டில் மேட இராசியில் நுழையும் நாள் பத்தாண்டின் தொடக்கமாகக் கருதப்பட்டது.

சித்திரையில் துவங்கி, பங்குனி வரையிலான தமிழ் மாதத்தில், அம் மாதத்தின் பவுர்ணமி அன்று வரும் நட்சத்திரத்தின் பெயரே அம் மாதத்தின் பெயர். எடுத்துக்காட்டாக சித்திரை மாதம் பவுர்ணமியன்று சித்திரை நட்சத்திரம் வருவதால் அந்த மாதத்தின் பெயரே சித்திரை.

சோழர் கல்வெட்டுக்களிலும், கொங்கு பாண்டியர் கல்வெட்டுக்களிலும், 60 ஆண்டுகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டு உள்ளன. திண்ணிலை, மருப்பின் ஆடுதலை‘ என்று நக்கீரர் கூறியிருக்கிறார். ஆடு தலை என்ற சொல் மேட இராசியைக் குறிக்கிறது.

ஜெயலலிதாவின் வாதத்துக்கு பதிலளித்த கலைஞர் கருணாநி-தி “தை மாதத்தில் பௌர்ணமி “பூசம்” நட்சத்திரத்தில்தான் வருகி-றது. ஆனால் அந்த மாதத்திற்குப் பூசம் என்ற பெயர் உள்ளதா? மாசி மாதத்தில் பௌர்ணமி “மகம்” நட்சத்திரத்தில்தான் வருகிறது. ஆனால் அந்த மாதத்திற்கு மகம் என்று பெயர் இல்லையே? பங்குனி மாதத்தில் பௌர்ணமி “உத்திரம்” நட்சத்திரத்தில்தான் வரும். அந்த மாதத்திற்கு உத்திரம் என்று பெயர் இல்லை. 27 நட்சத்திரங்களில் சித்திரை, கார்த்திகை தவிர மற்ற பெயர்களில் மாதப் பெயர்கள் இல்லையே?” என கலைஞர் கருணாநிதி பதிலுக்கு வாதிட்டார்.

உண்மை என்னவென்றால் சங்க இலக்கியங்கள் எதிலும் சித்திரைதான் தமிழர்களது புத்தாண்டு என்றோ தைதான் தமிழர்களது புத்தாண்டு என்றோ குறிப்பிடப் படவில்லை.

தை தொடர்பான சங்க இலக்கிய வரிகள் எதுவும் தைமாத நீராட்டு விழாவொன்றைக் குறிப்பிடுகின்றனவே அன்றி, தை மாதத்தில் புத்தாண்டு பிறக்கிறது எனப் பாடவில்லையென்பது புலப்படுகிறது.

தமிழ்ப் புத்தாண்டு சித்திரையா? தையா? என்றால் இரண்டுக்கும் வானியல் அடிப்படை இருக்கிறது. சித்திரைப் புத்தாண்டுக்கு வானியல் அடிப்படை இருப்பது போல தைப் புத்தாண்டுக்கும் வானியல் அடிப்படை இருக்கிறது. சித்திரை 01 (ஏப்ரில் 14) அன்று சூரியன் மேட இராசிக்குள் நுழைகிறது. இதேபோல தை முதல் நாள் (சனவரி 14) சூரியன் தனது தென்திசைப் பயணத்தை (தட்சணாயம்) முடித்துக் கொண்டு வடதிசைப் பயணத்தை மகர இராசியில் தொடங்குகிறது. வட மொழியில் அதனை மகர சங்கராந்தி என அழைப்பர்.

சூரியன் மற்றும் நட்சத்திரம் இரண்டின் இயக்கத்தை அடைப்படையாகக் கொண்டு கணக்கிடுவதில் இரண்டு முக்கிய முறைமைகள் உண்டு.

(1) வெப்பமண்டல ஆண்டு

இந்த ஆண்டு 365 நாட்கள் 5 மணி 48 நிமிடங்கள் 46 வினாடிகள் கொண்டது. இது வெப்பமண்டல ஆண்டு அல்லது பருவங்களின் ஆண்டு என்றும் அழைக்கப்படுகிறது, இது இரண்டு சமவிரவு **(Equinox)** நிகழ்வுகளுக்கு இடையிலான நேரமா-கும் (சூரியன் வடக்கே நகரும் வான் நடுக்கோட்டை கடக்கும் தருணம்). புவியின் முன்னேகல் காரணமாக (பூமியின் சுழற்சியில் மெதுவாக தள்ளாட்டம் சூரியன் சந்திரனின் ஈர்ப்பு விசையின் விளைவு), சூரிய ஆண்டு நட்சத்திர ஆண்டை விட 365 நாட்கள் 6 மணி 9 நிமிடங்கள் 10 வினாடிகள் குறைவானது.

(2) நட்சத்திர ஆண்டு

கிரகங்கள், சூரியன் மற்றும் சந்திரன்களின் இயக்கங்களைக் கண்டறிய தொலைதூர நட்சத்திரங்களை நங்கூரமாக அல்லது குறிப்பாகப் பயன்படுத்துவதே நட்சத்திர ஆண்டாகும். நட்சத்திர ஆண்டில் 365 நாட்கள், 5 மணி, 48 மணித்துளிகள், 45.51 வின-ாடிகள் (365.242189) கொண்டது ஆகும். இதனால் ஒவ்வொரு ஆண்டும் யூலியன் ஆண்டு 10.8 வினா-டிகள் நீண்டுவிடுகிறது.

தொல்காப்பியர் ஒரு ஆண்டுக்கான ஆறு பெரும்பொழுதுகளைச் சொல்லும்போது ஆவணி மாதமாகிய கார்காலத்தையே தொடக்கமாகக் குறிப்பிடுகிறார். அதன்பிறகே கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் காலங்களை வரிசைப்படுத்துகிறார். மேலும் வைகறை, காலை, நண்பகல், ஏற்பாடு, மாலை. யாமம் என்பதே ஒரு நாளில் அடங்கிய ஆறு சிறுபொழுதாகும். ஒரு நாள் 60 நாளிகை கொண்டது என்று கணக்கிட்டனர். ஒரு நாளிகை 24 மணித்துளி ஆகும். இது 2300 ஆண்டுகளுக்கு முன் தமிழர்கள் கார்காலத் தொடக்கமாகிய ஆவணி மாதத்தையே ஆண்டின் முதல் மாதமாகக் கொண்டனர் என்பதை உணர்த்துகிறது.

ஆனால் இன்று தொல்காப்பியர் கார் காலம் (ஆவணி, புரட்டாதி) எனக் குறிப்பிட்ட காலம் ஒரு மாதம் முன்னரே ஆடியில் தொடங்கிவிடுகிறது. புவி, சூரியன் மற்றும் சந்திரன் இரண்டின் ஈர்ப்பு விசை காரணமாக தனது அச்சில் மேற்கு நோக்கி 72.5 ஆண்டுக்கு ஒருமுறை ஒரு பாகை (ஒரு நாள்) பின்நோக்கி நகர்ந்துவிடுகிறது. தொல்காப்பியர் காலம் கிமு 300 ஆண்டு என்று எடுத்துக் கொண்டால் சூரியன் இன்று 32 பாகை (32 ) நாள் மேற்குப் பக்கம் நகர்ந்து விட்டது.

காலத்தை இவ்வளவு நுணுக்கமாகக் கணக்கிட்ட புலவர்கள், இலக்கண ஆசிரியர்கள், அறிஞர்கள் தமிழர்களுக்கென ஒரு பொதுவான தொ-டர் ஆண்டை வகுக்கவில்லை. அதனால் அரசர்கள், புலவர்கள், சான்றோர்கள் பிறப்பு ஆண்டு, மறைவு ஆண்டு இவற்றை ஒரு தொடர் ஆண்டோடு தொடர்பு படுத்தி வரலாற்றைப் பதிவு செய்ய முடியாமல் போய்விட்டது.

உரோம பேரரசர் யூலியஸ் சீசர் படுகொ-லை செய்யப்பட்ட நாள் கிமு மார்ச் 15, 44 என்று துல்லியமாக உரோம வரலாற்று ஆசிரியர்கள் பதிவு செய்திருக்கிறார்கள். மாறாக சங்க கால அரசர்கள், புலவர்கள் மட்டுமல்ல பிற்கால அரசர்கள், புலவர்கள் வாழ்ந்து மறைந்த காலம் சரியாக பதியப்படவில்லை. அரசர்கள் முடிசூடிக் கொண்ட ஆண்டை அடிப்படையாகக் கொண்டே அந்தந்த அரசர் 25 ஆண்டுகள், 50 ஆண்டுகள் ஆட்சி செய்தனர் எனக் குறிப்பிட்டார்கள். புலவர்களைப் பொறுத்தளவில், திருவள்ளுவர் உட்பட, அவர்கள் பிறந்து மறைந்த ஆண்டுபற்றிய எந்தக் குறிப்பும் இல்லை. மேலே கூறியவாறு தமி-ழர் வரலாற்றில் காலக் குழப்பம் இருப்பதற்கு தொடர் ஆண்டு இல்லாதது முக்கிய காரணமாகும். இருக்கிற 60 ஆண்டுகளும் சுழற்சி முறையில் வருவது மேலும் குழப்பத்தை உருவாக்கவே உதவியது. இதனால் வரலாற்று நிகழ்ச்சிகளை 60 ஆண்டுகளுக்கு மேல் கணக்கிட முடியவில்லை. ஒருவர் பிரபவ ஆண்டில் பிறந்தார் என்றால் எந்தப் பிரபவ ஆண்டு என்பது தெரியாமல் இருந்தது. ஆண்டுகள் வரலாற்றைத் தொடர்ச்சியாகப் பதிவு செய்யப் பயன்பட வேண்டும். அவை குழப்பத்திற்கு இடமின்றி இருத்தல் வேண்டும்.

எனவே சித்திரைப் புத்தாண்டை தமிழ் இந்துக்களுக்கு உரிய புத்தாண்டாகவும் அதே வேளை தை முதல்நாளை - பொங்கல் மற்றும் தமிழ்ப் புத்தாண்டின் – திருவள்ளுவர் ஆண்டின் – தொடக்கம் எனக் கொண்டாடுவதே சிறந்தது.

ஜெயலலிதாவின் அரசாணையை முதல்வர் மு.க. ஸ்டாலின்தலைமையிலான அரசு இன்றுவரை மாற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் முதல்வர் மு.க. ஸ்டாலின் தனது பொங்கள் வாழ்த்துச் செய்தியில் “அனைவருக்கும் தை முதல் நாளாம், இனிய பொங்கல் - தமிழ்ப் புத்தாண்டுத் திருநாள் நல்வாழ்த்துக்கள்” என்று கூறியுள்ளார்.

# 'தமிழால் இணைவோம்' என்பதே நமது முழக்கம்: அயலகத் தமிழர் நாள் விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி

'தமிழால் இணைவோம்' என்று தலைமைச்செயலகத்தில் இணையதளம் வழி நடைபெற்ற அயலகத் தமிழர் நாள் விழாவில் முதல் வர் மு.க.ஸ்டாலின் முழக்கமிட்டார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் இணையவழியில் நேற்று நடந்த அயலகத் தமிழர் நாள் விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:'தமிழால் இணைவோம்' என்ற அடிப்படையில் நாம் ஒன்று சேர்ந்துள்ளோம். தமிழுக்குத்தான் அந்த வலிமை உள்ளது. மத மாயங்கள், சாதிச் சழக்குகளை வீழ்த்தும் வலிமை மொழிக்குத்தான் உள்ளது. அதனால்தான், 'தமிழால் இணைவோம்' என்பதை நமது முழக்கமாக கொண்டுள்ளோம்.உலகின் பல நாடுகளில் இருந்துதமிழன் என்ற உணர்வுடன் ஒன்றாக கூடியுள்ளோம். நிலங்கள் நம்மை பிரித்தாலும் மொழி இணைக்கிறது.

திமுக ஆட்சி அமையும் போதெல்லாம், இங்குள்ள தமிழர்களின் ஆட்சியாக மட்டுமின்றி, உலகம் முழுவதும் பரந்து வாழும்அனைத்து மக்களின் அரசாக செயல்பட்டு வருகிறது. உங்களில் பலருக்கும் தமிழகத்தில் வாக்களிக்கும் உரிமை இல்லாமல் இருக்கலாம். ஆனால், தமிழக அரசை நமது அரசு என்று சொல்லிக்கொள்ளும் உரிமை எப்போதும் உண்டு.உலகில், 30க்கும் மேற்பட்டநாடுகளில் அதிக எண்ணிக்கையிலும், 60க்கும் மேற்பட்ட நாடுகளில் குறைந்த எண்ணிக்கையிலும் தமிழர்கள் வாழ்கின்றனர். எங்குதமிழர்கள் வாழ்ந்தாலும் அவர்களுக்கு தமிழகம்தான் தாய்வீடு.

கடந்த 2011ம் ஆண்டில் புலம்பெயர் தமிழர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய வெளிநாடு வாழ் தமிழர் நலச்சட்டம் இயற்றப்பட்டது. வெளிநாடு வாழ் தமிழர் நலவாரியம் உருவாக்கி, நலத் திட்டங்களை செயல்படுத்துவோம் என்று அறிவிக்கப்பட்டது. ஆட்சி மாற்றம்



ஏற்பட்டதால்நலவாரியம் அமைக்கப்படவில்லை. மீண்டும் ஆட்சிக்கு வந்ததும் 'வெளிநாடு வாழ் தமிழர் நல வாரியம்' அமைக்கப்படும் எனஜந்தே மாதத்தில் சட்டப்பேரவையில் அறிவித்தேன்.அரசு மற்றும் புலம்பெயர்ந்த தமிழர் பிரதிநிதிகள் 13 பேரைக் கொண்டு வாரியம் அமைக்கப்படும். ரூ.5 கோடியில் வெளிநாடு வாழ்தமிழர் நல நிதி என மாநில அரசின்முன்பணத்தைக் கொண்டு உருவாக்கப்படும். மூலதன செலவினமாகரூ.1.40 கோடி, தொடர் செலவினமாக, நலத் திட்டங்கள் மற்றும் நிர்வாக செலவினங்களுக்காக ரூ.3 கோடி ஆண்டுதோறும் ஒதுக்கப்படும் என்று அறிவித்தேன். வெளி நாடு வாழ் தமிழர் குறித்த தரவு தளம் ஏற்படுத்தப்படும்.

வெளிநாடு வாழ் தமிழர்கள் பணியின்போது இறக்க நேரிட்டால் அவர்கள் குடும்பத்தில் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு கல்விஉதவித்தொகை, திருமண உதவித்தொகை வழங்கப்படும். தமிழர்கள் புலம் பெயரும்போது பயண புத்தாக்கப் பயிற்சி பல்வேறு ஊர்களில் நடத்தப்படும். ஆலோசனை பெற கட்டணமில்லா தொலைபேசி வசதி,வலைதளம், கைபேசி செயலி அமைப்பதுடன், சட்ட உதவி மையம் அமைக்கப்படும்.தமிழகம் திரும்பியவர்கள் குறுதொழில் செய்ய ஏதுவாக அதிகபட்சமாக ரூ.2.5 லட்சம் மானியத்துடன் கூடிய கடன் வசதி வழங்கப்படும். இதற்காக ரூ.6 கோடி ஒதுக்கப்படும் என்பது உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டதுடன், அனைத்துக்கும் சேர்த்து ரூ.20 கோடிஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வரிசையில், வெளிநாடுகளில் உள்ள தமிழ்ச் சங்கங்களுடன் இணைந்து ஆண்டுதோறும் ஜன.12 ம் தேதி 'உலகத்தமிழர் புலம்பெயர்ந்தோர் நாளாக' கொண்டாடப்படும்.தமிழகத்தில் உள்ள பிளவுகளுக்கு வெளிநாடு சென்ற பின்னரும் முக்கியத்துவம் தராதீர்கள். ஒருதாய் மக்களாக வாழுங்கள். கல்வியிலும் வேலைவாய்ப்பிலும், தொழில் வளர்ச்சியிலும் முன்னேற்றம் காணுங்கள். தமிழை, தமிழகத்தை விட்டு விடாதீர்கள்.

தமிழகத்துக்கு வாருங்கள். உங்கள் பிள்ளைகளுக்கு தமிழகத்தைக் காட்டுங்கள். அவர்களை அழைத்துவந்து கீழடியை, ஆதிச்சநல்லூரை காட்டுங்கள். இங்குள்ளதைபோல், அயலகத் தமிழ் மக்களுக்கும் எல்லாமுமாக இந்த அரசு இருக்கும்.தமிழால் இணைவோம், தமிழைவளர்ப்போம், தமிழரை வளர்ப்போம். இவ்வாறு முதல்வர் பேசினார்.இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் செஞ்சி மஸ்தான், மனோ தங்கராஜ், எம்எல்ஏ டிஆர்பி ராஜா,தலைமைச் செயலர் வெ.இறையன்பு, பொதுத்துறை செயலர் டி.ஜகந்நாதன், மொரீஷியஸ் முன்னாள் அதிபர் பார்லேன் வையாபுரி, இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், மலேசிய முன்னாள் அமைச்சர் டத்தோ பி.கமலநாதன், பப்புவா நியூ கினியா நாட்டைச் சேர்ந்த மாகாண ஆளுநர் சசிதரன் முத்துவேல், மேரிலேண்ட் போக்குவரத்து ஆணையர் ராஜன் நடராஜன், லண்டன் ஹார்லி ஸ்ட்ரீட் ஹெல்த் கேர் இயக்குநர் தனபால் ராமசாமி உள்ளிட்டோர் இணையவழியில் பங்கேற்றனர்.

# தமிழகத்தின் கோரிக்கை ஏற்பு: 6 மாவட்டங்களுக்கு பொங்கல் விடுமுறையை அறிவித்தது கேரள அரசு




தமிழக முதல்வரின் கோரிக்கையை ஏற்று, கேரளாவில் தமிழ்பேசும் மக்கள் வாழும் பகுதிகளில் நாளை (ஜன.14) பொங்கல் பண்டிகையைக் கொண்டாடும் வகையில் விடுமுறை அறிவித்து கேரள முதல்வர் பினராயி உத்தரவிட்டுள்ளார்.கேரள மாநிலத்தில் தமிழர்கள் அதிகமாக வாழும் ஆறு மாவட்டங்களில் தை முதல் நாள் (ஜனவரி 14) அன்று வட்டார பொங்கல் விடுமுறை பெற்றுத் தர வேண்டும் கோரிக்கை எழுந்தது. கேரளத் தமிழ் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில் கோரிக்கை, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு வைக்கப்பட்டது.

இதனை ஏற்று இன்று தமிழக முதல்வர் கேரள முதல்வருக்கு தமிழர்கள் வாழும் பகுதிகளில் ஜனவரி 14ல் பொங்கல் விடுமுறை அறிவிக்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளார்.இதுகுறித்து கேரள முதல்வர் பினராயி விஜயனுக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று எழுதியுள்ள கடிதத்தில், ''தமிழ் பேசும் மக்கள் பெருமளவில் வாழும் கேரளாவின் 6 மாவட்டங்களில் பொங்கல் பண்டிகைக்கு உள்ளூர் விடுமுறை அறிவிப்பது குறித்த கோரிக்கை தொடர்பாக தங்கள் அன்பான, உடனடி கவனத்தை ஈர்க்கவிழைகிறேன்.கடந்த 12 ஆண்டுகளாக கேரள அரசு ஜனவரி 14 ஆம் நாளினை பொங்கல் பண்டிகைக்கான உள்ளூர் விடுமுறையாக அறிவித்து வருகிறது என்று அறிகிறேன்.

ஜனவரி 14ஆம் தேதி, புனிதமான தை தமிழ் மாதத்தின் முதல் நாளாகும்; ஆனால் இந்த 2022 ஆம் ஆண்டில் ஜனவரி 15ஆம் நாளினை இந்த 6 மாவட்டங்களில் விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே, தமிழ்ச் சமூகங்களிடையே, உலகம் முழுவதும் கொண்டாடப்படும் பொங்கல் பண்டிகைக்கான உள்ளூர் விடுமுறை தினமாக ஜனவரி 14 ஆம் நாளை அறிவித்திட நடவடிக்கை மேற்கொள்ள நான் தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்'' என்று முதல்வர் கோரியிருந்தார்.

தமிழக முதல்வரின் இந்த கோரிக்கையை ஏற்று, தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளான கொல்லம், இடுக்கி, வயநாடு, பத்தனம்திட்டா, பாலக்காடு, திருவனந்தபுரம் ஆகிய 6 மாவட்டங்களுக்கு நாளை (ஜன.14) பொங்கல் விடுமுறை அறிவித்து கேரள அரசு உத்தரவிட்டுள்ளது.

# கரோனா அலையை நிர்வகிப்பதில் மத்திய அரசுக்கு தமிழகம் துணை நிற்கும்: பிரதமரிடம் முதல்வர் ஸ்டாலின் உறுதி



கரோனா அலையை நிர்வகிப்பதில் மத்திய அரசு எடுக்கும் அனைத்து முயற்சிகளிலும் தமிழகம் துணை நிற்கும் என்று உறுதியளிப்பதாக பிரதமர் மோடியிடம் தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.கரோனா தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக மாநில முதல்வர்களுடனான பிரதமர் நரேந்திர மோடியின் ஆலோசனைக் கூட்டத்தில் இன்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசும்போது, "கரோனா தொற்று நோயின் ஒமைக்ரான் அலையை நிர்வகிக்க தமிழகம் முழுமையாகத் தயார் நிலையில் உள்ளது. எனது அரசு பொறுப்பேற்ற பிறகு, தடுப்பூசி செலுத்துவது அதிகரித்துள்ளது. அந்த வகையில் இன்று வரை, தகுதியுள்ளவர்களில் 64% பேருக்கு முழுமையாக தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

மேலும், 15 முதல் 18 வயது வரையிலான இளைஞர்களில் 74 சதவிகிதத்தினருக்கு தடுப்பூசி போட்டுள்ளது. பூஸ்டர் டோஸ் தடுப்பூசிக்கும் தற்போது நல்ல வரவேற்பு உள்ளது.கரோனா நோய்த் தொற்றினைக் கட்டுப்படுத்திட, மாநில மற்றும் மாவட்ட அளவில் கட்டுப்பாட்டு அறைகளை ஏற்படுத்தியுள்ளதோடு, தேவையான அனைத்து நகரங்களிலும் கரோனா பராமரிப்பு மையங்களும் தொடங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் தேசிய அளவில் வரையறுக்கப்பட்ட சோதனை விதிமுறைகளைத் தொடர்ந்து பின்பற்றப்படுகிறது.

ஆர்.டி.பி.சி.ஆர். சோதனை மட்டுமே பயன்படுத்துப்படுகிறது. ஆர்.டி.பி.சி.ஆர். சோதனைகளின் எண்ணிக்கை, ஆக்சிஜன் உற்பத்தி திறன், ஆக்சிஜன் சேமிப்பு மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவு படுக்கைகளும் தமிழ்நாட்டில் அதிகரித்துள்ளது. .கரோனா பெருந்தொற்றினைக் கட்டுப்படுத்தத் தேவையான அனைத்து விதிமுறைகள் மற்றும் நெறிமுறைகளைக் கண்டிப்பாக அமல்படுத்துமாறு அனைத்து அதிகாரிகளுக்கும் நான் அறிவுறுத்தியுள்ளேன்.

நிலைமையைச் சமாளிக்க அனைத்து அரசு இயந்திரமும் முழுமையாக தயார் நிலையில் உள்ளது. இந்த கரோனா அலையை நிர்வகிப்பதில் மத்திய அரசு எடுக்கும் அனைத்து முயற்சிகளிலும் தமிழ்நாடு துணை நிற்கும் என்று உறுதியளிக்கிறேன்'' என்று முதல்வர் ஸ்டாலின் பேசினார்.இந்த ஆலோசனைக் கூட்டத்தில், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, மத்திய மருத்துவம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா, பல்வேறு மாநில முதல்வர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் காணொலிக் காட்சி வாயிலாகக் கலந்துகொண்டனர்.

தமிழ்நாடு அரசின் சார்பில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் மரு.ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் குமார் ஜெயந்த் இ.ஆ.ப., மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சிறப்புப் பணி அலுவலர் பி. செந்தில்குமார் இ.ஆ.ப., ஆகியோர் கலந்துகொண்டனர்

# மாற்றுத்திறனாளிகளின் மறுபக்கம்

வே. பாலகிருஷ்ணன், இ.கா.ப
(மண்டலக் காவல்துறைத் தலைவர், மத்திய மண்டலம், திருச்சி)



பிரதீபா என்ற மாற்றுத்திறனாளித் தன்னைக் காதலிப்பதாகச் சொல்லி ஏமாற்றியக் காதலன் மீது சட்ட நடவடிக்கை எடுக்க முன்வந்ததோடு, தன்னை உடல் ஊனத்தைச் சொல்லி ஒதுக்கியவனை உதறித்தள்ளி தனிஒருவராய் தன் சொந்தக்காலில் நின்று மாற்றுத்திறனாளிகளுக்கு உதாரணமாய் இருந்து வருகிறார். இது எனக்குத் தெரிந்த சமீபத்திய எடுத்துக்காட்டு. ஆனால் இதுபோன்ற உதாரணங்கள் மிகக்குறைவாகவே இருக்கின்றன. பெரும்பாலும் மாற்றுத்திறனாளிகள் சந்திக்கும் பிரச்சனைகள் வெளிவருவது அரிதாகவே உள்ளது. ஆகவே அவர்களின் பிரச்சனைகளை அலசி ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாக உள்ளது.

மாற்றுத்திறனாளிகள் பற்றிய புரிந்துணர்வு பல நிலைகளில், முக்கியமாக அரசுத்துறையில் பணிபுரிவோர் மத்தியில் மிகக் குறைவாகவே இருந்து வருகிறது. மேலும் மேலை நாடுகளில் உள்ளது போல் இன்னும் பொது இடங்களில் உள்ள பல அரசு மற்றும் தனியார் கட்டிடங்கள் மாற்றுத்திறனாளிகளின் வசதிக்கு ஏற்ப அமைக்கப்படவில்லை.

கோவிட் காலகட்டத்திலும், சாதாரண நேரங்களிலும் காவல்துறை மாற்றுத்திறனாளிகளின் பிரச்சனைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து நடவடிக்கை எடுத்தாலும் இன்னும் சில அதிகாரிகள் அவர்களின் பிரச்சினைகளை முழுமை-யாக புரிந்து கொள்வதில்லை. சரியான புரிதல் இல்லாமையால் முழுமையான நடவடிக்கை எடுக்க முடிவதில்லை.

காவல்துறை, கோவிட் முழுஅடைப்பு நேரத்தில் அவர்களுக்குத் அடிப்படைத் தேவைகளான உணவு மற்றும் உடை போன்றவற்றைப் பல்வேறு இடங்களில் வழங்கி அந்த இக்கட்டான சூழலில் இருந்து காப்பாற்றி இருக்கிறார்கள்.

நான் பணிபுரிந்த இடங்களில் எல்லாம் மாற்றுத்திறனாளிகளின் குறை-களை தீர்ப்பதற்கு தனியாக குறைதீர்ப்பு முகாம்கள் நடத்தியதோடு அவற்றைத் தீர்ப்பதற்கு “தனி அணி” அமைத்து நடவடிக்கை எடுத்து இருக்கிறோம். அதேபோ-ல் பெரும்பாலான அலுவலகங்களில் அந்த அலுவலக முதன்மை அதிகாரி முதல் மாடியில் அல்லது இரண்டாவது மாடியில் இருப்பதும் அந்த கட்டிடங்களுக்கு மின்தூக்கி வசதி இல்லாமையால், அதிகாரிகளிடம் தங்களின் பிரச்சனைகளை மாற்றுத்திறனாளிகள் படியேறிச் சென்று அணுகுவது இயலாத காரியம் எனக் கண்டறிந்தோம்.

ஆகவே அவர்கள் பயன்பெறும் வண்ணம் அனைத்து அலுவலகங்களில் மனுக்களோடு மாற்றுத் திறனாளிகள், கர்ப்பிணிகள் மற்றும் மூத்தக்குடிமக்கள் வரும்போது சம்பந்தப்பட்ட அதிகாரிகளே கீழே வந்து மனுக்களை பெறுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.



மாற்றுத் திறனாளிகளின் வகைபாடுகள் மற்றும் அவர்களின் தனிப்பட்டத் தேவைகள் பற்றிய விழிப்புணர்வும் மிகக் குறைவாகவே உள்ளது. முக்கியமாக மனநலம் சார்ந்த மாற்றுத்திறனாளிகள் மற்றும் பேச்சுத் திறன் குறைபாடு கொண்ட மாற்றுத் திறனாளிகள் ஒரு பிரச்சினைக்காக காவல் நிலையம் வரும் பொழுது அவர்களுடன் உரையாடி அவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தி அவர்களுக்கான தேவையை பூர்த்தி செய்வது என்பது அவ்வளவு எளிதானது அல்ல. அதற்கு தனித் திறமையும், எண்ண போக்கும் தேவை.

சென்னை பெருநகரின் மயிலாப்பூர் பகுதியில் காவல்துறை துணைக் கண்காணிப்பாளராக இருந்தபோது பேசும் திறன் குறைபாடு கொண்ட மாற்றுத் திறனாளிகளின் பிரச்சனைகளை புரிந்து கொள்வதற்காக காவல்துறையினருக்கு சமிக்ஞை மொழியில் தனிப் பயிற்சி அளிக்கப்பட்டது. இன்று காவிரி டெல்டா மாவட்டங்களை உள்ளடக்கிய 9 மாவட்டங்களில் இப்பயிற்சியை 72 காவலர்கள் பெற்று வருகின்றனர்.

இது சமிக்ஞை மொழி பற்றிய பயிற்சியாக மட்டும் அல்லாமல், மாற்றுத்திறனாளிகளுக்கு இருக்கும் பிரச்சினைகளை - அவர்கள் நிலையில் இருந்து புரிந்து கொள்வதற்கு ஒரு வாய்ப்பாக அமைகிறது. மாற்றுத் திறனா-ளிகள் பற்றிய சமூகக் கண்ணோட்டம் இன்னும் அதை ஒரு குறைபாடாகவே நினைப்பதால் காவல்துறை மூலம் அவர்களுக்கு செய்ய வேண்டியப் பணி நிறை-யவே இருக்கிறது.

சொத்து பிரச்சினையில் இருந்து உரிமை பிரச்சினை வரை காவல்துறை மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கையில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு முக்கியமான காரணியாக இருந்து வருகிறது. மாற்றுத்திறனாளிகளிடம் போராட்ட குணமும், உரிமைகளை உரக்கக் கேட்கும் எண்ணமும் இருப்பதால் சில நேரம் உரிமைகளை கேட்கும் போதும் அது நிறைவேறாத பட்சத்தில், ஏற்படும் வாதங்களின் போது காவல்துறைக்கும் மாற்றுத்திறன் போராளிகளுக்கும் உரசல்கள் ஏற்படுகின்றன.

அந்தப் போராட்டக் குணத்தை சட்டத்திற்கு எதிரான போராட்டமாகப் பார்க்காமல் உரிமைப் போராட்டமாக எண்ண வேண்டிய மனப்பாங்குக் காவலர்களுக்குத் தேவை. மாற்றுத்திறனாளிகளை உள்ளடக்கிய வளர்ச்சி என்பதுதான் ஒரு முழுமையான வளர்ச்சி. ஆனால் இன்னும் அது முழுமை பெறவில்லை. பொது இடங்கள், பொதுப் போக்குவரத்து வசதிகள், கேளிக்கை இடங்கள் ஆகியவை இன்னும் எட்டா தூரமாகவே இருந்து வருகிறது. சென்னை மாநகராட்சி, மாற்றுத்திறனாளிகள் மெரினா கடற்கரை அழகை ரசிப்பதற்கு என வருடம் ஒரு முறை ஒரு தனி வழியை ஏற்படுத்திய போது காவல் துறை சார்பாக மணல் மேல் செல்லும் ஜிப்ஸி வாகனத்தை மாற்றுத்திறனாளிகளின் சேவைக்காக அற்பணித்து அவர்களின் கேளிக்கைத் தேவையைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. இன்று தமிழக அரசு மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்த மணல் பரப்பில் நிரந்தரமாக ஒரு பாதையை ஏற்படுத்த முடிவு செய்துள்ளது மிகவும் மகிழ்ச்சியான விஷயம்.



காவல்துறை குற்றங்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கும்போது மனித நேயத்தோடு சட்டத்தை அமல்படுத்த வேண்டியத் தேவைப்படுகிறது. இந்த கொள்கையின் அடிப்படையில் மதுவிலக்கு குற்றங்களின் சட்ட அமலாக்கத்தின் போது, அதில் வாழ்க்கைத்துணையை இழந்த பெண்கள், வயது முதிர்ந்தோர், மாற்றுத்திறனாளிகள் ஆகியோரை குற்றவாளிப் பட்டியலில் இருப்பதைக் கண்டறிந்து அவர்களின் பின்னணி விசாரித்து இந்த மாதிரி குற்றங்கள் செய்ய அடிப்படைக் காரணத்தை அறிந்து அதனை சரிபடுத்தி அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு வங்கியின் மூலமாகவோ, அரசு உதவி தொகை மூலமாகவோ தமிழக காவல்துறை நடவடிக்கைகள் எடுக்கிறது.

மாற்றுத்திறனாளிகளின் உடல் மற்றும் மன நிலையை ஒரு குறைபாடகக் கருதும் எண்ணமும், அவர்கள் பொதுவாக குறும்பு குணம் உடையவர்கள் என்றத் தவறான கருத்தும் பரவலாக பொதுமக்களிடமும் காணப்படுகிறது. இந்த சிந்தனை ஒருசில திரைப்படம் மூலமாகவும், பொறுப்பற்ற சில தலைவர்களின் பேச்சுகளாலும் வலுப்படுத்தப்படுகின்றன. இதனைச் சரிப்படுத்துவதில் காவல்துறையின் பணி-யும் முக்கியமானது. மாற்றுத்திறனாளிகளின் திறனைக் கொச்சைப்படுத்தும் வகையில் பேசும் பேச்சுக்களையும், சித்தரிப்புகளையும் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்துவதும் மாற்றுத்திறனாளிகளின் நிலையில் மாற்றத்தைக் கொண்டு வர உதவும்.

இதற்கு மாற்றுத்திறணாளிகளும் நம்மவரே, அவர்களும் சமூகத்தில் ஒரு அங்கமே என்கிற உணர்வும், தமது குடும்பத்தில் அப்படி ஒருவர் இருந்தால் எப்படி நடந்து கொள்வார்கள், நடந்து கொள்ள வேண்டும் என்கிற சிந்தனையும் மக்களிடம் இருக்க வேண்டியது மிகவும் அவசியம். அது குறைபாடல்ல ஒரு சவால். அந்த சவாலை ஏற்று அதில் வெற்றிபெற வேண்டும். அது ஆரோக்கியமான சமூகத்திற்கு வழி வகுக்கும்.





# தமிழர்களை நோக்கி வரும் எதிர்க்கட்சிகள்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் சஜித் பிரேமதாச ஒரு சந்திப்பை ஒழுங்குபடுத்தியிருந்தார். ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணிக்கு ஆதரவான தொழில்சார் வல்லுநர்களுக்கான தேசிய அமைப்பும் புத்திஜீவிகள் மன்றமும் மேற்படி சந்திப்பை ஒழுங்குபடுத்தியிருந்தன. யாழ்ப்பாணத்தில் உள்ள டில்கோ உல்லாச விடுதியில் இரவு உணவுடன் நடந்த அச்சந்திப்பில் புத்திஜீவிகள் மன்றத்தைச் சேர்ந்த பேராதனை பல்கலைக் கழகத்துப் புத்திஜீவிகள். வந்திருந்தார்கள். அவர்களுடைய நண்பர்களான யாழ் பல்கலைக்கழகத்தின் அரச-றிவியல் துறையைச் சேர்ந்த புலமையாளர்களும் அதில் பங்குபற்றினார்கள்.

சஜித் பிரேமதாச தற்போதுள்ள பொருளா-தார நெருக்கடிகளை முன்னிறுத்தியே முதலில் உரையாடினார். ஐக்கிய மக்கள் சக்தியை அவர் ஒரு புதிய கூட்டணியாக ஒரு புதிய தொடக்கமாக உருவகித்தார். அங்கு கூடியிருந்தவர்களில் ஒருவர் இனப்பிரச்சினைக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் தீர்வு என்ன என்று கேட்ட போது சஜித் 13வது திருத்தத்தை முன்வைத்தார். 13வது திருத்தம் தோல்வியுற்று விட்டது என்பதனை யாழ் பல்கலைக்கழகத்தின் அரசறிவியல் துறையைச் சேர்ந்த ஒரு புலமையாளர் சுட்டிக்காட்டியிருக்கிறார். தமிழ் மக்கள் 13ஐக் கடந்து சமஸ்டி போன்ற தீர்வு முன்மொழிவுகளை மேசையில் வைத்து விட்டார்கள். என்று மேற்படி புலமையாளர் சுட்டிக்காட்டிய போது இனங்களுக்கிடையே நம்பிக்கையின்மைதான் பிரச்சினைகளுக்கு காரணம் என்றும் அந்த நம்பிக்கையை கட்டியெழுப்பினால் சரி என்றும் சஜித் கூறியிருக்கிறார். இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதே இனப்பிரச்சினைக்கான தீர்வு என்றும் வலியுறுத்தியுள்ளார்.

உரையாடலின் போக்கில் அவர் 13ஆவது திருத்தத்தை பற்றித் தெரிவித்த கருத்துக்களைத் தொகுத்துப் பார்த்தால் நாட்டின் எல்லா பகுதிகளுக்கும் உரிய பொருளாதாரப் பிரச்சினைகளை தீர்ப்பதற்குரிய ஒரு வழியாக அதை அவர் முன்வைப்பதாகத் தெரிகிறது என்று அச்சந்திப்பில் பங்குபற்றிய ஒருவர் கூறினார்.

இதற்கும் சில கிழமைகளுக்கு முன்பு சம்பிக்க ரணவக்க வடபகுதிக்கு வந்திருந்தார். கிளிநொச்சியில் கைக்கடக்கமான ஆட்களோடு நடந்த ஒரு தேனீர் சந்திப்பில் அவர் கூறியிருக்கிறார் சமஸ்டி என்ற சொல் சிங்கள மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்த கூடியது என்று.ஆனால் ஒரு சமஸ்டி தீர்வை தான் ஏற்றுக் கொள்வதாகவும் கூறியிருக்கிறார். சமஸ்ரி என்று தலைப்பு வைக்காமல் ஒரு தீர்வை தமிழ் மக்களுக்கு வழங்கலாம் என்ற தொனிப்பட கருத்துக் கூறியுள்ளார்.

அவர் வருவதற்கு சில கிழமைகளுக்கு முன்பு உதய கமன்பில யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார். "கடந்த காலத்தில் நடந்த இரத்தம் சிந்திய நிகழ்வுகளை மறக்க முடியாவிட்டாலும், அவற்றை மறந்து அவற்றிற்கு மன்னிப்புக் கொடுத்து தற்போது உள்ள பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்க முடியும் என்பதை நாங்கள் சிந்திக்க வேண்டும்" என்று கூறினார்.

சஜித் பிரேமதாச, உதய கம்மன்பில, சம்பிக்க ரணவக்க, அனுரகுமார திஸ ாநாயக்க போன்றோர் ராஜபக்சேவுக்கு எதிராக முன்னிறுத்தப்படக்கூடிய எதிர்த்தரப்பு ஆளுமைக-ளாக பார்க்கப்படுகிறார்கள். ஆனால் அவர்களிடம் ராஜபக்சவுக்கு எதிராக மூவினத்து மக்கள் ஆணை-யைப் பெறத்தக்க வழிவரைபடங்கள் எவையும் கிடையாது என்பதைத்தான் இனப்பிரச்சினை தொடர்பான அவர்களுடைய தீர்வுகள் நமக்கு காட்டுகின்றன. சிங்கள பௌத்த பெருந் தேசியவாதத்தை பகைத்துக் கொண்டு தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வை தர அவர்கள் தயாரில்லை. அதற்காக சிங்கள வாக்காளர்கள் மத்தியில் இறங்கி வேலை செய்யவும் அவர்கள் தயாரில்லை. எனவே அவர்களால் ராஜபக்சக்களுக்கு எதிராக நின்றுபிடிக்க முடியுமா என்பது சந்தேகம்தான்.

சில நாட்களுக்கு முன் ஜனாதிபதி தெரிவித்த ஒரு கருத்தை இங்கு கவனிக்க வேண்டும்... "நான் கொவிட்டினால் இழந்த இரண்டு வருடங்களை சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் பெற்றுக் கொள்ள வேண்டும் என பொதுமக்களிடமிருந்து எனக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது" என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். "கண்டியை சேர்ந்த இளைஞர் ஒருவர் இந்த யோசனையை முன்வைத்துள்ளார்" என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். "கண்டி தலதாமாளிகைக்கு வழிபாட்டிற்காக சென்றவேளை நான் மக்களுடன் உரையாடிக்கொண்டிருந்தேன். அவ்வேளை இளைஞர் ஒருவர் முன்வந்து சேர் நீங்கள் கொவிட்டினால் இரண்டு வருடங்களை இழந்துள்ளீர்கள் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் ஏன் அதனை பெற்றுக்கொள்ள முடியாது என கேள்வி எழுப்பினார்" என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அதாவது நாடு இப்பொழுது எதிர்கொள்ளும் நெருக்கடிகளுக்கான பழியை வைரஸின் மீது போட்டுவிட்டு மீண்டும் ஒரு ஆட்சிக்காலத்தை பெறுவதற்கு கோத்தாபய தயாராக இருக்கிறாரா என்று அவரை எதிர்ப்பவர்கள் சந்தேகிக்கிறார்கள். ஜெயவர்த்தன செய்ததைப் போல ஒரு பொதுசன வாக்கெடுப்பை நடத்தி அவர் தன்னுடைய ஆட்சிக் காலத்தை நீட்டித்துக் கொள்ளலாம் என்றும் தென்னிலங்கையில் ஊகிக்கப்படுகிறது.

நாடு இப்பொழுது எதிர்கொள்ளும் பொருளா-தார நெருக்கடிகளை ஒரு குறிப்பிட்ட காலம் வரை சமாளித்து விட்டு அதன்பின் சீனாவிடமிருந்து உதவி-யை பெற்று பொருளாதாரத்தை நிமிர்த்தி விட்டால் மக்கள் தாங்கள் பட்ட கஷ்டங்கள் அனைத்தையும் மறந்து விடுவார்கள் என்று ராஜபக்சக்கள் எதிர்பார்க்கிறார்கள். அந்த அடிப்படையில் அடுத்த தேர்தலை நோக்கி அவர்களிடம் ஏதோ ஒரு திட்டம் இருக்கக்கூடும் என்ற ஒரு விளக்கமும் ஒரு பகுதி விமர்சகர்களால் முன் வைக்கப்படுகிறது. இலங்கையின் பொருளாதாரம் மிகவும் சிறி-யது. சீனா போன்ற ஒரு பெரிய நாடு உதவு-மாக இருந்தால் இலங்கைத் தீவு வெகு சுலபமாக இப்போது எதிர் கொள்ளும் நெருக்கடிகளிலிருந்து நிமிர்ந்து விடும். எனவே கோத்தாபய ராஜபக்ச தன்னுடைய அடுத்த பதவி காலத்திலும் கண் வைத்திருப்பதாக ஊகிக்கப்படுகிறது.

இப்படிப்பட்டதோர் அரசியல் சூழலில் எதிர்க்கட்சிகள் மேலும் துடிப்பாகவும் ஒன்று திரண்டும் செய்யற்பட வேண்டி இருக்கிறது. ஆனால் அண்மை வாரங்களாக வடக்குக்கு வருகை தந்த தென்னிலங்கைத் தலைவர்கள் தெரிவிக்கும் தகவல்களை தொகுத்துப் பார்த்தால் மூன்று இனத்தவர்களையும் கவரத்தக்க ஜனவசியம் எதிர்க் கட்சித் தலைவர்கள் மத்தியில் பெரும்பாலானவர்களுக்கு இல்லை என்று தெரிகிறது. இனப்பிரச்சினைக்கு துணிச்சலான ஒரு தீர்வை முன்வைத்து அதற்காக சிங்கள மக்கள் மத்தியில் ரிஸ்க் எடுத்து உழைக்க தயாரற்ற எல்லா சிங்கள தலைவர்களும் சிங்கள பௌத்த பெருந்தேசியவாதத்தை ஏதோ ஒரு விதத்தில் பாதுகாப்பவர்கள்தான். சிங்கள பௌத்த பெருந் தேசியவாதத்தை பாதுகாப்பதுதான் அவர்களுடைய அரசியல் இலக்கு என்றால் அவர்களால் ராஜபக்சக்களை எதிர்கொள்வது கடினம்.

ஏனென்றால் சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்தின் 2009க்கு பின்னரான வளர்ச்சிதான் யுத்த வெற்றி வாதமாகும். 2018 ஈஸ்டர் குண்டுவெடிப்போடு அது தன்னை அடுத்த கட்டத்துக்கு முஸ்லீம்களுக்கு எதிரானதாகவும் அப்டேட் செய்துவிட்டது. எனவே யுத்த வெற்றி வாதத்தை எதிர்கொள்வதற்கு ஒப்பீட்டளவில் மூன்று இனத்தவரின் வாக்குகளையும் கவரத்தக்க ஒரு தலைவர் தேவை. தனிச் சிங்கள வாக்குகளால் அதை சாதிக்க அதை நன்கு விளங்கி வைத்திருக்கும் காரணத்தால்தான் சஜித்தும் உதய கமன்பிலவும் சம்பிக்க ரணவக்கவும் வடக்கை நோக்கி வருகிறார்கள். சரிக்கும் பிழைக்கும் அப்பால் ரணில் விக்கிரமசிங்க 2015இல் அப்படி ஒரு தலைவராக தோன்றினார். ஆனால் அவர் தானும் தோற்று தான் பெற்றெடுத்த குழந்தையான நிலைமாறுகால நீதியையும் தோற்கடித்து விட்டார்.


இப்பொழுது சஜித் பிரேமதாசவும் உதய கம்மன்பிலவும் சம்பிக்க ரணவக்கவும் தமிழ் வாக்காளர்களை குறிவைத்து வடக்கு கிழக்கிற்கு வந்து போகிறார்கள். அவர்கள் மறுபடியும் ஒரு தேர்தல் நாடகத்தை ஆடப் போகிறார்கள் என்று தெரிகிறது. சஜித்தின் வடக்கு விஜயத்தின் போது தமிழ் மக்களை கவர்வதற்கு அவர் கையாண்ட வழிமுறைகள் ஏற்கனவே கடந்த பொதுத் தேர்தலின்போது அங்கஜன் பயன்படுத்திய உத்திகள்தான். வடமராட்சியில் கூட்டத்தில் பங்கு பற்றுமாறு ஒலிபெருக்கியில் ஊர்ஊராக அழைப்பு விடுக்கப்பட்டது. அந்த அழைப்பின் போது பொங்கல் பொதி ஒன்று தரப்படும் என்று உறுதி கூறப்பட்டிருக்கிறது. அதேபோல சில கிராமங்களில் வீடுகள் தோறும் ஆண்களுக்கான சேர்ட்கள் வழங்கப்பட்டுள்ளன. பொங்கல் பொதியோடு வந்த சஜித் பிரேமதாச இனப்பிரச்சினைக்கான தீர்வு பொதி-யோடு வரவில்லை என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். பொங்கல் பொதியைக் காட்டி தமிழ் மக்களை கவரலாம் என்று அவர் நம்புகிறாரா? இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவரிடம் விசுவாசமான திட்டங்கள் உண்டு என்பதனை அவர் இன்றுவரையிலும் நிரூபித்திருக்கவில்லை.

அவரைப் போன்று யாரோ ஒருவரை முன்னிறுத்தி தமிழ்.சிங்கள. முஸ்லிம், மலையக வாக்குகளை திரட்டுவதன்மூலம் ஒரு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி விடலாம் என்று சில மேற்கு நாடுகளும் நம்பக்கூடும். ஆனால் தமிழ் மக்களுக்கு தேவையாக இருப்பது ஆட்சி மாற்றம் அல்ல. இலங்கைத்தீவின் நான்கு தேசிய இனங்களின் இருப்பையும் ஏற்றுக்கொண்டு ஒரு கூட்டாட்சிக் கட்டமைப்பை வாக்குறுதி அளிக்கத் தேவையான துணிச்சலை கொண்ட ஒரு சிங்களத் தலைவர்தான் ராஜபக்ஷக்களுக்கு எதிராக இப்பொழுது தேவை. மூன்று ஆண்டுகளில் தோல்வுயுற்ற 2015இன் ஆட்சி மாற்றம் அதைத்தான் தமிழ் மக்களுக்கு கற்றுக் கொடுத்திருக்கிறது.

### வீணாவின் கவிக்கணை

உன்னால் முடியாது என்று சவால்
விடும் எந்த செயலையும்,
நீ உன் மனதால் கூட இயலாது
என்று எண்ணி, வந்த அரிய
சந்தர்ப்பத்தை இழந்து விடாதே,
நிதானமாக சிந்தித்து உன்
நம்பிக்கையை முன்நிறுத்தி,
சறுக்கினாலும் பரவாயில்லை
ஏறித்தான் பார்ப்போமே
என்று ஏறிப்பார், நிச்சியம்
ஒருநாள் சிகரமும் எட்டிடும்!
உன் தலை விண்ணையும் தட்டிடும்!





# Carefirst Family Health Team

## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario


ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGREMENT CANADA

**Clinic Location:**

**Carefirst One-Stop Multi Services Centre**

300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2

Tel: (416) 502-2029, www.carefirstfht.com

# இனவழிப்பின் ஆயுதமாக ஸ்ரீலங்கா நீதித்துறை

- பார்த்தீபன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவப் பிரதிநிதிகள் இருவர் கடந்த 2019ஆம் ஆண்டு இனப்படுகொலை மாத நினைவேந்தல் காலப் பகுதியில் பல்கலைக்கழக வளாகத்தில் வைத்து கை செய்யப்பட்டனர். 2019 மே மாதம் 3ஆம் திகதி கைது செய்யப்பட்ட இவர்கள்மீது வழக்கு பதிவு செய்யப்பட்ட நிலையில் மே மாதம் 16ஆம் திகதி பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டது. தற்போது குறித்த யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களுக்கு எதிராக ஸ்ரீலங்கா கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களுடன் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்பட்டு யாழ் நீதவான் நீதிமன்றத்தில் வைக்கப்பட்டுள்ள சான்றுப் பொருட்களை பாரப்படுத்துமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த நிகழ்வானது சத்தமின்றி, அரசியல் சலசலப்புகளின்றி நகர்த்தப்படும் நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரையும் பெரும் அச்சுறுத்துக்குள் தள்ளியுள்ளியுள்ளது.

ஒரு நீதிமன்றத்தில் வழக்குதானே தொடுக்கப்படுகிறது என்றோ, வழக்கில் குற்றமற்ற மாணவர்கள் அதனை நிரூபிக்கும் பட்சத்தில் அவர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது தானே என்றோ ஈழத்தின் அரசியல் தெரியாத யாரேனும் கேட்கககக்கூடும். இலங்கைத் தீவில் நீதித்துறை நீதியுடன் இருந்திருந்தால் தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்திப் போரிட்டிருக்க வேண்டிய தேவை ஏற்பட்டிராது. ஸ்ரீலங்கா நீதித்துறை என்பதே ஈழத் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி அழிப்பதற்கான கருவியாகவே பயன்படுத்தப்படுகின்றது. ஸ்ரீலங்கா அரசியலமைப்பு சட்டம் என்பது ஈழத் தமிழ் மக்களின் வாழ்வுக்கும் அபிலாசைக்கும் எதிராக கட்டமைக்கப்பட்டதுபோலவே ஸ்ரீலங்காவின் நீதித்துறையும் ஈழத்தவர்களுக்கு எதிராக கட்டக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் அவசரகால தடைச்சட்டம் முதலிய கொடூரச் சட்டங்களின் வழியாக ஈழத் தமிழ் மக்கள் சிறையில் அடைக்கப்படுகிறார்கள். சிறையிலேயே அவர்கள் இல்லாமல் செய்யப்படுகின்றனர். காரணமின்றி பல தசாப்தங்கள் சிறையில் அடைக்கப்படவும் அதனால் அவர்கள் மாத்திரமின்றி அவர்களின் குடும்பங்களும் அழியவும் ஸ்ரீலங்கா நீதிமன்றங்கள் வழிகோலுகின்றன. ஏன் ஒட்டுமொத்த இனமே இதன் வழியாக அழிவதற்கான வழியை ஸ்ரீலங்கா நீதிமன்றங்களே திறந்துவிடுகின்றன. ஈழப் போராட்டத்தின் ஆரம்ப காலப் போராளிகளில் ஒருவரான குட்டிமணியின் வாழ்வும் போராட்டமும் அவர் நீதிமன்றத்தில் ஆற்றிய உரையும் அவரது மரணமும் ஸ்ரீலங்கா நீதித்துறையின் கோர முகத்தை அம்பலம் செய்கிறது.

1979இல் பயங்கரவாத தடைச்சட்டமும் அவசரகால சட்டமும் தமிழ் இளைஞர்களை இலக்கு வைத்து கொண்டுவரப்பட்டது. வகைதொகையின்றி தமிழரை சிறையில் அடைத்து இன உரிமைக்காக முகிழ்ந்தெழும் இளைஞர்களை அழிப்பதுவே இச்சட்டத்தின் இலக்கு ஆகும். இது ஸ்ரீலங்கா அரசியலமைப்பு சட்டத்தின் நிழலில் மாத்திரமின்றி ஸ்ரீலங்கா நீதித்துறையின் நிழலிலும்தான் இந்த நிகழ்வு அரங்கேற்றப்பட்டது. இந் நிலையில் 1981இல் தமிழ்நாடு செல்ல முயன்ற குட்டிமணி உள்ளிட்ட போராளிகள் கைது செய்யப்பட்ட நிலையில் 1982இல் அவர்களுக்கு மரணதண்டனை தீர்ப்பு அளிக்கப்பட்டது. ஈழத் தமிழ் மக்கள் ஒருபோதும் சிங்கள தேசத்துடன் இணைந்தவர்கள் இல்லை என்பதை வலியுறுத்தி அவர்கள்மீது பிரிவினைக் குற்றம் சுமத்த எந்த அடிப்படையும் இல்லை என்பதை வலியுறுத்தி குட்டிமணி இறுதி உரை ஆற்றினார்.

ஸ்ரீலங்கா நீதிமன்றத்தில் இத்தகைய தீர்ப்பு அளிக்க எந்த உரிமையும் இல்லை என்பதை அன்றைக்கு அவர் எடுத்துரைத்த விதம் வரலாற்றில் என்றும் ஒரு நிஜயமான வீரக் கதாநாயகனின் உரையாக நிலைத்துள்ளது. தமிழீழ தேசத்தை மூச்சாக கொண்ட குட்டிமணி தன்னை தமிழீழத்திலேயே தூக்கிலிடுங்கள் என்றும் ஸ்ரீலங்கா நீதித்துறையின் முகத்தில் அறைந்தார். ஆயுதப் போராட்டத்தின் நியாயத்தையும் ஸ்ரீலங்கா நீதித்துறையின் பின்னணியையும் பற்றிக் கூறிய குட்டிமணி எதிர்காலத் தமிழீழத்தையும் தன் கண்கள் வழி கண்டுரைத்தார். ஸ்ரீலங்கா நீதிமன்றத்தில் இத்தகைய உரையாற்றிய குட்டிமணி அந் நீதிமன்ற தீரப்பின் அடிப்படையில் சிறையில் இருந்தபோது திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்டமையே ஸ்ரீலங்கா நீதித்துறையின் கோரமான இனப்படுகொலையாகும்.

இனத்தின் விடுதலைக்காக ஆயுதம் ஏந்திப் போராடியவர்களை அழித்தொழித்து அத்துடன் அவர்களுடன் சேர்த்து தமிழ் இனத்தையும் அழித்தொழிக்கின்ற ஸ்ரீலங்கா அரசுக்கு காவலாக ஸ்ரீலங்கா நீதித்துறை இருக்கின்ற நிலையில் ஜனநாயக வழியில் சட்ட வழியில் செயற்பட்ட மனிதர்களுக்கும் குட்டிமணிக்கு நடந்ததே நிகழ்த்தப்பட்டது. சட்ட வழியில் போராடிய மாமனிதர் குமார் பொன்னம்பலம், ஜனநாயக வழியில் நீதி வழியில் குரல் கொடுத்த ஜோசப் பரராஜசிங்கம், தமிழர்களின் தவிப்பை சிங்கள மக்களுக்கு எளிதாக எடுத்துரைத்த ரவிராஜ் போன்ற தமிழ் மக்கள் பிரதிநிதிகளும் ஸ்ரீலங்கா அரசால் திட்டமிட்டுப் படுகொலை செய்யப்பட்டனர். இதற்கு இன்றுவரையில் ஸ்ரீலங்கா நீதிமன்றங்களால் நீதியை நிலைநாட்ட முடியவில்லையே. எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்க முடியவில்லையே. அது ஆச்சரியத்திற்கும் எதிர்பார்ப்பிற்கும் உரியதல்ல என்பதையே இப் பத்தி ஆரம்பத்தில் வலியுறுத்தியது.

2005ஆம் ஆண்டில் திருகோணமலையில் ஐந்து தமிழ் மாணவர்கள் ஸ்ரீலங்கா அரச படையினரால் படுகொலை செய்யப்பட்டார்கள். 2009ஆம் ஆண்டுகளில் கொழும்பில் தமிழ் மாணவர்கள் உள்ளடங்கலாக 11 மாணவர்கள் காணாமல் ஆக்கப்பட்டனர். அதன் குற்றவாளியே வசந்த கரன்னகொட தற்போது ஸ்ரீலங்காவின் மாகாணம் ஒன்றில் ஆளுநராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். இனப்படுகொலைகளையும் இனவழிப்பையும் ஊக்குவிக்கும் ஸ்ரீலங்காவின் அரசியலமைப்பையும் நீதித்துறையையும் தலைமை தாங்க முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை நிகழ்த்திய கோத்தபாய ராஜபக்ச அரச தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இதுவே ஸ்ரீலங்காவின் சட்டமும் நீதியும் ஆட்சியுமாகும்.

முள்ளிவாய்க்காலில் காணாமல் ஆக்கப்பட்டவர்களை விடுவிக்க வேண்டும் என்று கோரி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு நீதி வழங்க வேண்டும் என்று கோரி ஈழத் தமிழ் மக்கள் சர்வதேசத்தை நோக்கி குரல் எழுப்பி வருகிறார்கள். ஸ்ரீலங்காவின் நீதித்துறை ஈழத் தமிழ் மக்களுக்கு நீதியை தராது என்ற கடந்த கால கசப்பான வரலாற்று உண்மை உணர்தலின் அடிப்படையிலேயே தமிழ் மக்கள் இந்த முடிவுக்கு வந்துள்ளனர். எனினும் சர்வதேச சமூகம் இனப்படுகொலையாளிகளையே நீதிபதியாக்கும் விசித்திர முடிவுகளை மீண்டும் மீண்டும் தமிழ் மக்கள்மீது திணித்து தமிழ் மக்களை தொடர்ந்து இனவழிப்புக்குள் தள்ளுகின்றது.

சர்வதேச விசாரணை வழியாகவே ஈழத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தீர்வை பெற்றுத் தர முடியும் என்பதையும் சர்வதேச நீதிமன்றத்தில் ஸ்ரீலங்கா அரசை நிறுத்துவே ஸ்ரீலங்காவில் தொடரும் ஈழத் தமிழ் இனத்திற்கு எதிரான அநீதியை தடுக்க முடியும் என்பதையும் தற்போது மாணவர்களை இலக்கு வைத்து ஸ்ரீலங்கா நீதிமன்றம் வகுத்திருக்கும் சூழ்ச்சியின்போதும் நாம் வலியுறுத்த வேண்டும். குட்டிமணிகளை கொன்ற ஸ்ரீலங்கா நீதித்துறை, குமார் பொன்னம்பலங்களின் கொலைகளுக்கு நீதியைத் தராத ஸ்ரீலங்கா நீதிமன்றம் இந்த மாணவர்களின் குரலை நசிக்க, சர்வதேச சமூகம் இடமளிக்கக்கூடாது என்பதே தமிழரின் எதிர்பார்ப்பு. முள்ளிவாய்க்காலுக்கான அனைத்துலக நீதிமன்றின் நீதித்தீர்ப்பே ஸ்ரீலங்கா நீதித்துறையின் கோரத்தை இல்லாதொழிக்கும்.

# நாட்டில் அன்பும் தர்மமும் தழைக்க வேண்டும். அனைவர் வாழ்விலும் வளமும் நலமும் பலமும் நிலைக்க வேண்டும்



எமது சமயங்கள் அனைத்தும் வாழ்வியலையே போதித்து எம்மை வழிப்படுத்துவதாக அமைந்துள்ளன. தைத்திருநாள் என்பது, சூரியபகவான் தனுர் ராசியில் இருந்து மகர ராசிக்கு பிரவேசிக்கும் காலமாகும். உத்தராயண புண்ணிய கால ஆரம்பம் என போற்றப்படுகின்றது.

இன்னுமொரு வகையில் உழவர் திருநாளை நன்றிகளை தெரிவித்துக்கொள்ளும் ஓர் சிறப்பம்சம் நிறைந்த நாளாக பார்க்கப்படுகிறது. அதாவது உழவர்கள் தம்தொழிலுக்கு உதவிகள் புரிந்த சூரிய பகவானுக்கு நன்றிகள் பகிர்ந்து, பொங்கலிட்டு படைத்து நிவேதனம் செய்யும் ஓர் விழாவாக பண்டிகையாக நோக்கலாம். அத்துடன் அனைத்து உயிர்களையும் மதித்து அன்புடன் நன்றிகள் பகிர்ந்து கொள்வதாகவும் நாம் காணலாம்.

நாம் சமய வழி நிற்பதில், நடப்பதிலிருந்து பல்வேறு வாழ்வியல் தத்துவங்களை நடைமுறைகளை கற்றுக் கொள்ள வேண்டும். அன்பு செலுத்தி நடக்கப் பழக வேண்டும். நன்றிகள் பகிர்ந்து கொள்ளப்பழக வேண்டும். இயற்கையை நேசிக்கும் பாங்கினை பழக, கற்க வேண்டும். இவ்வகையில் சமயங்கள் வாழ்வியலையே போதித்து நிற்கின்றன. அவ்வகையில் நாமும் கற்றுக் கொள்ள வேண்டும்.

எமது நாட்டில் அன்பு நிலைக்க வேண்டும். அறம் வேண்டும். தர்மத்தின் வழி நடக்க வேண்டும். அன்பு, அறம், தர்மம், நேர்மை, இயற்கையை மதித்தல் மேலோங்க வேண்டும். இவற்றை எல்லாம் இழப்போமானால் அல்லது மீறி நாம் நடப்போமானால் எமக்கு கிடைப்பது மிகவும் துயரம் மிகுந்த வாழ்க்கையாக அமையும். மலர்ந்துள்ள தைத்திருநாள் முதல் அனைவர் வாழ்விலும் வளமும் நலமும் பலமும் இன்பமும் பெற்று வாழ்க என அன்பே உருவான பரம்பொருளின் பாதம் பணிந்து பிரார்த்தனை செய்து, மனமார்ந்த நிறைந்த நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் இந்துக் குருமார் அமைப்பின் சார்பில் பகிர்ந்து மகிழ்ச்சி அடைகிறோம். சுபம்.

கலாநிதி. சிவஸ்ரீ. கு.வை. க. வைத்தீஸ்வர குருக்கள்.
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு. 13.01.2022
சிவஸ்ரீ. ச. சாந்தரூப குருக்கள்.
செயலாளர், இந்துக் குருமார் அமைப்பு.


## இருபத்தாறாம் ஆண்டில் வெற்றிகரமாக கால் பதிக்கும் கனடா உதயனின் ‘இலங்கைச் சிறப்பிதழ்’

நூற்றுக்கு மேற்பட்ட பக்கங்களில் பெருமளவு தாயகப் படைப்பாளிகளின் எழுத்துக்களை தாங்கி 2022, ஏப்ரல் மாதம் 8ம் திகதி வெள்ளிக்கிழமை கனடாவில் வெளியாகின்றது.

கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், நர்காணல்கள், விமர்சனங்கள் ஆகிய படைப்புக்கள் 2022 மார்ச் மாதம் 14ம் திகதிக்கு முன்னர் எதிர்பார்க்கப்படுகின்றன.

படைப்புக்களை தபால் மூலமாகவோ
அன்றி மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பலாம்.

சிறிய படைப்புக்களை (416) 732-1608 என்னும்
WhatsApp இலக்கத்திற்கும் அனுப்பலாம்.

இலங்கைச் சிறப்பிதழில் பிரசுரமாகும் படைப்புக்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெறும் சிலவற்றுக்கு சன்மானமும் சிறப்பிதழின் பிரதியொன்றும் அனுப்பிவைக்கப்பெறும்

தபால் முகவரி: Managing Editor
Uthayan Publishers
4062 Ellesmere Road
Scarborough, Ontario
CANADA. M1C 1J2

மின்னஞ்சல் முகவரி: uthayannews@yahoo.com










# கோவிட்-19 பூஸ்டர் தடுப்பூசியை எடுத்துக்கொள்ளுங்கள்.

இன்றே உங்கள் பூஸ்டர் தடுப்பூசியை முன்பதிவு செய்யுங்கள்.

கோவிட்-19 -இலிருந்து உங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

நமது பாதுகாப்பு நம் அனைவரின் கையில்.




**ontario.ca/covid19 -ஐ சென்று பாருங்கள்**

ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது.

Ontario


இனிய
தைப்பொங்கல்
மற்றும்
தமிழ் மரபுத் திங்கள்
நல்வாழ்த்துக்கள்
Happy Thai Pongal & Tamil Heritage Month
Hon. Mary Ng, MP
Markham-Thornhill
16 Esna Park Drive, Unit 107, Markham ON L3R 5X1
905-479-8100 | Mary.Ng@parl.gc.ca
maryngmp.ca | @maryngMarkhamThornhill
@Mary_Ng | @Mary_Ng


இனிய
தைப்பொங்கல்
நல்வாழ்த்துக்கள்
Happy
Pongal
Wishing you a very happy
and prosperous Pongal
Raymond Cho
MPP - Scarborough North
Constituency Office
Unit B, 4559 Sheppard Ave. E
Scarborough, ON M1S 1V3
(416) 297-5040 | raymond.choco@pc.ola.org
www.raymondcho.ca
Ontario

# கனடா-ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் அரிஸ் பாபிகியன் அவர்களின் வாழ்த்துக்கள்

தைப் பொங்கல்மற்றும் தமிழ் மரபு மாதத்தை முன்னிட்டு Scarborough-Agincourt மற்றும் Ontario வாழ் தமிழர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள் இருப்பு, கலாச்சாரம், மரபுகள், வலுவான குடும்பம் மற்றும் சமூக நெறிமுறைகள் ஆகியவை எங்கள் பன்முகத்தன்மையை வலுப்படுத்தி, நமது சமூகத்தை வளப்படுத்தி, வாழ்வதற்கும், வேலை செய்வதற்கும், குடும்பத்தை வளர்ப்பதற்கும் சிறந்த இடமாக மாற்றியுள்ளது.

புனிதமான பொங்கல் அறுவடைத் திருநாளின் மிகுதியாக, தமிழ் சமூகத்தின் பங்களிப்புகள் இங்கு கனடாவில் எண்ணிக்கையில் அடங்காத அளவுக்கு ஏராளம் இடம்பெறுகின்றன.

உங்களின் தேசிய அடையாளத்தைப் பேணுவதற்கும், வலுக்கட்டாயமாக ஒருங்கிணைக்கப்படுவதையும், இனப்படுகொலையை எதிர்ப்பதற்கும் உங்களின் உறுதிப்பாடு ஊக்கமளிக்கிறது மற்றும் பாராட்டுக்குரியது. உங்களைப் பற்றியும் நீங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் மதிப்புகளைப் பற்றியும் நான் பெருமைப்படுகிறேன்.

உங்கள் அனைவருக்கும் எனது இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்

இங்ஙனம்,
அரிஸ் பாபிகியன், ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்
ஸ்கார்பரோ-அஜின்கோர்ட்

---

I would like to extend my heartfelt congratulations to the Tamil residents of Scarborough-Agincourt and Ontario on the occasion of Tai Pongal and Tamil Heritage Month.

Your presence, culture, traditions, strong family and community ethos have strengthened our diversity and enriched our society making it a better place to live, work, and raise a family.

As the abundance of the Tai Pongal harvest festival, the Tamil community's contributions are far too numerous to cite here.

Your determination to preserve your national identity, resist forced assimilation and genocide is inspiring and commendable. I am proud of you and the values you represent.

Happy Tai Pongal!

Aris Babikian, MPP
Scarborough-Agincourt






ONTARIO

**Aris Babikian**
MPP / DÉPUTÉ
SCARBOROUGH-AGINCOURT
**Constituency Office:**
207-4002 Sheppard Ave. E. Scarborough, ON M1S 1S6
**Tel:** 416-297-6568 **Email:** aris.babikianco@pc.ola.org

# தைத்திருநாள் தமிழர் திருநாள், பெருநாள்: தமிழர் ஆண்டின் முதல்நாள்

மா.க.ஈழவேந்தன்
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்

தைபிறந்தால் வழிபிறக்கும் என்பது தமிழரிடையே பண்டுதொட்டு இன்று வரை தமிழர் நாவில் நடம்புரியும் சொற்றொடராக விளங்குகின்றது. ஆனால், ஆண்டுகள் பல உருண்டோடியும் தமிழனுக்கு நல்வாழ்வு பிறக்கவில்லை. உலகெல்லாம் சிதறுண்டு சீரழியும் தமிழனுக்கும் இந்தநிலை தான். ஆனால் ஈழத்தமிழன் நிலையோ மீளமுடியாத கவலையைத் தருகின்றது. எனினும், எந்நிலையிலும் நம்பிக்கை இழப்பதற்கு நாம் ஆயத்தமில்லை. நம்பிக்கையில்தான் தமிழர் மட்டுமல்ல மானிட இனமே வாழுகின்றது. நம்பிக்கை அழியாத தன்மை உடையது என்பது உலக இனங்களே ஒத்துக் கொள்கின்ற உண்மையாகும். நம்பிக்கை என்றும் வாழ்வை வழங்குகின்றது. (Hope is eternal) நம்பிக்கை மலைகளையே அசைக்கு என்று வலியம் விளம்புகின்றது. 'ஆண்டவன் மீது உனக்கு நம்பிக்கை இல்லை யெனினும் உன்மீது நம்பிக்கை வைத்து செயற்படு' என்று வீரத்துறவி விவேகானந்த அடிகளார் விளம்புகின்றார். 'Even if you don't have faith in God have faith in yourself'' என்பதுதான் விவேகானந்தரின் ஆங்கிலச் சொல்லலாட்சி. 'தெய்வத்தால் ஆகதெனினும் முயற்சி தன் மெய்வருந்தக் கூலி தரும்' என்றும் 'எண்ணி எண்யாங்கு எய்துவர் எண்ணியர் திண்ணியராக்ப்பெறின்' என்பதும் வள்ளுவர் வழங்கியுள்ள நம்பிக்கையூட்டும் வாய்மொழிகளாகும். 'God helps only those who help themselves'' (தமக்குத்தான் உதவியாய் இருந்தால் தான் தெய்வம் நமக்கு துணைநிற்கும்) மேலே கூறி கூற்றிற்களுக்கு மேலும் வலுவூட்டுகின்ற முறையில் எம் பொய்யாமொழிப் புலவர் தனது குடி செயல்வகை என்ற அதிகாரத்தில் 1023ஆம் குறவில் 'குடிசெயல் என்னும் ஒருவர்க்குத் தெய்வம் மடிதட்டித் தான்முந் துறும்' என்று கூறியுள்ளார். இதற்கு 'என் குடியை உயரச் செய்வேன் என்று முயலும் ஒருவனுக்கு ஊழ், ஆடையை இறுகக் கட்டிக்கொண்டு தானே துணைசெய்தும்' என்பது முனைவர் மு.வ. தரும் விளக்கம்.



## அரவிந்தனர் அறையும் கூற்று

இந்திய விடுதலை வரலாற்றில் தனியிடம் பெறும் விடுதலைப் போராளியாகவும் மெய்யியல் வல்லுனராகவும் விளங்கிய அரவிந்தர் அவர்கள் இன்றைய சூழ்நிலையில் ஈழத்தமிழர்க்கு ஏற்றவொரு கூற்றாக அமைவதினால் அதனையும் நாம் இங்கு தருகிறேன் 'You must fight for what you believe in. The present circumstances may not be in your favour, but future events will shape in the way your want' 'நீ எதில் நம்பிக்கை வைக்கிறாயோ அதற்காக நீ போராட வேண்டும். இன்றைய சூழ்நிலை உனக்குச் சார்பற்றதாக இருக்கலாம். ஆனால் எதிர்கால நிகழ்ச்சிகள் உன் சார்பில் அணைவது உறுதி) என்று அவர் கூறியது எல்லை மீறிய இன்னல்களுக்கு ஆளாகி நம்பிக்கை இழந்து வாழ்கின்ற தமிழனுக்கு தெம்பூட்டும் சொற்றொடராக அமைகின்றது.

## விழா எடுத்து வீழ்ந்தவன் தமிழன்

விழா எடுத்து வீழ்நதவன் தமிழன் என்று பேசுகின்ற அளவுக்கு பொருளற்ற பல விழாக்களை எடுத்த தமிழ் வீழ்ச்சி கண்டுள்ளான். ஆனால், தமிழரின் திருநாளாகிய தைப்பொங்கல் பொருள்பொதிந்த விழாவாகும். தமிழன் பல விழாக்களை பொருள் பொதிந்தவற்றையும், பொருளற்றவற்றையும் கொண்டாடியுள்ளான் என்பதற்கு ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தரின் பின்வரும் பாடல் சான்று பகர்கின்றது.

'ஐப்பசி ஓணவிா
கார்த்திகை விளக்கீடு,
மார்கழி ஆதிரைநாள்
நெய்ப்பூசம்
ஒண்புழுக்கள்
நேரிழையர் கொண்டாடும்
தைப்பூசம்
மாசி கடலாட்டு
பங்கு உத்தரம்
பதினெண் கணங்கள் தம்
அட்டமி நாள்'

என்று ஞானசம்பந்தர் நாவிலும் இவ்விழாக்கள் எதுவும் தமிழனின் முழுத் தனித்துவத்தைக் காட்டுவதாக அமையவில்லை. சிலவற்றில் தமிழ்ச் சாயல் உண்டு. பலவற்றில் வடநாட்டின் வல்லாண்மைக்கு நாம் ஆளாகி இருப்பதையே இவ்விழாக்கள் எடுத்துக் காட்டுகின்றன. ஆனால், இவற்றிற்கு முற்றிலும் மாறுபட்டு விளங்குவதுதான் தைப்பொங்கல் திருநாள். தைப்பொங்கல் திருநாள் என்ற சொற்றொடரே தனித் தமிழ் சொல்லாட்சியையும் தமிழன் அடையாளத்தையும் காட்டிநிற்கிறது.

## தைப்பொங்கல் வேறு: மகர சங்கராந்தி வேறு

தைப்பொங்கல் வேறு, மகர சங்கராந்தி வேறு. இங்கும் தமிழன் தனித்துவத்தைச் சிதைக்கும் முறையில் மகர சங்கராந்தி என்ற வடமொழிச் சொல்லாட்சி எம்மீது திணிக்கப்பட்டுள்ளது. வேறு சொற்களில் விளம்பின் வடநாட்டுப் பண்பாட்டுப் படையெடுப்பிற்குச் சான்றாய் இப்பெயர் மாற்றங்கள் ஏற்படுகின்றன. பண்பாட்டுப் படையெடுப்பு காலப்போக்கில் அரசியல் படையெடுப்பிற்கும் வழிவகுக்குமென்பதை நாம் உணர்ந்து என்றும் விழிப்போடு இருத்தல் வேண்டும்.

## சுப்பிரமணிய முதலியார் சுட்டிக்காட்டும் உண்மை

'தமிழர் பொங்கலுக்கு செய்கின்ற சடங்குகள் வடமொழியாளர் சங்கராந்திகைக்குச் செய்வதில்லை. வடமொழியாளர் செய்வனவற்றை தமிழர் செய்யும் ஏற்பாடு கிடையாது. எனவே, ஒருநாளை வெவ்வேறு வகையில் இவர்கள் அறிந்து கொண்டாடினர். எனவே பயிர்களுக்கு இன்றியமையாத வெப்பத்தைத் தந்து, உயிர்கொடுத்து வளர்ந்து வந்த கதிரவனை நோக்கி உழவர்களாகிய தமிழர்கள் அவ்வுதவியினால் வந்த புதிய விளைச்சலைக் கொண்டு கொண்டாடுவதாகிய பொங்கல் தமிழருக்கே சிறப்பாக உரிய விழாவாக விளங்குகின்றது என்பது வெளிப்படை' என்று தமிழறிஞர் சி.கே.சுப்பிரமணிய முதலியார் மொழிந்துள்ள கூற்றுக்கு நாமும் வழிமொழி கூறுவொமாக.

## போகிப் பண்டிகை

தைப்பொங்கல் விழா சிறப்பாக அமையப் பொங்கலுக்கு முதல்நாள் நாம் வதியும் இடமும் சுற்றாடலும் தூய்மைப்படுத்தப்படுகின்றது. இது போகிப் பண்டிகை என்று குறிப்பிடப்படுகின்றது. எம்மைச் சூழவுள்ள அழுக்குகள் அனைத்தும் போக்கப்படுவதனால் 'போகிப் பண்டிகை' என்று பெயர் பெற்றது போலும். மாதங்களில் நான் மார்கழி என்று கண்ணன் பகவத் கீதையில் பகர்ந்திருந்தாலும் 'பீடை நோய் பிடித்த மாதம் மார்கழி' என்று தமிழர்கள் 'கருதுவதனால் மார்கழியைப் போக்கி தையை வரவேற்கும் நிகழ்ச்சியாய் இது அமைகின்றது.

## உழவின் உயர்வை உலகுக்கு உணர்த்தும் நாள்

உழவின் உயர்வை உலகுக்கு உணர்த்தும் திருநாள் தைத் திருநாளாகும். 'பாடுபடுவர்க்கே இந்த பாரிடம் சொந்தமையா' என்ற கவிமணியின் கூற்றினை ஏற்று உலகின் அச்சாணியாக விளங்கும் உழவுத் தொழிலின் உயர்வை உவந்து போற்றும் விழாவாகவும் இப்பொங்கல் விழா அமைகின்றது. 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்: வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்' என்று பாட்டுக்கொரு புலவன் பாரதி உழவரின் உயர்வை விளக்கிச் சொல்கின்றார். ஆனால் எங்கள் வள்ளுவரோ 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்' என்று அன்றே கூறிய கூற்று என்றும் காலத்தால் 'அழியாத கூற்றாக, மெய்ப்பொருளாக விளங்குகிறது. உழவுத் தொழில் உயர்ந்து விளங்க உறுதுணையாக விளங்குவது ஞாயிற்றின் தோற்றமாகும்.

## ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றதும்

'ஞாயிறு போற்றதும் ஞாயிறு போற்றதும்' என்று கதிரொளி வீசும் கதிரவனுக்கு நன்றி செலுத்தப்படுகின்றது. 'இருள்கடிந்து உள்ளத்தே எழுகின்ற ஞாயிறே போன்று' இறையருள் தன் இதயத்தில் ஏற்பட்டுள்ளது என்று மணிமொழியாளர் - மாணிக்கவாசகர் மொழிந்துள்ள திருவாசகத் தொடரும் நன்மை ஆட்கொள்ளத்தான் செய்கின்றது.

## நன்றியுடைமை நவிலும் மாட்டுப் பொங்கல்

பொங்கலோ பொங்கல் என்று தைப்பொங்கலை எம் நெஞ்ச நிறைவோடு நாம் கொண்டாடிய நிலையில், அடுத்தநாள் நிகழ்ச்சி மாட்டுப் பொங்கலாக - பட்டிப் பொங்கலாக மலர்ந்துள்ளது. செங்கதிர்ச் செல்வனுக்கு நன்றி நவின்ற தமிழர் தம் உற்றார், உறவினருடன் கூடி மகிழ்ந்த தமிழன் தன் உழவுத் தொழிலுக்கு உறுதுயையாணக விளங்கிய ஏற்றம் தந்த எருதினையும், நனிசுவை மிக்க பால் தந்த பசுவினையும், ஆவினையும் - மறக்காத நன்றியுணர்வுள்ள விழாவாக மாட்டுப் பொங்கல் அமைகின்றது. 'உண்ணீா உண்ணீா' என்று தனக்குத் துணைநின்ற - ஏற்றம் தந்த எருதிற்கும் பசும்பால் தந்த பசுவிற்கும் தமிழன் உணர்வூட்டும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். தமிழனின் நன்றியுணர்வு மானிட சமுதாயத்தை மட்டும் தழுவி நில்லாது, விலங்கு உலகையும் வியந்து போற்றுகின்ற உயர் உள்ளத்தையும் உலகிற்கு எடுத்துக் காட்டுகின்றது. எனவே, இவ்வாண்டுப் பொங்கலை வரவேற்கும் நாம் 'மன்னி சுவையென இனிக்கும் எம் வண்டமிழ் பரப்பும் ஆண்டாக' வரவேற்று வாழ்த்துவோமாக.

## ஏக்கம் தந்தாய் கடந்த ஆண்டுகள் அமைந்திடினும்.....

நாம் இவ்வாண்டு பொங்கலை வரவேற்கின்றபோது. நடந்த கசப்பான நிகழ்ச்சிகளையும் மறப்பதில்லை. 'அந்த நாட்களிலும் சொந்தங்கள் கூறி முற்றங்கள் ஒவ்வொன்றிலும் கோலமிட்டுத் தாளம் போட்டு ஏற்றிய பானைகள்' நம் நினைவுக்கு வருகின்றன. நிறைந்த செவ்வரிசிப் பொங்கல் எழுகின்ற ஞாயிற்றோடு வரவேற்போம். ஆனால் அன்று நாம் பூமியெங்கும் பொங்கிய அந்த ஆனந்தம் எங்கே? இன்று எமக்கு பூமியே இல்லை ஐயா, பொங்கிப் படைக்க தலையே இல்லா எங்களுக்கு - தலை வாழையிலைக்குத் தவிக்கும் எங்களுக்கு, கூடிக்குலவிக் கும்மாளமிட்ட குடும்பங்கள் இன்று எங்கே என்று தவிக்கும் எமக்கு, நாம் எவ்விதம் இவ்வாண்டுப் பொங்கலை புத்துணர்வோடு கொண்டாட முடியும் என்ற ஏக்க உணர்வு எம்மை வாட்டி வதைக்கிறது' என்பதை நாம் மறப்பதற்கில்லை. 2022ஆம் ஆண்டு வருகின்ற தைப்பொங்கல் திருநாள் ஏதோவொரு திருப்புமுனையை தமிழருக்கு குறிப்பாக ஈழத்தமிழருக்கு ஏற்படுத்துமென்ற நம்பிக்கை எமக்குண்டு. எனவேதான் எதையும் தாங்கும் இதயம் படைத்த அறிஞர் அண்ணா வழியில் சிந்திக்கின்ற நாம், கவிஞர் கருணானந்தம் தந்த பின்வரும் கவிதையை நினைவுகொண்டு இக்கட்டுரையை நிறைவுசெய்ய விழைகின்றோம்.

இதோ அவர் தந்த கவிதை:

'உலகம் வியக்க நிலவிய புகழும்,
கழகம் வளர்த்த பழந்தமிழ் மொழியும்
அறநெறி பரப்பும் குறள்முறை தழுவிப்
பிறரைப் பணியாத் திறனும்
தன்னேரில்லாத் தமிழக உழவர்
பொன்னேர் பூட்டிச் செந்நெல் விளைத்தே
ஆண்டின் பயனை அடைந்திடும் பெருநாள்:
தூண்டிடும் உவகையில் துள்ளிடும் திருநாள்!'

என்று கவிஞர் கருணானந்தம் கூறினின்ற கூற்றுக்கு வழிமொழி கூறி வரவேற்க விரும்புகின்றோம். கவிஞர் குறிப்பிடுகின்ற 'தமிழக உழவர்' என்ற சொற்றொடருடன் தமிழீழ உழவரையும் இணைத்து இன்பம் காணவிழைகின்றோம்.

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**



உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

Chapel Ridge FUNERAL HOME & CREMATION CENTRE



## Serving the Tamil Community of Greater Toronto



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.



CHRISTEEN SEEVARATNAM
**(416) 258-6759**

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாம்
**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1
www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca

# ஈழத்துத் திருக்கோவில்கள் 981



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## வருத்தலைவிளான் மருதடிப்பிள்ளையார் கோவில் தெல்லிப்பளை

*"ஐந்து கரத்தனை ஆனைமுகத்தனை*
*இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை*
*நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை*
*புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே."*

அற்புதங்களை அருளி அடியவர்களைத் தன்வசம் ஈர்க்கும் தெய்வீகசக்தி, பக்தர்களுக்குச் சோதனைகளைக் காட்டித் தன்வசப்படுத்திய பல சம்பவங்கள் அனைவரும் அறிந்ததே. இவ்வாறான நிலையிலே பல சோதனைகளின் பின்னர் வல்லிபுர ஆச்சாரியார், தந்தையின் வழிச்சென்று வருத்தலைவிளான் மருதடிப்பிள்ளையாருக்கு மடாலயம் அமைத்து மகிழ்ந்தார். அவ்வூர் அன்பர்கள், விக்னங்கள் தீர்ப்பவனை அல்லும் பகலும் கைதொழுது போற்றிவரலாயினர். பரவும் அடியவர்கள் நெஞ்சிலே குடிகொள்ளும் கணபதி, இவ்வூர்மக்கள் பொருளா-லும், அறிவாலும் ஏனைத் திறத்தினாலும் மகிழ்வெய்த, மருதடிப்பிள்ளையாராக வருத்தலைவிளானிலே எழுந்தருளியுள்ளார்.

பிள்ளையாரின் அருளால் சகல வளங்களையும் பெற்று வாழ்ந்தவரும், வியாபாரியுமான கந்தர் என அழைக்கப்பட்ட கணபதிப்பிள்ளை கந்தையா என்பவர், மருதடிப்பிள்ளையார்மீது அளவிலா அன்பும், பக்தியும் கொண்டவராக விளங்கினார். மடாலயத்துள் எழுந்தருளி ஊரார்க்கு நலன்விளைவிக்கும் மருதடிப்பிள்ளையார் சந்நிதி, பேராலயமாக உருவெடுக்கவேண்டும் என்ற ஆழ்ந்த எண்ணம், அடியவர் கந்தர் அவர்களுடைய எண்ணத்திலே ஆழமாக வேரூன்றியது.

மருதடிப்பிள்ளையார் அருளால் பெருநிதிபெற்ற அவ்வள்ளல், மரு-தடிப் பிள்ளையாருக்கு அர்த்தமண்டபம் அமைக்க அவாவுற்றார். நினைவைச் செயலாற்ற முனைந்து, பணியாட்களைக் கொண்டு மண்டபம் அமைக்கும் வேலை-யையும் ஆரம்பித்தார். ஆனாலும் அவர் எண்ணம் நிறைவேறமுடியாமல் மண்டபம் அமைக்கும் இடத்தில் மருதமரக்கிளையொன்று பரந்து காணப்பட்டமையால், மண்டபம் அமைக்கும் பணி தாமதமடையநேரிட்டது. இறைகைங்கரியம் இவ்வாறு தடைப்படுகின்றதே என்று எண்ணும்பொழுது அவர் இதயம் கனத்தது.

மருதவேர்க்குமிழில் குடியிருக்கும் விநாயகப்பெருமானால் ஆட்கொள்ளப்பட்டதன் வெளிப்பாடாகக் கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்தது. மருதமரக்கிளையை உற்று நோக்கும்போது மருதடி விநாயகரின் கரம்போல விளங்கும் அக்கிளையை அழிக்க அவர் மனம் தயங்கியது.

அடியவர் கந்தரின் துயரைக் கண்ணுற்ற பக்தர்கள், "மருதடி விநாயகனுக்கு அர்த்தமண்டபம் வேண்டும் என்ற திருவுளம் இல்லைப்போலும். இதற்காக மனம் சோர்வடையவேண்டாம்" என ஆறுதல் கூறினார்கள். மருதடியானுக்குத் தன்னால் அர்த்தமண்டபம் அமைக்கமுடியவில்லையே என்ற ஆராமையுடன், மருதடியானை நோக்கி,

*"என் மனம் குளிர மண்டபம் அமைத்து*
*உன் கோவில் அழகு பார்க்க விரும்பிய*
*அடியேன் ஆசை நிராசை யாவதை*
*என்னால் தாங்க முடியாது"*

என முறையிட்டு, காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கினார். தம்மையும் மறந்து துயரத்துள் அழுந்திச் செய்வதறியாது தவித்தார்.

இந்நிலையில் வேண்டுவார்க்கு வேண்டுவன ஈயும் விநாயகப்பெருமான், கந்தருக்கு அருள்பாலிக்கத் திருவுளங்கொண்டார். மருதமரத்தடியானே தஞ்சமென முறையிட்டு, கந்தரும் பக்தர்களும் சூழ்ந்திருந்தவேளையில், மருதமரக்கிளையிலிருந்து பேரொலி கேட்டது. கந்தரும், அன்பர்களும் அவ்வொலியைக்கேட்டு அதிர்ச்சியுற்றனர். மறுகணம் அர்த்தமண்டபம் கட்டத் தடையாகவிருந்த மருதின் கிளை முறிந்து, கோவிலுக்கு எச்சேதமுமின்றி அப்பால் விழுந்துகிடந்தது.

திகிலுற்ற அடியார் கூட்டம் மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து, கரங்களைத் தலைமேற் குவித்தவாறு, கண்ணீர்மல்கி, ஆனந்தக்கூத்தாடி மகிழ்ந்தனர். கணபதி தாசரான கந்தர், அழுது, தொழுது ஆனந்தக் கூத்தாடினார். தொப்பை அப்பனின் அற்புதத்தை எண்ணிப் பரவசமடைந்தார். மருதடிப்பிள்ளையார் தமக்கிரங்கிய திருவருளுக்கு அடிமையாகித் தம்மையே அர்ப்பணித்தார். மருதடிப்பிள்ளையாரின் அற்புதங்களைக் கேள்வியுற்ற அயல்கிராமங்களிலுள்ள மக்களும், மருதடிப்பிள்ளையாரிடத்து அகலாப்பற்றும், பக்தியும் கொண்டனர். இவ்வாறாக ஆலயத்தின் அர்த்தமண்டபவேலைகள் சிறப்பாக நிறைவேறியது.

மருதடிப்பிள்ளையார்மீது ஆரா அன்பு கொண்ட பக்தர்கள், ஆலயத்தின் வளர்ச்சியிலே பலநிலைகளிலும் பங்குகொண்டு பணியாற்றியுள்ளனர். இவர்களுள் இளமை முதல் மருதடியானிடத்து அன்புகொண்ட அன்பர், முருகேசு பொன்னம்பலம் என்பவர் குறிப்பிடத்தக்கவர். வர்த்தலைவிளானில் வாழ்ந்த இவர் சிலகாலத்தின் பின்னர் மலாயா சென்று சீரும் சிறப்புமாக வாழ்ந்து வந்தார். சென்ற இடத்திலும் மருதடியானை மனதிருத்தி அல்லும் பகலும் எண்ணும் பக்தராகத் திகழ்ந்தார். எப்படியாவது மீண்டும் வர்தலைவிளான் சென்று, மருதடியானுக்கு அடியவனாகச் சேவை செய்து வாழவேண்டும் எனப் பெருவிரும்பம் கொண்டார். அவர் எண்ணம் நிறைவேற மலாயாவிலிருந்து வர்த்தலைவிளானை வந்தடைந்தர். "தன்கடன் பணிசெய்து கிடப்பதே" என வாழத் தலைப்பட்டார். *வளரும்...*


ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கு
இணையத்தில் தமிழ் கற்பிக்க
ஆசிரியர்கள் தேவை
உலகப் புகழ் பெற்ற ஒஸ்ரேலியா - பாரதி பள்ளியின் உலகளாவிய தமிழ் வகுப்புகள், கனடாவிலிருந்து இயங்க உள்ளன.
முன் அனுபவம் அவசியமில்லை.
முறையான பயிற்சி வழங்கப்படும்.
பாரதி பள்ளி
BHARATHI ACADEMY
www.bharathi.org.au
Email: admin@bharathi.org.au
Tel.: 416 400 1053
WhatsApp: +94 77 055 3143


## கடந்ததையும் கடப்பதையும் (18)

**- உமா மோகன் -**

*சிறப்புக்குரிய சிறுப்பிட்டியைத் தாண்டியதும் - கண்களுக்கு*
*குளிர்ச்சியான வயல்வெளியும், நெருக்கமான வாழைகளும்*

*பசிய நல்ல மரங்களோடு நீர்நிலைகள்*
*அதிகம் உள்ள நீர்வேலிக்கு வந்திடலாம்*

*கன மழையின் நீர் கரைபுரண்டோடி*
*கிழக்கு எல்லையில் நிலைகொண்டு நீர்நிலையாகி - அதன்*

*எல்லையில் இருப்பதால் நீர்வேலி ஆனதாம் இப்பகுதி*

*மனதைக் கவரும் மருத நிலப்பகுதி - இது*
*பெருமளவில் மதம் மாறா மக்களையும் கொண்டதாம்*

*அந்நியர் ஆட்சிக் காலங்களில், இன்றும் - இறை*
*சந்நிதிகள் அதிகமுள்ள நீர்வேலியதில் - முன்னாள்*

*கொள்ளை நோய்களால் அழிவுகள் பெருக*
*பிள்ளையாரை நேர்ந்து ஆடினராம் 'வசந்தன்' எனும்*

*கோலாட்ட வகைகொண்ட காவியத்தை - இன்று*
*பரந்துபட்டு பல இடத்தில் ஆடினாலும் - அது*

*'பிறந்த இடம் நீர்வேலி' என்பதாக மிக*
*அழுத்தமாகச் சொல்லுகிறார் அண்ணாவி பரராஜசிங்கம்*

*கால்நடை வளர்ப்போடு குடிசைக் கைத்தொழிலிலும் - நன்கு*
*கைதேர்ந்தோர் நீர்வேலி ஊர்க்காரர் - இவர்*

*வீரம் நிறைந்தவர் என்பதனை - மாட்டுச்*
*சவாரித் திடல்களும் பறைசாற்றி நின்றபோதும் - அங்கு*

*காந்தி வழி வந்தவர்கள் கால்த்தடமும் பட்டதனால் - அவர்களைச்*
*சோர்ந்திட வைத்ததுவும் வேதனையே - அங்கு*
*ஆண்டுகள் இரண்டிற்குள் எத்தனை மாற்றங்கள் - அன்று*

*பசிய வயல்வெளிகள் வரண்டு போயின*
*வாழைமரங்களும் அழிந்தே இருந்தன - வீட்டுக்*

*கூரைகளும் சரிந்து கிடந்தன - பெரிய*
*பேரிடர் நிகழ்ந்ததை உணர்ந்துமே*
*தொடர்கின்றோம் எம் பாதைவழிப் பயணத்தை...* *(தொடரும்)*

# தைப்பொங்கல் தமிழர்களின் திருநாள்

- குரு அரவிந்தன்




*(ஆதிகாலத்தில் விவசாயமே தமிழர்களின் முதன்மைத் தொழிலாக இருந்தது. தமிழர்கள் விவசாயிகளாக இருந்ததால் இயற்கை சார்ந்த பூமித்தாய்க்கும், சூரியனுக்கும், மற்றும் தங்கள் விவசாயத்திற்கு உதவியாக இருந்த கால்நடைகளுக்கும் நன்றி சொல்லும் நாளாகத் தைப்பொங்கலைக் கொண்டாடினர்.)*

**தை**ப்பொங்கல் தமிழர் திருநாளாகும். உழவர் திருநாள் என்றும் இதை அழைப்பர். "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்று பொதுவாகப் பெரியோர் சொல்வார்கள். ஆங்கில நாட்காட்டியின்படி தைமாதம் 14 ஆம் திகதி அல்லது 15 ஆம் திகதியில் தைப்பொங்கல் வரும். அதுவே தமிழ் நாட்காட்டியில் தைமாதம் முதலாம் திகதியாகும். இந்தியா, இலங்கை, கனடா, சிங்கப்பூர், மலேசியா, தென்னாபிரிக்கா, மொரிசஸ் மற்றும் தமிழர்கள் புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழர்களால் தைப்பொங்கல் திருநாள் கொண்டாடப் படுகின்றது. ஆதிகாலத்தில் விவசாயமே தமிழர்களின் முதன்மைத் தொழிலாக இருந்தது. தமிழர்கள் விவசாயிகளாக இருந்ததால் இயற்கை சார்ந்த பூமித்தாய்க்கும், சூரியனுக்கும், மற்றும் தங்கள் விவசாயத்திற்கு உதவியாக இருந்த மாடுகளுக்கும் நன்றி சொல்லும் நாளாகத் தைப்பொங்கலைத் தொன்று தொட்டுக் கொண்டாடி வருகின்றனர். சூரியன் மகரராசிக்குச் செல்லும் தினமே தைப்பொங்கல் தினமாகும். தைப்பொங்கலுக்கு மறுநாள் மாட்டுப் பொங்கல், அல்லது பட்டிப் பொங்கல் என்று சொல்லி, உழவர்களுக்குத் துணையாக இருந்த மாடுகளுக்குப் பொங்கிப்படைப்பர். இலங்கையில் பொதுவாக 2 நாட்களும், புலம்பெயர்ந்த நாடுகளில் கால்நடைகளை வீட்டில் வளர்க்க முடியாது என்பதால் ஒரு நாள் பொங்கலை மட்டும் கொண்டாடுவார்கள், தமிழ் நாட்டில் சில இடங்களில் போகிப்பண்டிகை, தைப்பொங்கல், பட்டிப்பொங்கல், காணும் பொங்கல் என்று நான்கு நாட்களும் கொண்டாடுகிறார்கள். போக்கி என்ற சொல்தான் மருவி போகி என்றாகியது. போகிப்பண்டிகைக்காகப் பழையன கழிதலும், புதியன புகுதலும் என்பது போல, வீடு, வளவுகளைச் சுத்தம் செய்வர். தமிழ் நாட்டின் சில இடங்களில் ஜல்லிக்கட்டு, வழுக்கு மரம் ஏறுதல், உரி அடித்தல் போன்ற பல விதமான விளையாட்டுப் போட்டிகள் இத்தினங்களில் இடம் பெறுகின்றன.

ஆறாம் நிலத்திணையான கனடா, பனியும் பனி சூழ்ந்த பிரதேசம் என்பதால், தைமாதம் பனி விழும் காலமாகையால், வெளி முற்றத்தில் பானை வைத்துப் பொங்க முடியாது. அதனால் தமிழர்கள் தைப்பொங்கலை வீட்டுக்குள்ளேயே பொங்கிக் கொண்டாடுவர். பொங்கலுக்கு மின்சார அடுப்புத்தான் பாவிப்பார்கள். பொங்கலுக்குத் தேவையான பொருட்கள் அடங்கிய பொதிகள் கடைகளில் விற்பனைக்கு வைத்திருக்கிறார்கள். குறிப்பாக வாழையிலை, வெற்றிலை, மாவிலை, கரும்பு, தேங்காய், அறுகம்புல், பூக்கள் போன்றவற்றை விசேடமாக வேறு நாடுகளில் இருந்து தருவிப்பார்கள். கனடாவில் உள்ள கோயில்களிலும் தைப்பொங்கல் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். இதைவிட தமிழர்களின் சங்கங்கள், ஒன்றியங்கள் தமது அங்கத்தவர்களுடன் தைப்பொங்கலை மண்டபங்களில் கொண்டாடுவர். 500 குடும்பங்களுக்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட பீல்பிரதேச குடும்பமன்றத்தினர் "பொங்கலோ பொங்கல்" என்ற எனது சிறுவர் நாடகத்தை மேடையேற்றிப் பல்லின மக்களிடையே பாராட்டைப் பெற்றிருந்தனர். இந்த நாடகத்தில் கனடாவில் பிறந்த சிறுவர் சிறுமியர் தமிழில் பேசி, பாடி நடித்திருந்தனர். அதில் இடம் பெற்ற பொங்கல் பற்றிய எனது சிறுவர் பாடலை, மகாஜனக்கல்லூரி வெளியிட்ட "குழந்தைக் கவிதைகள்" நூலில் இருந்து உங்களுக்காகத் தருகின்றேன். உங்கள் பிள்ளைகளுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும் எங்கள் பாரம்பரியத்தைச் சொல்லிக் கொடுங்கள்.

தைபிறந்தால் வழிபிறக்கும்
பொங்கலோ பொங்கல்
தமிழர்களின் திருநாளாம்
பொங்கலோ பொங்கல்..

கதிரறுத்துப் பொங்கிடுவோம்
பொங்கலோ பொங்கல்
கதிரவனை வணங்கிடுவோம்
பொங்கலோ பொங்கல்..

உழைப்பாலே உயர்ந்திடுவோம்
பொங்கலோ பொங்கல்
ஒன்றுபட்டு வாழ்ந்திடுவோம்
பொங்கலோ பொங்கல்..

கனடாவில் பட்டாசு கொளுத்துவது என்றால் அதற்கு முற்கூட்டியே அனுமதி பெற்றிருக்க வேண்டும். தைப்பொங்கலன்று கலை நிகழ்வுகளும் இடம் பெறும். தமிழ் வானொலிகள், தமிழ் தொலைக்காட்சிகளில் பொங்கல் நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன. தமிழ் பத்திரிகைகளும், இதழ்களும் பொங்கல் பற்றிய கட்டுரைகளையும், நிகழ்வுகள் பற்றிய படங்களையும் வெளியிட்டு ஆதரவு தருகின்றன. கோவிட்-19 பேரழிவு காரணமாக 2020-2021 ஆண்டுகளில் சுகாதார சட்ட, திட்டங்களுக்கு அமைய கட்டுப்படுத்தப்பட்ட அளவு மக்களே பொங்கல் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர். ஆர்வமான மக்கள் "சூம்" என்று சொல்லப்படுகின்ற மெய்நிகர் நிகழ்வுகளிலும் கலந்து கொண்டாடுகின்றனர். கனடிய தமிழ் மக்கள் பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் புலம் பெயர்ந்தாலும், தமிழர்களின் மொழி, பண்பாடு, கலாச்சாரம் போன்றவற்றை புலம் பெயர்ந்த மண்ணில் கட்டிக்காப்பதில் மிகவும் கவனமாகச் செயற்படுகின்றார்கள்.

தாயகத்தில் பொதுவாக சூரியன் உதிக்கு முன் எல்லோரும் எழுந்து குளித்து, புத்தாடை அணிந்து பொங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்வர். முதலில் முற்றத்தில் தண்ணீர் தெளித்து மொழுகி, அதன்பின் கோலம் போடுவார்கள். முதல்நாளே பொங்குவதற்குத் தேவையான பொருட்களை எல்லாம் தயாராக எடுத்து வைத்து விடுவார்கள். அடுப்புக்காகச் செங்கட்டி அல்லது அளவான மூன்று பெரிய கல்லை வைப்பார்கள். கோலத்தின் உள்ளே வடகிழக்கு மூலையில் தலைவழையிலை போட்டு, அதிலே நெல் அல்லது அரிசியைப் பரப்பி நிறைகுடம் வைப்பர்.

சைவசமயத்தவர் மாட்டுச்சாணத்தில் பிள்ளையார் பிடித்து அறுகம்புல் செருகி அருகே வைப்பார்கள். வாழையிலையில் வெற்றிலை பாக்கு வாழைப்பழம், மாம்பழம், மஞ்சள், கரும்புத் துண்டுகள் போன்றவற்றையும் வைப்பார்கள். பொங்குவதற்குப் புதிதாக வாங்கிய மண்பானையில் பாலும் தண்ணீரும் கலந்து அடுப்பில் வைப்பர். பொங்கிச் சரியும் போது "பொங்கலோ பொங்கல்" என்று உரக்கச் சொல்லிச் சிறுவர் சிறுமியர் பட்டாசு கொளுத்தி மகிழ்வர். பொங்கல் தயாரானதும் தலைவாழை இலையில் படைத்து அத்துடன் வாழைப்பழம், மோதகம், வடை, அவல், கடலை மற்றும் பலகாராங்கள் போன்றவற்றையும் படைத்து சூரியனை வணங்குவார்கள். அதன்பின் உறவுகள் எல்லோரும் ஒன்றாக அமர்ந்து வாழைப்பழத்துடன் பொங்கல் சாப்பிடுவர். மறுநாள் பட்டிப் பொங்கல் செய்வார்கள். கோயிலுக்கும், உறவினர்களின் வீடுகளுக்கும் சென்று விருந்துண்டு வருவர்.

எமது மாணவப் பருவத்தில் தைப்பொங்கல் காலத்தில் வானத்தில் பட்டம் விடுவது முக்கிய பொழுது போக்கு விளையாட்டாக இருந்தது. பாம்பன், கொக்கு, பிராந்தன், கொக்கன், படலம், எட்டுமூலை, பெட்டிக்கொடி, நட்சத்திரம் என்று பல வகையான பட்டங்கள் வானத்தில் பறக்கும். சிறுவர்கள் பொதுவாகக் பாம்பன், கொக்கு, படலம் போன்ற பட்டங்களைத்தான் பறக்க விடுவார்கள். அவற்றைக் கட்டுவது இலகுவானது. பாம்பன் பட்டத்திற்கு நீண்ட வால் இருக்கும், கொக்கு பட்டத்திற்கு வால் இருக்காது. இதிலும் ஒற்றை நொச்சை, இரட்டை நொச்சை என்று இருக்கும். பராந்தன், கொக்கன், எட்டுமூலை, பெட்டிக்கொடி போன்றவை கட்டுவது கொஞ்சம் கடினமானது என்பதால் பெரியவர்கள்தான் அப்படியான பட்டங்களைப் பறக்க விடுவர். பெரிய பட்டங்களுக்குப் பச்சைப் பனைமட்டை நாரை மிகவும் கவனமாக கத்தியால் மெல்லியதாகச் சீவி விண் செய்வார்கள். விண் பூட்டிய பட்டங்கள் வானத்தில் பறக்கும் போது பல மைல் தூரத்திற்கு விண் கூவும் சத்தம் கேட்கும். குரு விளையாட்டுக் கழகத்தில் அது ஒரு போட்டியாகவும் நடக்கும். காங்கேசந்துறையில் இன்ஸ்பெக்டர் குமார் என்று ஒரு பொலீஸ் அதிகாரி இருந்தார். ஒரு நாள் அவர் பொலீஸ்வண்டியில் குரு விளையாட்டுக் கழகத்திற்கு வந்து விண் பூட்டிய பட்டங்கள் எல்லாவற்றையும் இறக்கச் சொன்னார். அருகே உள்ள காங்கேசந்துறை விமானத் தளத்தின் "வயலெஸ் சிக்னல்" இதனால் தடைப்படுவதாகக் காரணம் சொன்னார். அன்று அவர்தான் தான் எமது பாரம்பரிய விளையாட்டுக்கு முற்றுப்புள்ளி வைப்பதைத் தொடக்கி வைத்தார்.

புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை போன்ற சங்க இலக்கியங்களில் "தைத்திங்கள்" பற்றிக் குறிப்புகள் இருக்கின்றன. "தைத்திங்கள் தண்கயம் படியும்", "தைஇத் திங்கள் தண்ணிய தரினும்" போன்ற பாடல்களைக் குறிப்பிடலாம். ஆனால் தைப்பொங்கல் என்ற சொல் பாடல்களில் பாவிக்கப்படவில்லை. சிலப்பதிகாரத்தில் இந்திரவிழா பொங்கல் பற்றிய குறிப்புக்கள் இருக்கின்றன. "வரப்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும்.." என்று உழவுத் தொழில் பற்றி ஔவையார் குறிப்பிடுகின்றார். "சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால் - உழந்தும் உழவே" என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

சினிமாப்பாடல்கள் கூட, அறுவடைக்குக் காத்திருக்கும் நெற்கதிர்கள் முற்றித் தலைசாய்த்திருப்பதை "வளர்ந்து விட்ட பருவப் பெண்போல் உனக்கு வெட்கமா, தலை வளைந்து சும்மா பார்க்கிறியே தரையின் பக்கமாய்" என்று கவிஞர் மருதகாசி "பிள்ளைக்கனி அமுது" படத்திற்காக நெற்கதிர்களைப் பெண்கள் நாணத்தோடு தலை குனியும் காட்சியை ஒப்பிட்டு எழுதியிருந்தார். சுண்ணாகத்தில் இருந்து மாசியப்பிட்டி வழியாகச் சண்டிலிப்பாய் செல்லும் போது வழுக்கி ஆற்றின் கரையோரமாக அழகான பச்சைப் பசெலென்ற வயற்காட்சிகளை நான் பார்த்து ரசித்த போதெல்லம் இந்தப் பாடல் நினைவில் வரும். இதேபோல இன்னும் சில சினிமாப்பாடல்கள் இருக்கின்றன. நிலவே நீ சாட்சி படத்தில் "தை மாதப் பொங்கலுக்கு", தளபதி படத்தில் "தை பிறக்கும் நாளை விடியும் நல்ல வேளை", மகாநதி படத்தில் "தைப்பொங்கலும் வந்தது பாலும் பொங்குது" போன்ற சில சினிமாப் பாடல்கள் தைப்பொங்கல் திருநாளை நினைவூட்டுகின்றன. பாவேந்தர் பாரதிதாசனும், "தைம்முதல் நாள் பொங்கல் நன்னாள்" என்று தைப்பொங்கல் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

எமது பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு எமது அடுத்த தலைமுறையிரிடம் இருப்பதால் இத்திருநாளைப் பற்றி, முக்கியமாகப் புலம்பெயர்ந்த அடுத்த தலைமுறையினருக்கும் அறியத்தருவோம்.

இட்லி குக்கர் விற்பனைக்கு உண்டு



ஒரே நேரத்தில் 100 இட்லி செய்யக்குடிய இட்லி குக்கர் விற்பனைக்கு உண்டு.
$ 200
தொடர்புகளுக்கு:
(905) 472-9601


(சென்ற வார தொடர்ச்சி) (அத்தியாயம் 39)

# கல்கியின் பொன்னியின் செல்வன்

## வந்தியத்தேவன் பழையாறைக்கு திரும்பும் பயணம்

மேல் மாடத்தில் நின்ற அநிருத்தர் செம்பியன் மாதேவியிடம் 'தேவி தங்களிடம் முக்கியமான விடயமாகப் பேச வேண்டும் அரண்மனைக்குள் போகலாமா?' என்றார். குந்தவையை நோக்கி 'அம்மா உன்னிடம் பிற்பாடு வருகிறேன்' என்றார். குந்தவை மிகப் பயம் கொண்டாள் இந்த மனிதர் அறிவும், ஆற்றலும் படைத்த மகான் இவர் வந்தியத்தேவனை சிறை செய்ய கட்டளையிடும் போது எதிர்த்து பேச முடியவில்லை. வரட்டும் நானும் அவரை பேச்சினால் வெல்வேன் என்றபடி அந்தப் புரம் நோக்கி விரைந்தாள். செம்பியன் மாதேவியும், அநிருத்தரும் உரையாடிக் கொள்ள அமர்ந்தனர். செம்பியன் மாதேவி, 'பொன்னியின் செல்வர் பற்றிய செய்தி உண்மைதானா? அவனைப் பற்றி என்னென்ன கனவு கண்டோம் மூன்றுலகையும் ஆளப்பிறந்தவன் என்று எத்தனை தடவை பேசியிருக்கிறோம். இப்படி நடந்தது உண்மைதானா?' என்றார். அதற்கு அநிருத்தர், 'அது உண்மை என்று சொல்ல முடியாது நாட்டில் பரவியுள்ள செய்தியால் மக்கள் பழையாறில் மட்டுமல்ல தஞ்சாவூரிலும் ஒரே கொந்தளிப்பு. என்ன விபரீதங்கள் நடக்கப் போகின்றதோ தெரியவில்லை. மக்கள் பழுவேட்டரையர்களின் அரண்மனையை சூழ்ந்து கொண்டு இருக்கிறார்கள்' என்றார் அநிருத்தர். செம்பியன் மாதேவி, 'இது என்ன பயங்கரமான செய்தி மதுராந்தகன் பழையாறை வந்து விட்டது நல்லதாய் போய்விட்டது அல்லது அவனிலும் பழி வந்திருக்கும் என் மகன் மதுராந்தகனும் மாறிப் போய் இருக்கிறான்' என்றார். அதற்கு அநிருத்தர், 'தாயே அவர் மாற்றம் நன்றே மதுராந்தகன் இந்த ராஜ்ஜியம் தனக்குரியது என்று கருதுகிறார். சக்கரவர்த்திக்குப் பின்னர் தான் ஆள வேண்டும் என்று ஆசைப்படுகிறார். அது நியாயமான ஆசை அவர் மனதில் வேரூன்றி விட்டது. அதை தடுப்பதை விட சோழ தேசத்திற்கு நன்மை பயக்கும் பொருட்டு அதை நிறைவேற்றுவதே நன்று' என்றார். 'ஐயோ! இது என்ன விபரீதக் காலம். நீரும் சோழ தேத்திற்கும், சக்கரவர்த்திக்கும் சதி செய்யத் துணிந்தீரோ!' என்றார் தேவி. 'பெருமாட்டி சக்கரவர்த்திக்கு துரோகம் செய்ய நான் கனவிலும் நினைத்ததில்லை அவரின் கட்டளையின் பெயரில் தங்களிடம் விண்ணப்பிக்க வந்தேன். மதுராந்தகன் சிம்மாசனம் ஏற விரும்புகிறார் அதற்காக பழுவேட்டரையரும் சதி செய்கிறார் சக்கரவர்த்தி மதுராந்தகருக்கு முடி சூட்டிவிட்டு சிம்மாசனத்தில் இருந்து விலகிக் கொள்ள விரும்புகிறார் அதற்கான சம்மதம் பெற்றுத்தர என்னை உங்களிடம் அனுப்பினார்' என்றார் அநிருத்தர். இதற்குப் பதிலாக செம்பியன் மாதேவி, 'மந்திரியாரே சக்கரவர்த்தி அவ்விதம் செய்ய விரும்பலாம் அதற்கு என் சம்மதம் கிடையவே கிடையாது என் பதியின் விருப்பத்திற்கு மாறாக இந்தக் காரியம் செய்ய நான் ஒப்புக் கொள்ள மாட்டேன் கல்விக் கடலில் கரை கண்ட முதல் அமைச்சரே! முறை தவறான காரியம் செய்ய எப்படி என்னிடம் வந்தீர்? சோழ சிங்காசன உரிமை பற்றி தமக்கும், எனக்கும் மட்டும் தெரிந்த சில உண்மைகள் உண்டு என்பது மறந்து விட்டதா?' என்று கேட்க, 'தேவி தமக்குத் தெரியாத சில உண்மைகள் கூட எனக்குத் தெரியும் ஆனால் சக்கரவர்த்தியின் தூதுவனாக இங்கு வந்தேன்' என்றார். அதற்கு செம்பியன் மாதேவி, 'உம் மதி நுட்பமும், இராஜ தந்திரமும் உலகம் அறிந்தவை. உம் சாமர்த்தியத்தை காட்டி வாதிட வேண்டாம் இந்த நாட்டை ஆண்டவன் காப்பாற்றுவான்' என்றார். அதற்கு அநிருத்தர், 'இந்த நாட்டிற்கு ஆபத்து வந்துவிட்டது சனங்களோ ஆத்திரமும், கோபமும் கொண்டுள்ளனர் இலங்கையில் இருந்து பூதிவிக்கிரம கேசரி படை திரட்டிப் புறப்பட்டு விட்டார் ஆதித்தகரிகாலன் செய்தி கிட்டும் போது வடதிசை படையுடன் தஞ்சை நோக்கி வருவான். பழுவேட்டரையரும், சிற்றரசர்களும் ஏற்கனவே படை திரட்டி வைத்துள்ளனர். பெரும் உள்நாட்டு யுத்தம் வருவது நிச்சயம். எல்லோரும் அழிவதும் நிச்சயம் இதைப் பார்த்துக் கொண்டிருப்பதை விட அதை தடுத்து நிறுத்துவதே மேன்மையானது இதற்கு ஒரே மேலான வழி மதுராந்தகன் சிம்மாசனம் ஏறுவதே' என்றார். அந்த வேளை மதுராந்தகன் 'அம்மா அருள்மொழிவர்மரைக் கடல் கொண்டு விட்டதாம்' என்று கூறிக்கொண்டு உள்ளே வந்தார்.

அப்பொழுது அநிருத்தர் 'பெருமாட்டி நீங்கள் தான் உங்கள் மகனுக்கு ஆறுதல் கூற வேண்டும் நான் மீண்டும் வருகிறேன்' என்றபடி வாசற்படி தாண்டிச் செல்ல, மதுராந்தகன், 'இவர் தான் என் முதற் சத்துரு உங்களிற்கு துர் போதனை செய்ய இங்கு வந்தாரோ?' என்றான். முதல் மந்திரி புறப்பட்டு குந்தவையின் அரண்மனையை அடைந்தார். இளவரசி அவரை நமஸ்கரித்து நின்றாள். முதல் மந்திரியும் இளவரசியை நல் இல்லான் கண்டு நீடூழி வாழ்க என வாழ்த்தினார். குந்தவை, 'இது என்ன என் தந்தை உடல் நிலை கவலைக்கிடமாய் உள்ளது, நாடெங்கும் துக்கத்தில் மூழ்கிக் கிடக்கிறது இவ்வேளை எனக்கு ஏன் இந்த வாழ்த்து?' என்றாள். 'உன் முகம் கவலை ஏதும் இன்றிக் காணப்படுகிறது வீர மறக்குலத்தில் பிறந்தவள் நீ அபாயம் என்றால் அழுது கொண்டிருக்கமாட்டாய் என்பது எனக்குத் தெரியும் ஆனால் என்னைக் கூட கலக்கிவிட்டாயே ராஜாங்க விடயங்களில் தலையிட்டதால் இப்பொழுது எத்தனை விபரீதம் நிகழ்ந்து விட்டது' என்றார் அநிருத்தர். 'ஐயா எந்த ராஜாங்க விடயத்தில் நான் தலையிட்டேன் என்ன விபரீதம் நடந்தது?' என்று கேட்டாள் குந்தவை. அநிருத்தர், 'பொன்னியின் செல்வர் இலங்கையில் இருக்கட்டும் என்று சொல்லிவிட்டு வந்தேன் அதற்கு விரோதமாக நீ புறப்பட்டு வா என்று உன் தம்பிக்கு ஓலை அனுப்பினாய் உன் விருப்பத்தை நிறைவேற்ற உன் தம்பி இந்தக் கிழவனை மதிக்கவில்லை இதனால் அவன் புறப்பட்டு இந்த விபத்திற்கு ஆளானான் இன்று ஒரே குழப்பம் இதற்கு காரணம் நீ தானே?' என்றார். அதற்கு குந்தவை, 'பழுவேட்டரையர்கள் இரண்டு கப்பல்களில் ஆள் அனுப்பி இளவரசரை சிறைப்பிடித்து வரும்படி கூறியதும், இரு கப்பல்களும் நாசாமாகி விட்டதும் உமக்குத் தெரியாதா?' என்று கேட்டாள். அநிருத்தர், 'எனக்குத் தெரியும் ஆனால் உன்னுடைய ஓலையின் பெயரில் தான் அவன் புறப்பட்டான் என்று பழுவேட்டரையர்கள் சொல்லுவார்கள்' என்றார். அதற்கு குந்தவை, 'தங்களுக்கோ, பழுவேட்டரையர்களுக்கோ நான் ஓலை கொடுத்தனுப்பிய விடயம் எப்படித் தெரியும்?' என்று கேட்டாள். 'அது ஊர் அறிந்த விடயமாயிற்றே நீ அந்தரங்கமாக செய்த காரியம் எப்படி அமபலமாகத் தெரிகிறது இதனால்தான் பெண்கள் இராஜ காரியங்களில் தலையிடக் கூடாது என்பர்' என்றார் அநிருத்தர். குந்தவையோ மௌனமாக இருந்தாள். பின்னர் 'ஐயா தங்களிடம் ஒரு கோரிக்கை தாங்கள் இன்று சிறை செய்த இருவரில் ஒருவனை மன்னித்து விடுங்கள்' என்று கேட்டாள். 'யார் அந்தப் பாய்க்கியசாலி' என்று கேட்டார் அநிருத்தர். குந்தவை, 'அது நான் இலங்கைக்கு அனுப்பிய தூதன்' என்றாள். 'அவனை நான் சிறைப்பிடிக்கவே வந்தேன் ஆனால் அவனாக வந்து அகப்பட்டான். அவன் பெயரில் பெரிய பயங்கர குற்றம் சாட்டப்பட்டுள்ளது அதுவும் இவன் தான் பொன்னியின் செல்வரை கடலில் தள்ளி மூழ்கடித்து விட்டான் என்று யாவரும் சொல்லுகிறார்கள் அதைவிட இளவரசரை கப்பலில் ஏற்றி வந்த பார்த்திபேந்திரனும் சொல்லுகிறான் பழுவேட்டரையர்கள் கூட அது நடந்திருக்கலாம் என்கிறார்கள்' என்றார் அநிருத்தர். 'இல்லவே இல்லை அவன் ஆதித்தகரிகாலனிடமிருந்து வந்தவன் வாணர் குலத்து வல்லவராயன் வந்தியத்தேவன் இவனை பரிபூரணமாக நம்பலாம் என்று ஆதித்தகரிகாலர் எழுதியிருந்தார். அவன் ஒற்றன் அல்ல வைத்தியர் மகன் அவன் மேல் பழி சுமத்தியது அவன் அறிவீனம்' என்றாள் குந்தவை. 'நீ அவனை பரிபூரணமாக நம்புகிறாய் அவனிடம் எப்படி பழுவூர் முத்திரை வந்தது?' என்று கேட்டார் அநிருத்தர். அதற்கு 'அது நந்தினி அவனுக்குக் கொடுத்தாள்' என்றாள் குந்தவை. 'இலங்கையில் இருந்து திரும்பி வந்ததும் அரிச்சந்திர நதிக்கரையில் பாழடைந்த பாண்டியனின் அரண்மனையில் இருவரும் சந்தித்துப் பேசினர் அதற்குப் பின்னும் அந்த முத்திரை மோதிரம் அவனிடம் இருக்கிறது இதைப் பற்றி நீ என்ன நினைக்கறாய்' என்றார் அநிருத்தர். 'ஐயா தாங்கள் சொல்வது உண்மையாக இருக்கலாம் ஆனால் வாணர் குலத்து வீரர் பழுவூர் ராணியின் ஒற்றனாக இருக்க முடியாது மனதிற்கு மனதே சாட்சி என்பது போல் என் மனம் அவ்வாறு சொல்லுகிறது அவனை விடுதலை செய்யுங்கள்' என்றாள் குந்தவை.




'சோழ ராஜ் ஜியத்தை இரண்டாகப் பிரித்து ஒரு பகுதியை மதுராந்தகனுக்கும், இன்னுமோர் பகுதியை ஆதித்தகரிகாலனுக்கும் கொடுப்பதாகவும் உன் தமையன் ஆதித்தகரிகாலனை கடம்பூர் மாளிகைக்கு அழைக்கும் படி பழுவூர் ராணி சம்புவரையரைத் தூண்டியிருக்கிறாள். அவர் மகள் ஒருத்தியையும் கரிகாலனுக்கு மணம் செய்ய பேசி வருகிறார்கள் இராஜ்ஜியத்தை பிரிப்பது பற்றி அங்கு பேச்சு நடத்தப் போகிறார்களாம், இது ஒரு புறம் வீர பாண்டியனுடைய ஆபத்துதவிகள் சிலர் சோழ குலத்தை பூண்டோடு அழிப்பதற்கு சபதம் செய்திருக்கிறார்கள் அவர்களுக்கு பெரியபழுவேட்டரையரும் பொக்கிஷத்திலிருந்து தங்கக் காசுகள் அனுப்பிக் கொண்டிருக்கிறார். இப்படி நாட்டில் பல குழப்பமான சூழ்நிலை காணப்படுகின்றது இவற்றையெல்லாம் நாம் தடுத்தாக வேண்டும்' என்றார் அநிருத்தர். 'ஐயா இத்தனை பெரிய கொடுமைகளில் இருந்து நாட்டைக் காப்பாற்ற நாம் என்ன செய்ய வேண்டும்' என்று மிகப் பணிவுடன் கேட்டாள் குந்தவை. 'ஆதித்தகரிகாலரை கடம்பூர் மாளிகைக்கு போகாமல் தடுக்க வேண்டும் நானும் நீயும் அதற்காக அவனுக்கு ஓலை கொடுத்து அனுப்ப வேண்டும் நம்முடைய விருப்பத்தை மீறி கரிகாலன் கடம்பூர் மாளிகைக்குப் போனால் அவனை நந்தினியை தனியே சந்திக்காது தடுக்க வேண்டும். அத்துடன் அவனுடன் கூடவே இருக்க ஒருவன் வேண்டும் நம்பிக்கைக்குப் பாத்திரமானவனாகவும், துணிவும், திறமையும் உள்ளவனாகவும் இருக்க வேண்டும். இதற்கு வாணர் குலத்து வந்தியத்தேவனை அனுப்புவதாக எண்ணியுள்ளேன் அவனுடைய வீர சாகசச் செயல்களைப் பற்றி அறிந்திருக்கிறேன். இன்று அரண்மனை முற்றத்தில் அதை நேரடியாகப் பார்த்தேன். அந்த வைத்தியர் மகனை என்ன பாடு படுத்தினான் உனக்கு மட்டும் அவனில் நம்பிக்கையிருந்தால் அவனை அனுப்பலாம்' என்றார். குந்தவை மனம் குளிர்ந்தது 'வீரனாக இருந்தால் மட்டும் போதுமா? படபடப்புக்காரனாகவும் இருக்கிறானே' என்று தயக்கத்துடன் சொன்னாள் குந்தவை. 'என் சீடன் திருமலை ஆழ்வார்க்கடியான் நிதானமாக சிந்தனை செய்பவன் அவனையும் கூடவே அனுப்பி வைப்போம்' என்றார் முதல் மந்திரி. 'ஐயா தாங்கள் முதல் மந்திரியாக இருப்பது சோழ நாட்டிற்கு எத்தனை அதிஸ்டம் என் தம்பி விடயமாக என்ன ஏற்பாடு செய்தீர்கள்?' எனக் குந்தவை கேட்க, 'சோழ நாட்டில் உள்ள எல்லாச் சிவாலயங்களிலும் விஷ்ணு ஆலயங்களிலும் இளவரசருடைய சுகம் கோரி பிரார்த்தனை செய்து அர்ச்சனை அபிஷேகம் நடாத்தச் சொல்லியிருக்கிறேன். புத்த விகாரங்களிலும், சமணப் பள்ளிகளிலும் பிரார்த்தனை செய்யப் போகிறார்கள் நாகை பட்டின சூடாமணி விகாரையில் விசேட பிரார்த்தனை செய்யப் போகிறார்கள். வேறு என்ன செய்ய வேண்டும் நீயே சொல்' என்று குந்தவையிடம் அநிருத்தர் கேட்க, 'ஐயா சூடாமணி விகாரத்தின் மீது பெரியபழுவேட்டரையர் ஏதோ கோபம் கொண்டிருக்கிறார் இலங்கைப் பிக்குகள் இளவரசரை முடி சூடச் சொன்னதாக வந்த செய்தி இன்னும் கோபத்தைக் கூட்டியிருக்கலாம். இளவரசர் காணாமல் போனதற்கு பிக்குகள் மீது பழி சுமத்தலாம் அதனால் சூடாமணி விகாரைக்கு தக்க பாதுகாப்பு தாங்கள் செய்ய வேண்டும்' என்றாள் குந்தவை. 'உடனே செய்கிறேன்' என்றபடி அநிருத்தர் விடை பெற்றார்.

குந்தவை வந்தியத்தேவனை சிறைமீட்டு தன் தமையனிடம் அனுப்பவதற்காக அவசரமாகச் சென்று கொண்டிருந்தாள். அப்பொழுது வானதி எதிரே வந்தாள். 'அக்கா என்னைக் காப்பாற்றியதற்கு மிக்க நன்றி. எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும் உங்களுக்கு நான் கடமைப்பட்டுள்ளேன் நான் என் ஊராகிய கொடும்பானூரிற்கு செல்லப் போகிறேன் போகும் வழியில் குடந்தை சோதிடர் வீட்டிற்கும் போகப் போகிறேன். எனக்கு விடை கொடுங்கள்' என்றாள். அதற்கு குந்தவை, 'இது என்ன வானதி இந்தச் சமயத்தில் நீ இங்கிருந்து போவது நியாயமாகப் படுகிறதா? எதற்கு அவசரம் சில நாட்கள் பொறுத்திரு' என்றாள். 'அக்கா மன்னிக்க வேண்டும் தங்களிற்கு சிரமம் தர விரும்பவில்லை கொடும்பானூரில் இருந்து என்னை அழைத்து வந்த பல்லக்குத் தூக்கிகளும், வீரர்களும் இங்கு இருக்கிறார்கள் அவர்களே என்னைத் திரும்ப அழைத்துப் போவார்கள். நான் குந்தவை தேவியின் நண்பி எனக்கு யாரும் எதுவும் செய்யமாட்டார்கள் நான் போய் வருகிறேன் விடை கொடுங்கள்' என்றாள் வானதி. குந்தவையால் இதை நம்பமுடியவில்லை. வானதியைத் தடுக்கவும் முடியவில்லை. 'சரி உன் விருப்பம் போல் செய் நீ செல்ல ஆயத்தம் செய் நான் திரும்பி வருகிறேன்' என்று கூறி வந்தியத்தேவன் இருக்கும் பழையாறை சிறைச்சாலை நோக்கிச் சென்றாள் குந்தவை. அங்கு வந்தியத்தேவன் பரவசமாகப் பாட்டுப் பாடிக்கொண்டிருந்தான். அதைக் கண்ட குந்தவை புன்னகைத்தபடி தன் குரலைக் காட்டினாள். வந்தியத்தேவனும் பரவசம் கொண்டு 'வருக தேவி வருக' என்றான். அதற்கு குந்தவை 'என்னை உம் உள்ளத்தில் வருக என்றா வரவேற்கிறீர்?' என்றாள். 'மூன்று உலகத்தையும் ஒரு குடைக்கீழ் ஆளும் சக்கரவர்த்தியின் திருக் குமாரி தாங்கள் தங்களுடைய பொற் கரத்தை கைப்பிடிக்க எத்தனை பேர் தவம் கிடக்கிறார்கள் நான் ஒரு அனாதை எப்படி இடம் கொடுக்க முடியும்? இந்தச் சிறைக் கதவை திறந்து விட்டால் நான் என் வழியே போய் விடுவேன்' என்றான். குந்தவையோ, 'தாங்கள் இந்தச் சிறையையோ அல்லது வேறு எந்தச் சிறையையோ உடைத்துத் தப்பித்துவிடலாம் ஆனால் என் உள்ளம் என்னும் சிறையை விட்டுப் போக முடியாது' என்று கூறி தன் கைகளை நீட்டினாள். வந்தியத்தேவன் இன்ப அதிர்ச்சியுடன் அவள் கைகளைப் பற்றி தன் கண்களில் ஒற்றிக் கொண்டான். அப்போது குந்தவை 'வாணர் குலத்தவரே கற்பென்னும் திண்மையைக் குலமாகப் பெற்ற மன்னர் வம்சத்தில் வந்தவள் நான். பதியின் உடல் எரிந்த தீயைக் குளிர்ந்த நிலமென எண்ணி அக்கினியில் குதித்து உடன் கட்டை ஏறுவதுண்டு. உமது கரத்தைப் பற்றிய என் கரம் என்றும் விலகிடாது. உம் பதட்டமான காரியங்களைக் குறைத்து உம் உயிரைக் காத்து, என் உயிராக கருது' என்றாள். வந்தியத்தேவன் குந்தவையின் அறிவின் உயர்வு கண்டு செயலிழந்து நின்றான். 'அநிருத்தர் உம்மைச் சிறை செய்தார் அவரிடம் அனுமதி பெற்று உம்மை விடுதலை செய்கிறேன். இந்த நாட்டுச் சக்கரவர்த்திக்கு அடுத்து மரியாதைக்குரியவர் முதல் மந்திரி அவர் சொற் போரில் வல்லவர் அவர் ஆயுதத்தை என்றும் துணை கொண்டதில்லை. அவர் நீர் பழுவூர் ராணியின் ஒற்றன் என்று சந்தேகிக்கிறார். வைத்தியர் மகன் பினகபாணியும் உம்மை அவ்வாறே குற்றம் சாட்டினான். அது உண்மைதானா?' என்றாள் குந்தவை. 'தேவி இது என்ன சந்தேகம்' என்றான் வந்தியத்தேவன். 'நான் எனக்குச் சந்தேகம் என்று சொல்லவில்லை குற்றச்சாட்டு உண்மையானதா என்று கேட்கிறேன்?' என்றாள், 'எதற்காக இந்தக் கேள்வி' என வினவினான் வந்தியத்தேவன். அதற்கு குந்தவை. 'ஆதித்தகரிகாலரை கடம்பூருக்கு வருமாறு அழைக்கிறார்கள். கல்யாணப் பேச்சு என்பது வெளிப்படையான செய்தி ஆனால் இராஜ்ஜியத்தை இரண்டாகப் பிரித்து கொடுத்து சமாதானம் செய்யப் போகிறார்களாம்! இதனைத் தடுக்க நீர் காஞ்சிக்குப் போக வேண்டும் அந்தக் கரிகாலன் என் தமையனாருடன் கூட இருந்து அவரைக் காக்க வேண்டும் நந்தினியும், ஆதித்தகரிகாலனும் சந்திக்கக் கூடாது என் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் நீர் தான் அதனால் உம்மை காஞ்சிக்குப் போகுமாறு வேண்டுகிறேன்' என்றாள் குந்தவை. அத்துடன், 'பழுவூர் இளையராணி எம் சகோதரி என்று நம்புகிறேன் அதையும் அந்தக் கரிகாலருக்கு சொல்லிவிடவும்' என்றாள் குந்தவை. குந்தவை மேல் வைத்த அன்பின் நிமித்தம் வந்தியத்தேவனும் காஞ்சிக்குச் செல்ல ஒப்புக் கொண்டான்.

---

Jenita.Jaffna@gmail.com
தொகுப்பு, எழுத்தாக்கம்:
மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை, மாதினி நிமலன

# 2022ஆம் ஆண்டு உங்களுக்கு எப்படி இருக்கும்?

## துலாம்ராசி (சித்திரை 3,4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1,2,3ஆம் பாதம்)




எடுக்கும் காரியங்களை நேர்த்தியாக செய்கின்ற இயல்பும், எல்லோரையும் வசீகரிக்கும் திறனும், கொண்ட துலாராசி அன்பர்களே! உங்களுக்கு 2022ஆம் ஆண்டு சற்று மத்திதமான பலன்களே கொடுக்கும் நிலையுண்டு. பொறுமை நிதானமுடன் செயற்படுவதே மிகவும் நல்லது. 22.03.2022அன்று அமையும் ராகு, கேது பெயர்ச்சி ராகு 7ஆம் இடம் அமைவது, குடும்ப நிலை சார்ந்த சிறு சிறு சிக்கல், பிரச்சினைகள் ஏற்படும். தேவையற்ற பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலைகள் அமையும். கேது ஜென்ம நிலையில் உங்கள் ராசியில் அமைவது அதிக யோசனை, மனச்சஞ்சலம், உடல்நிலை சார்ந்த உபாதை போன்ற பலாபலன்களைக் கொடுக்கும். அதற்கு ஏற்ப மிகவும் பொறுமையுடன் செயற்பட வேண்டும். 13.04.2022அன்று அமையும் குருப்பெயர்ச்சி உங்களின் ராசி நிலைக்கு ரோகஸ்தத்தானம் எனப்படும் 6ஆம் இடம் அமைவது மறைமுக எதிர்ப்புகள் அமையும். அத்தோடு காரியத் தடைகள், உடல் நிலை சார்ந்த சிறு சிறு உபாதைகள் என்பன இருக்கும். எனவே எதையும் அவசரம் இன்றி அமைதியாக செயல்பட்டுக் கொள்வதே மிக மிக நல்லது. பெண்களுக்கு மனச்சஞ்சலம், சிறு சிறு பிரச்சினைகள் ஏற்படும். மாணவர்கள் ஊக்கமும், முயற்சியும் மேற்கொள்வது மிகமிக நல்லது. எதையும் தாங்கும் மனநிலை, தெய்வபக்தி உங்களின் பலமாகும். குலதெய்வ வழிபாடு பிதுர்கடன் என்பன நிறைவாக செய்து நல்ல அனுகூல பலன் பெற்றுக்கொள்க.

## விருட்சிகராசி (விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)




எல்லா விடயத்திலும் ஆற்றல், அறிவு கொண்ட போதும் அதிகமான மனக்குழப்பம், கொண்ட விருட்சிக ராசி அன்பர்களே! உங்களுக்கு 2022ஆம் ஆண்டு சிறப்பான நற்பலன்கள் அமையும் நிலையுண்டு. தொழில் நிலையில் சிறப்பான முன்னேற்றம் இருக்கும். பணவரவு மிகவும் திருப்திகரமானதாக அமையும். எடுக்கும் முயற்சிகளிலே நல்ல அனுகூலமான வெற்றிகள், அமைந்திருக்கும். 22.03.2022அன்று அமைகின்ற ராகு, கேது பெயர்ச்சியானது, உங்களுக்கு ராகு 6ஆம் இடம் அமைவது எதிர்பாராத திடீர் நன்மைகளும், அனுகூலமான அதிஷ்ட பலனும் அமையும் நிலைகள் உண்டு. புதிய முயற்சிகளில் வெற்றிகள் ஏற்படும். அதேபோன்று கேதுவின் 12ஆம் இட சஞ்சாரம், பூர்வீக சொத்து சேர்க்கை, ஆன்மீக யாத்திரை, சுபகாரிய அனுகூலங்கள் என்பன அமையும். 13.04.2022அன்று அமையும் குருப்பெயர்ச்சி உங்களின் ராசி நிலைக்கு பஞ்சமஸ்தானமாகிய 5ஆம் இடம் அமைவது எதிர்பாராத நற்பலன்களைக் கொடுக்கும், குடும்பநிலை மகிழ்வும், சிறப்பும் அமையும். தொழில்நிலை சார்ந்த முன்னேற்றங்கள் இருக்கும். பணவரவு மிகவும் திருப்திகரமானதாக அமையும். பெண்களுக்கு முன்னேற்றகரமான பலனும், நன்மைகளும் அமைகின்ற நிலை இருக்கும். மாணவர்களின் கல்வியில் சிறப்பான முன்னேற்றங்கள் அமையும். எனவே இந்த 2022ஆம் ஆண்டு உங்களுக்கு எல்லா நிலையிலும், நன்மையே அதற்கு ஏற்ப செயற்பட்டு வெற்றிபெறுக.

## தனுராசி (மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்)




தன் போக்கான செயற்பாடு அதிகமாக கொண்டும் எதையும், சிந்திக்காது செய்யும் குணமும், கொண்ட தனுசு ராசி அன்பர்களே! உங்களின் ராசி நிலைக்கு 2022ஆம் ஆண்டு ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் கொடுக்கும். எதையும் திட்டமிட்டு செய்வதில் சற்று குழப்ப நிலைகள் அமையும். வேலைப்பளு மிகவும் அதிகமாக அமையும். 22.03.2022அன்று அமையும் ராகு, கேது, பெயர்ச்சி 5இல் ராகுவும், 11இல் கேதுவும், அமைகின்றன. இதன்மூலம் குடும்ப நிலையில் சிறு சிறு சிக்கல் நிலைகள் இருக்கும். பூர்வீக சொத்துச் சார்ந்த வழக்குகள் அமையும். இதனால் தேவையற்ற அலைச்சல் நிலை பிரச்சினை இருக்கும். கேதுவின் 11ஆம் இடம் திடீரென சிறு சிறு நன்மைகள் கொடுக்கும். 13.04.2022அன்று அமையும் குருவின் சஞ்சாரம், உங்களின் ராசிக்கு சுகஸ்த்தானமாகிய 4ஆம் இடம் அமைவது, மனச்சஞ்சல நிலை அதிகமாக இருக்கும். பணவரவு சற்று மத்திமமானதாகவே அமையும். கொடுக்கல், வாங்கலில் சிக்கல், இழுபறி நிலைகள் இருக்கும். எதையும் திட்டமிட்டு செய்ய முடியாத நிலையிருக்கும். குடும்ப நிலையிலும் குழப்ப நிலை இருக்கும். தாயார் வழியில் திடீர் செலவீனங்கள் அமையும். பெண்களுக்கு சற்று மத்திமமான பலன்களே அமையும். மாணவர்களின் கல்வி நிலையில் அனுகூல நிலையிருக்கும். உங்களின் ராசிக்கு ஏழரைச்சனி கடைக்கூற்று சஞ்சாரம் நடைபெறுவதும் குறிப்பிடத்தக்கது. எனவே 2022இல் மிகவும் பொறுமை, நிதானமுடன் செயற்படுவதோடு குலதெய்வ வழிபாடு, பிதுர்கடன் வழிபாடு மிக மிக நல்லது. அதற்கு ஏற்ப செயற்பட்டு வெற்றிகள் பெறுக!

## மகரராசி (உத்தராடம் 2,3,4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1,2ஆம் பாதம்)




மனநிலையில் எப்போதும், ஆழமான சிந்தனையும், எதையும் தைரியமாக செய்யும் குண இயல்பும், கொண்ட மகர ராசி அன்பர்களே!

உங்களின் ராசிக்கு 2022ஆம் ஆண்டு சற்றுப் போராடியே ஜெயிக்க வேண்டும். எந்த விடயம் எடுத்தாலும் சற்று பிரச்சினைகளும், தடை, தாமத, இழுபறி நிலைகளும் தொடரும். தொழில் நிலை சார்ந்த வேலைப்பளு மிகவும் அதிகமாக அமையும். தேவையற்ற பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை அமையும். பணவரவு சற்று மத்திமமாகவே அமையும் நிலையிருக்கும். எதையும் மனநிறைவோடு செய்யும் நிலை அமைவதில் சிரமநிலை இருக்கும். உடல் நிலைசார்ந்த உபாதைகள், தொழில்நிலை சார்ந்த பிரச்சினைகள், என்பன அதிகமாக இருக்கும். உங்களின் ராசிக்கு 22.03.2022 அன்று அமையும் ராகு, கேது, பெயர்ச்சியானது ராகு 4ஆம் இடம், கேது 10ஆம் இடம் என அமைவது, இப் பலன்களுக்கு காரணமாகின்றது. 13.04.2022 அன்று குருவின் சஞ்சாரம் 3ஆம் இடம் அமைவது. சிரமமான பலன்களே கொடுக்கும். குடும்ப நிலையில், தொழில் நிலையில், உடல் நிலையில், என பல வகையில் சிரமமான பலன்கள் இருக்கும். உங்களின் ராசிக்கு ஏழரைச்சனி 'ஜென்மச்சனி' நடுக்கூற்று சஞ்சாரமும், நடைபெறுகின்றது. எனவே புதிய முயற்சிகளில் கொடுக்கல், வாங்கலில் மிக நிதானமாக செயற்படுவதே அனுகூலமாக அமையும். குலதெய்வ வழிபாடு, பிதுர்கடன் வழிபாடு என்பன தொடர்வது மிகவும் நல்லது. 2022இல் உங்கள் நடைமுறையின் மூலமாக நற்செயல் புரிந்து நன்மை அடைக.

## கும்பராசி (அவிட்டம் 3,4ஆம் பாதம், சதயம், பூரட்டாதி 1,2,3ஆம் பாதம்)




எல்லாவிடயத்திலும் நிறைவாக இருக்க வேண்டும் என்கின்ற எண்ணம் அதிகம் கொண்டு செயற்படும் கும்பராசி அன்பர்களே! உங்களுக்கு 2022இல் ஓரளவிற்கு அனுகூலமாக பலன்கள் அமையும் நிலையுண்டு. 22.03.2022 அன்று உங்கள் ராசிக்கு ராகு 3ஆம் இடமும், கேது 9ஆம் இடமும் அமைகின்றன. இந்த கிரஹ பெயர்ச்சியானது, திடீர் நன்மைகள், எதிர்பாராத சிறப்புகள் என்பன கொடுக்கும். தொழில் நிலை சார்ந்த முன்னேற்றம், இருக்கும். தொழில் சார்ந்த இடமாற்றங்களும் அமையும் நிலை இருக்கும். கேதுவின் 9ஆம் இடம் திடீர் சொத்துச் சேர்க்கை, வாகன யோகம் கொடுக்கும். பொதுவாக உங்களின் எதிர்பார்ப்புகளை ஓரளவிற்கு நிறைவேற்றக்கூடிய நிலைகள் அமையும். 13.04.2022அன்று அமையும் குருப்பெயர்ச்சி உங்களின் ராசி நிலைக்கு தனஸ்தானமாகிய 2ஆம் இடம் அமைவதும், குடும்பநிலை சார்ந்த நன்மைகளைக் கொடுக்கும் நிலையிருக்கும். உறவினர்களின் மூலமாக நன்மைகள் அமையும். கடன் நிலைகளில் சுமகமான பலன்கள் இருக்கும். ஓரளவிற்கு எல்லா வகையிலும் அனுகூலமான பலன்கள் அமையும். இருப்பினும் 'ஏழரைச்சனி' முதற்கூற்று சஞ்சாரம் இடையிடையே எதிர்பாராத திடீர் பிரச்சினைகளையும், கொடுக்கும், நிலை இருக்கும். குல தெய்வ வழிபாடு பிதுர்கடன் வழிபாடு என்பன மிகவும் நல்லது. உங்களின் செயல்பாட்டை தர்ம சிந்தனையோடும், நேர்மையாகவும் கொண்டு செயற்படுத்தி 2022இல் அனுகூலமான நன்மைகள் பெறுங்கள்.

## மீனராசி (பூரட்டாதி 4ஆம் பாதம், உத்தரட்டாரதி, ரேவதி)




மற்றவர்களை வசீகரிக்கும் தோற்றமும், செயலும் கொண்ட மீனராசி அன்பர்களே! உங்களின் ராசி நிலைக்கு 2022ஆம் ஆண்டு சற்று மத்திமமாகவே அமையும் நிலையுண்டு. அதற்கு ஏற்ப மிகவும் பொறுமை நிதானமுடன் செயற்படுவது நல்லது. 22.03.2022இல் அமையும் ராகு, கேது, பெயர்ச்சி உங்களின் ராசி நிலைக்கு ராகு 2ம் இடமும் கேது 8ம் இடமும் அமைகின்றன. இதன் மூலமாக மனநிலையில் சஞ்சலங்கள், தேவையற்ற பிரச்சினைகள், தொழில் சார்ந்த சிக்கல் நிலைகள், கடன் நிலைப் பிரச்சினைகள், என்பன தொடரும் நிலையிருக்கும். எனவே அதற்கு ஏற்ப உங்களின் பொறுமையான செயற்பாடு வேண்டும். 13.04.2022அன்று அமையும் குருப்பெயர்ச்சி உங்களின் ராசிக்கு ஜென்மஸ்தானம் எனப்படும் உங்கள் ராசியில் அமைவது, மந்தமான பலாபலன்களையே கொடுக்கும் நிலையிருக்கும். உடல் நிலை சார்ந்த சிறு சிறு உபாதைகள் இருக்கும். தேவையற்ற எதிர்ப்புகளை சந்திக்க வேண்டிய நிலை அமையும். எனவே எல்லா நிலையிலும், மிகவும் பொறுமை நிதானமுடன் செயற்படுவது நல்லது. குடும்ப நிலையில் சுபகாரிய நிலைகளில் தடைகள், இழுபறிகள் இருக்கும். பெண்களுக்கு மனச்சஞ்சல நிலைகள் அதிகமாக இருக்கும். மாணவர்கள், கல்வி, நிலையில் அதிகமான கவனம் எடுக்க வேண்டும். குல தெய்வ வழிபாடு பிதுர்க்கடன் வழிபாடு என்பன மிகவும் நன்மை தரும். அதற்கு ஏற்ப செயற்பட்டு 2022இல் நற்பலன் பெறுவதற்கு செயற்படுங்கள். (தொடரும்)

## நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் நடாத்தும் தமிழர் மரபு விழா

கனடாவில் கோவிட் பெருந்தொற்று பலரையும் பாதித்திருக்கும் நிலையை கருத்தில் எடுத்து இவ் வருடம் தமிழர்மரபுத் திங்கள் நிகழ்ச்சிகள்.

நா க த அரசாங்கத்தின் பணிமனை அலுவலகத்தில் மட்டுமே இரு நாட்கள் நிகழ்ச்சிகளாக நடைபெறும். இந்நிகழ்ச்சிகளை tgte.tv வழியாக பார்வையிடலாம்.

விபரங்கள்: பொங்கல்விழா நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பணிமனை அலுவலகத்தில் நடைபெறும். (ஒன்ராரியோ சுகாதார விதிமுறைகளுக்கு அமைய)
காலம்: January 14, 2022 நேரம்: 9:30- 10:30am

அலுவலக முகவரி: 2370 Midland Ave.
Unit #A8
Scarborough, ON

தமிழர் மரபு விழா (இணைய வழி)
காலம்: January 15, 2022 நேரம்: 4:00- 6:30pm நேரலை: tgte.tv



# பொங்கல் என்பது வெறும் பண்டிகை அல்ல – அது தமிழ்ப் பண்பாட்டைக் கட்டிக்காப்பதற்கான வேட்கை

## பொங்கல் வாழ்த்துச் செய்தியில் பொ. ஐங்கரநேசன்



தமிழ் மக்கள் தங்கள் வாழ்வில் எத்தனையோ பண்டிகைகளைக் கொண்டாடி வருகின்றனர். இவற்றுள் பெரும்பாலானவை மதம் சார்ந்தவையாகவும், அவர்களிடையே ஏற்றத்தாழ்வுகளை வெளிப்படுத்துபவையாகவும் அமைந்துள்ளன. ஆனால், தைப்பொங்கல் மட்டும் சாதி, மத, பொருளாதார பேதங்களைக் கடந்து ஒட்டுமொத்தத் தமிழர்களுக்கும் பொதுவான பண்டிகையாகக் கொண்டாடப்படுகிறது. இது வெறும் பண்டிகை அல்ல தமிழ்ப் பண்பாட்டைக் கட்டிக்காப்பதற்கான வேட்கை என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

பொங்கல் வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ்மக்கள் இயற்கையைக் கடவுளாகப் பூசித்த தொல்வழிபாட்டுப் பண்பாட்டைக் கொண்டிருந்தவர்கள். அதன் தொடர்ச்சியாகவே மாரி மழை ஓய்ந்து கோடை ஆரம்பிக்கும்போது முதல் அறுவடையில் பொங்கல் செய்து சூரியனுக்குப் படைக்கும் பண்பாட்டு வெளிப்படுத்துகையாகத் தைப்பொங்கல் அமைந்துள்ளது. தமிழ் மக்கள் தங்களைப் போன்றே இயற்கையை நேசிக்கும் பண்பாட்டு மரபைக் கொண்டிருந்தவர்கள். அதன் தொடர்ச்சியாகவே அவர்களோடு உணவு உற்பத்தியில் உழைத்த காளைகளுக்கும் பொங்கல் செய்து படைக்கும் பண்பாட்டு நீட்சியாகப் பட்டிப்பொங்கலைக் கொண்டாடுகிறார்கள். தமிழ் மக்கள் புறமணம் புரியும் பண்பாட்டு உறவைக் கொண்டுள்ளவர்கள். கிராமங்களை இணைப்பதற்கு வீதிகள் இல்லாத அக்காலப்பகுதியில் தைபிறந்தால் வழிபிறக்கும் என்று மாரி மழை ஓயும்வரை காத்திருந்து பாதைகள் தெரிய ஆரம்பித்ததும் அயற் கிராமங்களுக்கு மாப்பிள்ளை தேடிச் செல்வர்.

ஆனால், இன்று நயத்தகு பண்பாட்டுக்குச் சொந்தக்காரர்களான தமிழ் மக்கள் இந்தத் தையிலாவது பௌத்த - சிங்களப் பண்பாட்டு மேலாதிக்கத்தில் இருந்துவிடுபட வழிபிறக்காதா என்று அங்கலாய்த்திருக்கின்றனர். பொங்கல் வாழ்த்துச் செய்திகளை அடுத்தவர்களுக்குப் பரிமாறும் இவ்வேளையில் தமிழ் மக்களின் சுதந்திரமானதும் சுபீட்சமானதுமான வாழ்வுக்கு வழிபிறக்கச் செய்ய இயற்கை என்ற பேரிறைவனை வேண்டி நிற்போமாக என்றும் குறிப்பிட்டுள்ளார்.

### உலகத் தமிழர் பேரமைப்பு
### World Tamil Confederation

(Registration No. AAATU4567GE2021501)
சென்னை அலுவலகம்: 6, தெற்கு மகசூத் தெரு, கோட்டூர்புரம், சென்னை - 600 085
முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம், விளார் சாலை, தஞ்சாவூர் - 613 006.
தொலைப்பேசி: 04362-255044 – worldtamilconfederation@gmail.com

தலைவர்: பழ. நெடுமாறன்

13-01-2022

**பொங்கல் பெருவிழா வாழ்த்து!**
**உ.த.பே. தலைவர் பழ. நெடுமாறன் வேண்டுகோள்**

தொன்றுதொட்டு சாதி, மத வேறுபாடின்றி தமிழர்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் கொண்டாடுவது பொங்கல் பெருவிழாவாகும். இந்நன்னாளில் உலகமெங்கும் வாழும் தமிழர்களுக்கு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொடிய நீ நுண்மி நோயின் தாக்கத்திலிருந்து விரைவில் மக்கள் அனைவரும் விடுதலைப் பெற்று நல்வாழ்வு வாழ இத்திருநாளில் அனைவரும் வேண்டிக்கொள்வோம்.

அன்புள்ள,
(பழ. நெடுமாறன்)
தலைவர்.


MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?
ALL DEBT SOLUTIONS CR PLAN
0%வட்டி
அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்
No Need to file for Bankruptcy
One Small Monthly Payment for all your Bills


வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?
நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?
நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?
உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?
நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.
நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.
நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.
நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்
நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.
நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.
தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்
உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்
416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மொன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# அன்பின் தொனி - 637

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

பரிசுத்தராய் இருங்கள் - Be Holy

**A. பரிசுதம் என்றால் என்னத்தைக் கருதுகிறோம்?**
**இந்த இரத்தம் தேவனுக்கானது**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் தேவனுடைய நியாயப்பிரமாணத்தை முற்றிலும் திருப்திப்படுத்துகிறது. நியாயப் பிரமாணத்தை மீறினால் தண்டனை அடையவேண்டும் என்பது அதன் நியதி, அந்தத் தண்டனையிலிருந்து (மரணத்திலிருந்து) இந்த இரத்தம் நம்மைப் பாதுகாக்கிறது.

பாவஞ்செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான், நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம். **- 1 யோவான் 3: 4**

இஸ்ரவேல் மக்கள் தமது அனைத்து முதற்பிறப்பையும் கொலை செய்ய வருபவரிடமிருந்து காப்பாற்றிக்கொள்ள, ஆட்டுக் குட்டியின் இரத்தத்தை தமது வீட்டு வாசல் நிலைக் கால்களில் பூசி வைக்க வேண்டுமென்று தேவன் அவர்களுக்கு முன்கூட்டியே எச்சரித்துக் கட்டளையிடுவதை யாத்திராகமம் 12ம் அதிகாரத்தில் பார்க்கிறோம். பின் வரவி ருக்கும் ஆட்டுக்குட்டியானவராகிய இயேசுவுக்கு இந்த ஆட்டுக் குட்டியின் இரத்தம் முன்னடையாளமாக இருக்கிறது. அந்த ராத்திரியிலே நான் எகிப்து தேசம் எங்கும் கடந்துபோய், எகிப்து தேசத்திலுள்ள மனிதர்முதல் மிருகஜீவன் கள்மட்டும், முதற்பேறாயிருக்கிறவைகளையெல்லாம் அதம்பண்ணி, எகிப்து தேவர்களின்மேல் நீதியைச் செலுத்து வேன், நானே கர்த்தர். நீங்கள் இருக்கும் வீடுகளில் அந்த இரத்தம் உங்களுக்காக அடையாளமாய் இருக்கும், அந்த இரத்தத்தை நான் கண்டு, உங்களைக் கடந்துபோவேன், நான் எகிப்து தேசத்தை அழிக்கும்போது, அழிக் கும் வாதை உங்களுக்குள்ளே வராதிருக்கும். **- யாத்திராகமம் 12: 12-13**

நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே. **- ரோமர் 5: 8-9**

அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது. **- எபேசியர் 1: 7**

**B. இந்த இரத்தம் மனிதனுக்காகவே**

- இந்த இரத்தம் குற்ற உணர்விலிருந்து நம்மை விடுவிக்கிறது
- இரத்தம் நம்மைப் பரிசுத்தப் படுத்துகிறது
- இரத்தம் நம்மை ஆண்டவரிடம் கிட்டிச் சேர்க்கிறது
- இரத்தம் ஆண்டவருடைய பிரசன்னத்தைச் சென்றடையும் மனத்துணிவை நமக்குத் தருகிறது
- இந்த இரத்தம் தேவனுடைய பார்வையில் நம்மைப் பூரணப் படுதடுகிறது

நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்! **- எபிரேயர் 9: 14**

அந்தப்படியே, இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ்செய்யும்படியாக நகரவாசலுக்குப் புறம்பே பாடுபட்டார். **- எபிரேயர் 1: 12**

அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்தி லுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று. முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களையும் பரிசுத்தராகவும் குற்றமற்ற வர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார். **- கொலோசேயர் 1: 20-21**

ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால், அந்த மார்க்கத்தின்வழியாய்ப் பிர வேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும், தேவனுடைய வீட்டி ன்மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும், துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப் பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத் தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம். **- எபிரேயர் 10: 19-22**

ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார். **- எபிரேயர் 10: 14**

மனிதனுடைய பாவங்களுக்காக இயேசு சிந்திய இரத்தம் மனிதனுடைய குற்ற உணர்விலிலுந்து விடுதலை தருவ தோடு நம்மைப் பரிசுத்தப்படுத்தி தேவனண்டை கிட்டிச்சேர்க்கிறது. மேலும் ஆண்டவருடைய பிரசன்னத்தைச் சென்றடையும் மனத்துணிவை நமக்குக் கொடுத்து, தேவனுடைய பார்வையில் நம்மைப் பூரணப் படுத்துகிறது.

தொடரும்...




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%


கடன் அட்டை. வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள். சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள். முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Proted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

CRC CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700, Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com


Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற
கனகாம்பிகை
தங்கநகை அடகுமாடம்
KANAGAAMBIKAI
PAWN BROKERS
25
வருடங்கள்
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
கனகாம்பிகை
பவுண் வங்கி
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...
2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2
416 269 7198

ஜீவன் முக்தி (பகுதி ) 462

# நெருக்கம் அதிகரிக்கும் இரகசியம்



*(சென்ற வார தொடர்ச்சி)*

உங்களிடம் உள்ள வன்முறை தடுமாற்றம் ஆகியன உங்களின் கவனத்திற்குத் (அதாவது மேல் மனத்தின் கவனத்திற்கு) தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் அவை தொடர்ந்து உங்கள் உடலில் ரசாயன மாற்றங்களை உருவாக்கிக் கொண்டேயிருக்கின்றன.

1. உங்களின் அருகாமையை மனிதர்கள் எப்படி உணர்கிறார்கள்?
2. பயம் கோபம் காமம் வெறி போன்ற உணர்வுகள் உங்களை ஆட்கொண்டிருக்கும்போது உங்களிடமும் மற்றவர்களிடமும் அவை என்னென்ன பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன?
3. உடல் மாற்றங்கள் வாசனைகள் ஐந்தறிவு மிருகத்தையே பாதித்தால் ஆற்றிவு படைத்த உங்களின் சுற்றத்தாரை எவ்வளவு பாதிக்கும்? சிந்தியுங்கள்.
4. உங்கள் வீடு உங்களுக்குச் சொர்க்கமா? நரகமா?

பதில் உங்களின் நல்ல கெட்ட பாதிப்புகளைப் பொறுத்தது. வீடு சொர்க்கமாக மாற... நீங்கள் தேவர்களாக வேண்டும். தேவர்களாக நீங்கள் மாற உங்களின் அருகாமை மற்றவரை ஆனந்தத்துக்குள் ஆழ்த்தும் அளவுக்கு நீங்கள் அருமையானவராக எளிமையானவராக மாற வேண்டும். நீங்கள் இருக்குமிடத்தை ஆனந்தமயமாக்கும் சொல், செயல், பாவனைகளைத் தியானியுங்கள், வெளிப்படுத்துங்கள். தேவர்களாவீர்கள்.

## பகுத்தறிவைத் தாண்டிய இரகசியங்கள்

இறைவன் ஒரு இரகசியப் பொருளல்ல...

என் வாழ்வில் நடந்த மற்றொரு உண்மைச் சம்பவம். ஆழமாகப் புரிந்து கொள்ளுங்கள். என்னுடைய வாழ்க்கையிலே ஒன்பது ஆண்டுகள் நடந்தே ஆன்மீக யாத்திரை செய்து கொண்டு இருந்தேன். உடலில் திடமிருக்கும் சிறுவயது. பிக்ஷை எடுத்துச் சாப்பிட்டு மரத்தடியில் தூங்கி ஊர் ஊராக நடந்து யாத்திரை செய்து கொண்டு இருந்தேன்.

இந்தியா முழுவதும் பன்னிரண்டு ஜோதிர்லிங்கங்கள் உண்டு. அது பன்னிரண்டு ஆலயங்களில் அமைந்திருக்கிறது. அந்தப் பன்னிரண்டு கோயில்களையும் நடந்து பார்ப்பது ஒரு மிகப்பெரிய புண்ணியமாகக் கருதப்படுகிறது. இன்னமும் அந்தப் பன்னிரண்டு ஜோதிர்லிங்க யாத்திரை உண்டு. ஆனால் இப்போதெல்லாம் மக்கள் ரயிலில் செல்கிறார்கள்.

சன்யாசிகள் 12 ஜோதிர்லிங்கத்தையும் நடந்து சென்று தரிசிப்பது ஒரு தவம். அதற்காக ஜோதிர்லிங்க யாத்திரை சென்று கொண்டிருந்தேன். குஜராத்தில் அஹமதாபாத்திலிருந்து சோம்நாத்புரிக்குச் சென்று கொண்டிருந்த வழியிலே நடந்த நிகழ்ச்சி.

ஆழமாக இந்தச் சத்தியத்தைக் கேளுங்கள். எப்படி, எந்த அந்தஸ்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பது முக்கியமல்ல. எந்த நிலையில் வாழ்கிறோம் என்பதுதான் நிஜமான சாதனை. சமுதாயத்தில் உயர்நிலையை அடைவது பெரிய விஷயமல்ல.

நேர்மையற்ற மனம் இருந்தால் போதும். எங்கே வேண்டுமானாலும் எந்த அந்தஸ்தை வேண்டுமானாலும் எந்த உழைப்பும் இல்லாமல் உடனே அடைந்து விடலாம். அதற்கு ஒன்றும் பெரிதாகச் செய்ய தேவையில்லை.

ஆனால் உயர்ந்த நிலைப்பாடு என்பது தெளிந்த திடத்தாலும் ஆழ்ந்த ஞானத்தாலும் உயர்ந்த உணர்வாலும் அளப்பரிய ஆனந்தத்தாலும் அடையப்படுகிறது. வட இந்தியாவில் குஜராத்தில் உள்ள கிராமத்தின் வழியாய் யாத்திரை செய்து கொண்டிருந்தேன்.

அஹமதாபாத்திலிருந்து சோம்நாத்திற்கு சென்றுகொண்டிருந்தேன். பெரிய ஜோதிர்லிங்க ஸ்தலம் அது. ஆன்மீக யாத்திரை சென்று கொண்டிருந்தபோது நடந்த ஒரு சம்பவம் இது.

யாத்திரையின்போது ஒரு கிராமத்தில் தங்கி இருந்தேன். அந்தக் கிராமத்தில் இருந்த வயதான பாட்டி ஒருவர் ‘என்னுடைய வீட்டில் வந்து ஒரு வாரம் தங்கி இருங்கள்’ என்று கேட்டுக் கொண்டார். ஏழைகள் கொடுப்பதுபோல யாரும் கொடுக்க மாட்டார்கள். ஏழைகளுக்குப் பிடித்துவைக்கின்ற பழக்கம் இல்லை. அவர்கள் நதி போன்றவர்கள். ஓடிக்கொண்டே இருப்பார்கள். அதனால் அவர்களுக்குத் தேவையானதும் வந்து கொண்டே இருக்கும்.

நானும் ‘அதற்கென்னம்மா யாராயிருந்தால் என்ன? கூப்பிட்டீர்கள் என்றால் வந்து விடுகிறேன்’ என்று சொன்னேன். அந்த அம்மாவிற்கு எண்பது வயது இருக்கும். அந்த அம்மாவின் மொத்த சொத்துமே ஒரு கால் ஏக்கர் நிலமும் அந்த நிலத்துக்குள்ளேயே ஒரு சின்ன குடிசை ஒரு பசு மாடு. இவ்வளவுதான்.

அந்தக் கால் ஏக்கர் நிலத்தில் விளைகின்ற புல்லை அந்தப் பசுமாட்டுக்குத் தீனியாகப் போட்டு அது கறக்கின்ற பாலைத் தயிராக மோராக மாற்றி அந்தக் கிராமத்திலுள்ள இரண்டு தெருவில் விற்றுவிட்டு வாழுகின்ற வாழ்க்கை. சொத்து என்ற இதைத் தவிர்த்து வேறு ஒன்றும் கிடையாது. இதைத்தான் அன்றாடங் காய்ச்சிகள் என்று தமிழில் சொல்வோம்.

ஒரு மணிநேரம் வேலை செய்தால் ஒரு பத்து ரூபாய் சம்பாதிப்பார். ஐந்து மணி நேரம் வேலை செய்தால் ஐம்பது ரூபாய் சம்பாதிப்பார். ஐம்பது ரூபாய்தான் அவருடைய தினசரி வருமானம். அதில் அவருக்குரிய சாப்பாட்டை வாங்கிக் கொண்டு வருவார். அந்த வயதான அம்மா வீட்டில் ஒரு சின்ன கிருஷ்ணர் விக்ரகத்தை வைத்திருந்தார். அந்தக் கிருஷ்ணர் விக்ரகத்திற்கு நைவேத்யம் வைக்க என்னென்ன வேண்டுமோ அதையெல்லாம் வாங்கி வந்து வைத்து நைவேத்யம் செய்வார்.

ஒரு வாரம் அவர்கள் வீட்டில் தங்கி இருந்தேன். அந்த ஒரு வாரமும் எனக்கு ஆச்சரியமாக இருந்தது. இந்தக் குறைந்த வருமானத்திலே கிருஷ்ணருக்கு எல்லா விளையாட்டுப் பொருளும் வாங்கிவருவார். ‘கிலுகிலுப்பை’ என்று சொல்வார்கள் குழந்தைகள் விளையாடும் பொம்மை அது. அதையெல்லாம் வாங்கி வந்து கிருஷ்ணரிடம் வைத்தார்.

எனக்கு ஆச்சரியமாக இருக்கும். “சாப்பாடுவைத்தலும் பரவாயில்லை. நைவேத்யம் வைத்தால் அதையும் இந்தம்மாதான் சாப்பிடப் போகிறார். பொம்மையெல்லாம் வைக்கிறாரே?” என்று யோசித்தேன். கடவுள் சாப்பிட்டால் எத்துனை பேர் நைவேத்யம் வைப்பீர்கள்.

நம்பிக்கை இருக்கிறது அவர் சாப்பிட மாட்டார் என்கிற நம்பிக்கை!’ அதனால்தான் நைவேத்யமே வைக்கிறார்கள் தேங்காயை உடைத்தால்கூட அது சிதறி ஓடிப்போகாமல் இருக்கத் துணியில் போட்டு உடைப்பார்கள். அதுவும் பரீட்சையில் தேர்ச்சி அடைந்தால்தான் பிள்ளையாருக்குத் தேங்காய் உடைப்பார்கள். தேர்ச்சி பெறாவிட்டால் பிள்ளையாரையே உடைப்பார்கள்! அப்பேர்பட்டது மனித மனம்!

ஆனால் அந்த அம்மா அவ்வளவு வயதான காலத்திலும் அவ்வளவு பெரிய பக்தியுடன் கிலுகிலுப்பை முதல் சின்னச் சின்ன விளையாட்டுப் பொம்மையெல்லாம் வாங்கி வந்து கிருஷ்ணர் முன்பு வைத்தார். ஒரு முக்கியமான உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டும். வறட்டு வேதாந்தம் பக்தியாகா விட்டால் அதுவே தடையாகும்.

அப்போது நான் பெரிய வேதாந்தி. இந்த வேதாந்தம் எல்லாம் படித்தாலே பக்தி மேல் அவ்வளவு விருப்பம் இருக்காது. பக்தி மேல் இருந்த ஈடுபாட்டைக்கூட சில நேரம் வேறு வழியில் அது திருப்பி விட்டுவிடும். ஆம்! ‘அந்தம்மா கிறுக்குத்தனமாக ஏதோ செய்கிறார்கள்’ என்றுதான் அப்போது எண்ணினேன்.

என்னுடைய அறியாத்தனம் என்னுடைய பகுத்தறிவு அவ்வாறு என்னை எண்ண வைத்தது. அப்போது நான் ஞானம் அடையவில்லை. ஞானம் அடைவதற்கு முன்பு சாதனை செய்து கொண்டிருந்த காலம் அது. அந்த அம்மா செய்வதைப் பார்த்து எனக்கு ஏளனமாக இருந்தது.

‘இதைவிட தியானம் செய்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். அதை விட்டு விட்டு இப்படிச் செய்கிறார்களே. சரி அந்தம்மாவிற்குத் தெரிந்தது அவ்வளவுதான்’ என்று என்னைப் பற்றி ஒரு பெருமிதத்தோடு சன்யாசிகளுக்கே உரிய ஒருவித கர்வத்தோடு அந்தம்மாவைப் பார்த்து நினைத்துக்கொண்டேன்.

அந்த அம்மா தினந்தோறும் அந்தப் பொருட்களை வாங்கி வந்து வைத்துவிட்டு கிருஷ்ணர் முன்பு உட்கார்ந்து கொண்டு குஜராத்தி மொழியில் பேசுவார். ‘கிருஷ்ணா வந்து விளையாடு. வா! வா! சாப்பிட்டுப் போகலாம்’ என்று இப்படி அந்தம்மா பேசுவார்கள்.

‘சரி பக்தியில் அந்தம்மா ஏதோ உளறுகிறார்கள். விட்டு விடப்பா நமக்குச் சோறு போடுகிறார்கள். நமக்கு அது போதும். நாம் ஏன் அநாவசியமாக அதில் எல்லாம் தலையிடுவானேன்’ என்று நினைத்துக் கொண்டேன். ஆனால் அதில் இன்னொரு விஷயம் இந்த அம்மா மட்டும் பேச மாட்டார். கிருஷ்ணர் பதில் பேசுவது போலவே பேசிக்கொண்டிருப்பார்.

தொலைபேசியில் நீங்கள் பேசிவிட்டு அவர்களுடைய பதிலுக்கு ஏற்றாற்போல் பதில் சொல்கிறீர்கள் இல்லையா அதே மாதிரி ஏதோ கிருஷ்ணர் பதில் சொல்வது போல இந்த அம்மாவும் பதிலுக்குப் பேசுவார்கள். என்னுடைய பட்டறிவால் அது எனக்கு மிக அதிகமாகவே தெரிந்தது. ‘மிக அதிகமாகத் தெரிகிறதே அப்பா! நாம் இந்த வீட்டில் தங்கலாமா வேண்டாமா?’ என்று பயம் வேறு வந்து விட்டது.

நீங்கள் மட்டும் பேசினால், பரவாயில்லை. ஏதோ பிரார்த்தனை செய்கிறீர்கள் என்று சொல்லிவிடலாம். கிருஷ்ணர் பேசுவது போலவே இந்த அம்மா பதிலுக்கு பேசிக் கொண்டிருப்பார்கள்! எனக்கு அது அதிகமாகவே பட்டது. ‘என்னடா இது இப்படி இருக்கிறார்களே? சரி தவறாமல் நமக்கு நன்றாகச் சோறு போட்டு விடுகிறார்கள்!’ என்று இப்படியும் ஒருவிதமான யோசனையும் இருந்து கொண்டு இருந்தது.

## பட்டறிவு விலகினால் இறைவனைப் பார்க்கலாம்

கடைசியாக ஒரு நாள் முடிவு செய்து விட்டேன். ‘போதுமப்பா இது! இதற்கு மேல் தாங்காது அந்த அம்மாவிடம் சொல்லிவிடலாம்’ என்று அந்த அம்மாவைக் கூப்பிட்டு ‘அம்மா நாளையிலிருந்து என்னுடைய யாத்திரையைத் தொடரப்போகிறேன். எனவே நாளை கிளம்புகிறேன்’ என்று சொன்னேன். அந்த அம்மா “ஓ!” வென்று அழ ஆரம்பித்துவிட்டார்கள். நான் கேட்டேன் ‘ஏனம்மா ஏன் அழுகிறீர்கள்?’

‘நான் என்ன உன்னை வேலை செய்யவா சொன்னேன் தவறாமல்தானே சாப்பாடு போட்டேன். ஏன் நீ போக வேண்டும் என்று நினைக்கிறாய்?’ என்றார்கள். ‘இல்லையம்மா நான் ஒரு சன்யாசி. என்னுடைய வாழ்க்கைமுறைப்படி நான் பிரயாணம் செய்தாக வேண்டும். நான் ஒரே இடத்தில் தங்க முடியாது. இது என்னுடைய தர்மம்’ என்று சொன்னேன்.

உடனே அந்த அம்மா என்று மீண்டும் அழ ஆரம்பித்து விட்டு கிருஷ்ணர் முன்பு போய் உட்கார்ந்து கொண்டு “கிருஷ்ணா நீயாவது சொல்லக்கூடாதா? நீயாவது இவர் போக வேண்டா மென்று சொல்லக்கூடாதா?” என்கிறார். அந்தக் கிருஷ்ணனைப் பார்த்து பயந்துதான் நானே போகலாம் என்று முடிவு செய்தேன்! அந்தம்மா இதை அந்தக் கிருஷ்ணரிடமே சொல்கிறார்கள்.

கிருஷ்ணரிடம் பேசிவிட்டு பிறகு பதிலும் அந்தம்மாவே பேசுகிறார்கள் ‘ஓ ஓ! அவர் போக வேண்டும் என்று நீ சொல்கிறாயா?’ ‘அவர் போக வேண்டும். அவருடைய யாத்திரையைத் தொடர வேண்டும் என்று சொல்கிறாயா! சரி நீ சொல்லி விட்டாய் என்றால் அவர் போகட்டும் பரவாயில்லை’ என்று அந்தம்மா சொன்னார். அதுவரை எப்படியோ பொறுமையாக இருந்தேன். அதற்குமேல் என்னுடைய பொறுமை தாங்கவில்லை. பகுத்தறிவால் அதற்குமேல் தாக்குப் பிடிக்க முடியவில்லை. உடனே அந்தம்மாவை பிடித்துக் கொண்டேன் ‘ஏம்மா ஒரு அளவில்லை. இதையெல்லாம் விட்டுவிட்டு நான் சொல்லிக் கொடுக்கிற தியானத்தை தினம்தோறும் செய். உனக்கு ஆன்ம ஞானம் கிடைக்கும்.

அதை விட்டுவிட்டு இந்தக் கிருஷ்ணர் பொம்மையை வைத்துக் கொண்டு அதற்குத் துணி கட்டி வைத்து அதற்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டு பால் விட்டுக் கொண்டு இந்தக் கிலுகிலுப்பை பொம்மையை வாங்கி வைத்து அதனுடன் என்ன விளையாடிக் கொண்டிருக்கிறாய்?’ என்று கேட்டேன். ‘என்னம்மா செய்து கொண்டு இருக்கிறாய்?’ என்று கேட்டேன்.

அத்தம்மா உடனே “என்ன சாமி சொல்கிறீர்கள்?. நான் தனியாக பேசவில்லை. அங்கே அவரே உட்கார்ந்திருக்கிறாரே!” என்றார். எனக்கு இன்னும் எரிச்சல் அதிகமாகப் போய் விட்டது! ‘என்னடா இது? பைத்தியம் உச்சத்தில் இருக்கிறது போல இதை யாராலும் தெளிய வைக்க முடியாது போலிருக்கிறதே?’ என்று நினைத்தேன். அவர் செய்வதெல்லாம் எனக்கு மிக அதிகமாகவே பட்டது.

ஆழ்ந்து கேளுங்கள் சத்தியம், நடந்ததை அப்படியே சொல்லுகிறேன். சத்தியத்தைத் தவிர வேறொன்றும் இல்லை. அந்தம்மா மிகவும் சகஜமாக “என்ன சாமி சொல்கிறீர்கள்? அங்கே உட்கார்ந்து பேசிக்கொண்டு இருக்கிறாரே! பதில் சொல்கிறாரே உங்களுக்குத் தெரியவில்லையா சாமி?” என்று கேட்டு என் கையைப் பிடித்துக் காட்டினார்கள். வரட்டு வேதாந்தம் பக்தியாகா விட்டால் அதுவே தடையாகும்.

சத்தியமாகச் சொல்கிறேன்... “திருஷ்ணனைப் பார்த்தேன்”... “கிருஷ்ணனை அங்குப் பார்த்தேன்”... யார் புரிந்துகொள்கிறீர்களோ புரிந்து கொள்ளுங்கள்.

நம்ப முடிந்தவாகள் நம்புங்கள். நம்ப இயலாதவாகள் மனனித்து விடுங்கள். நடந்த சத்தியம் இது. அதுவரைக்கும் ஒருவிதமான வேதாந்த கர்வம் வறட்டுப் படிப்பினாலே வந்த கர்வத்தோடு பட்டறிவுத் திமிரோடு இருந்த நான் அந்த விநாடியே சாஷ்டாங்கமாய் அந்த அம்மாவின் காலில் விழுந்தேன்.

‘அந்தம்மா வயதான கிரஹஸ்த பெண்மணி’ ‘நான் ஒரு துறவி’ என்ற அந்தக் கர்வம் அழிந்து போய்விட்டது. என்னுடைய பகுத்தறிவு விலகியது. நேரடியாக இறை உருவையே பார்த்தேன். அந்த விநாடி காலில் விழுந்து ‘அம்மா நாங்கள் எல்லாம் யாரை நினைத்து இப்படித் தியானம் செய்கிறோமோ, அவரோடு நீங்கள் வாழ்ந்துகொண்டு இருக்கிறீர்கள்!’. தெரிந்து கொள்ளுங்கள், பாகவதத்தில் சொல்வதுபோல அருமையாக நீலவண்ணத்தோடு, கிருஷ்ணர் அமர்ந்திருந்தார். இன்னமும் அந்தத் தரிசனத்தை நினைத்தால் நெஞ்செல்லாம் உருகுகிறது.

நீலவண்ணத்தோடு, பிள்ளைக் குணத்தோடு குறும்புச் சிரிப்போடு அவ்வளவு அருமையாக அவ்வளவு அழகாக சம்மணமிட்டு அமர்ந்திருந்தார். அதுவரை படித்த படிப்பினாலும் வறட்டு வேதாந்தத்தினாலும் வந்த தலைக்கனம் காணாமல் போனது. சில ஆழமான அனுபவங்களை வார்த்தைகளாலே சொல்ல முடியாது. ஒருமூட்டைப் பஞ்சை ஒரு ராட்டையிலே நூலாகத் திரிக்க முடியாது. இந்த ஆழமான அனுபவத்தை ஒரு சில வார்த்தைகளில் விவரிக்க முடியாது. அந்த அம்மா கையை எடுத்த உடனே தரிசனம் நின்று போய்விட்டது.

மீண்டும் கிருஷ்ணர் விக்ரகம் விக்ரமாகத்தான் தெரிந்தது. எப்போது அந்த வயதான பெண்மணி கையைப் பிடித்தார்களோ அப்போது தரிசனம் தெரிந்தது. எப்போது கையை விட்டார்களோ அப்போதே போய்விட்டது. அவர்கள் ஒன்றும் பெரிய சன்யாஸி இல்லை பீடாதிபதி இல்லை மடாதிபதி.

இல்லை, காவி அணிந்து ருத்ராட்சம் அணிந்து திரிகின்ற துறவியும் அல்ல சித்தரும் அல்ல. ஆனால் அவர்களை எல்லாம் தாண்டிய உயர்ந்த உணர்வு நிலையில் வாழ்ந்தார்கள்.

கையைப் பிடித்த மாத்திரத்திலே ஒருவனுக்குத் தெய்வ தரிசனத்தை அளிக்க வல்ல உயர்ந்த ஆன்ம நிலையிலே இருந்தார்கள். நான் அந்த அம்மாவின் கால்களில் விழுந்து வணங்கியதும் அந்த அம்மா கலங்கி ஆடிப்போய்விட்டார்கள். “சாமி, நீங்கள் ஒரு சந்யாசி. என்காலில் விழலாமா? ஏன் விழுகிறீர்கள்?” என்று கேட்டார்.

அப்புறம்தான் சொன்னேன் ‘அம்மா நாங்கள் எல்லாம் யாரை ஒரு கணம் தரிசிப்பதற்காக காலங்காலமாகப் பூஜை தியானம் செய்து வருகிறோமோ பெரிய பெரிய வேதாந்த விசாரமெல்லாம் செய்கிறோமோ அவரோடு நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்.’

# "கைலாசா" என்னும் இறையான்மை மிக்க "இந்து தேசத்தின்" நிர்வாகம் மற்றும் பிறநாடுகளுடனான உறவுகள் பற்றி விளக்கமளித்த சுவாமி நித்தியானந்தா



"கைலாசா" என்னும் இந்து தேசத்தின் உதயமான, ஏனைய இந்து நாடுகளுக்கு எதிரானது அல்ல. இந்தியா. நேபாளம். பாலி கம்போடியா மற்றும் தாய்லாந்து ஆகிய இந்து தர்மத்தை பின்பற்றி இயங்கும் நாடுகளுக்கு எதிரானது அச்சமடையத் தேவையில்லை. எமது "கைலாசா" என்னும் புதிய தேசமானது இந்து தர்மத்தின் அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்குமான விதைகளை உற்பத்தி செய்யும் ஒரு இறையான்மை மிக்க ஒரு பிரதேசம் ஆகும்.

ஒரு புதிய தேசம் உருவாவதற்கு முக்கிய அம்சங்களாக கருதப்படுகின்றவை. அதற்கான நிலப்பரப்பு. மக்கள் தொகை. அரசாங்கம். மற்றும் ஏனைய நாடுகளுடன் உறவுகளைப் பேணுதல் ஆகிய நான்கு முக்கியமானவை ஆகும்.

ஆயிரக் கணக்கானவர்கள் இதுவரையில் "கைலாசா" தேசத்தில் குடியேறியுள்ளார்கள். இந்த பிரதேசத்தில் சாதார வாழ்வியலோடு. இந்து சமயத்தையும் இந்து தர்மத்தையும் பாதுகாக்கும் பணிகளும் இடம்பெறுகின்றன.

"கைலாசா" என்னும் புதிய தேசமானது ஏனைய நாடுகளுக்கு போட்டியாக உருவாகவில்லை. ஆனால் ஏனைய நாடுகளை பாராட்டுவதும் அந்த நாட்டு அரசுகளோடு பக்குவமான உறவுகளைப் பேணுவதை முக்கிய நோக்கமாகக் கொண்டதாக விளங்கும்.

இவ்வாறு "கைலாசா" என்னும் இறையான்மை மிக்க "இந்து தேசத்தின்" நிர்வாகம் மற்றும் பிறநாடுகளுடனான உறவுகள் பற்றி விளக்கமளித்த சுவாமி நித்தியானந்தாஇவ்வாறு தெரிவித்தார். "கைலாசா" என்னும் இறையான்மை மிக்க "இந்து தேசத்தின்" நிர்வாகம் மற்றும் பிறநாடுகளுடனான உறவுகள் பற்றி விளக்கமளித்த சுவாமி நித்தியானந்தா அவர்கள் கடந்த 8ம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற அவரது 45வது ஜெயந்தி தின வைபவத்தின் கலந்து கொண்ட பல் துறை சார்ந்த பார்வையாளர்கள் மத்தியில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

இலங்கை இந்தியா அமெரிக்கா. கனடா மற்றும் ஏனைய பல நாடுகளிலிருந்தும் பங்குபற்றிய பக்தர்கள் மற்றும் பார்வையாளர் கலந்து கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

சுவாமி நித்தியானந்தா அவர்கள் அங்கு உரையாற்றுகையில் தொடர்ந்து தெரிவித்ததாவது: "எனது பிறப்பு ஒரு சாதாரண குடும்பத்திலிருந்து ஆரம்பித்தது என்பதை நாம் மிகுந்த திறந்த மனதோடு தெரிவிக்க விரும்புகின்றேன். ஆலயம் சார்ந்த குடும்பப் பின்னணியிலிருந்து தோன்றியவன் தான் நான். நான் பலமிக்கவன் அல்ல. நான் திறமைசாலி என்று கூற வரவில்லை. ஆனால் எளிமையாகவும் கடுமையாகவும் பணிகளை ஆற்றுவதே எனது நோக்கமாகும்.


"கைலாச" என்னும் இந்து தேசத்தின் தன்மை பற்றி சில வினாக்களை எழுப்பலாம். அந்த விடயம் மிகவும் எளிமையானதும் விளங்கிக் கொள்ளக் கூடிய-துமாகும். உலகெங்கும் வாழும் கிறிஸ்தவர்களுக்கு "வத்திக்கான்" என்னும் ஒரு கிறிஸ்த்தவ தேசம் உள்ளது போன்று எமது "கைலாசா" என்னும் தேசம் இயங்கும். எல்லாம் வல்ல பரமசிவனின் ஆசிர்வாதத்தோடும் பாதுகாப்போடும் இந்த தேசம் உலகில் இந்து சமயத்தையும் இந்து நாகரீகத்தையும் காப்பாற்றிய வண்ணம் உலகின் ஏனைய நாடுளோடு சமாதானமாக உறவுகளைக் கடைப்பிடிக்கும்.

எம்மைப் பொறுத்தளவில் ஒரு நாட்டுக்கு இராணுவம் மற்றும் ஆயுதங்கள் ஆகியன அவசியமில்லை. அவை இல்லாமலும் யுத்தம் செய்யாமலும் நாடுகளுக்கிடையில் சமாதானத்தைப் பேணி உலக அமைதியை ஏற்படுத்தலாம். அத்துடன் அழிந்த கொண்டு போகும் இந்து சமயத்தையும் இந்து தர்மத்தையும் இந்து சமயம் சார்ந்த பொக்கிசங்களாக விளங்கும் புராணங்களையும் இதிகாசங்களையும் நாம் ஒன்றாக இணைந்து காப்பாற்றுவோம்" என்றார் சுவாமி நித்தியானந்தா அவர்கள்.


SHIVA DURGA ASTROLOGY CENTER





PRIVATE & CONFIDENTIAL


PANDIT: KRISHNAM RAJU

Solutions & Suggestions on:

Black Magic
Evil Spirits
Jealousy
Health, Wealth
Business, Marriage
Drinking Problem
Love, Divorce
Visa Prob.
Education, Family
Employment, Court
Husband & Wife
Children Problem
Business Prob.
Vasthu Prob
Real Estate
and all other Problems

பிரபல மந்திரிமார்களும், நடிகர், நடிகைகளுக்கு ஜோதிடம் பார்த்து புகழ் பெற்றவர். கைரேகை பார்த்து, முகரேகை பார்த்து, ஜாதகம் பார்த்து, ராசி நட்சத்திரமும் பார்த்து, பிறந்த ஆண்டு திகதி பார்த்து நடந்தது நடந்துகிட்டு இருக்கிறது நடக்கப் போறது பற்றிச் சொல்லுவார்

- குடும்ப காதல் விடயங்கள், மனை விவகாரங்கள்.
- கணவன், மனைவி, காதலர் ஒற்றுமை பிணக்குகள்.
- குழந்தை சந்தான பாக்கியம், பிள்ளைகள் படிப்பு.
- திருமணயோகம், காதல் விவகாரங்கள்.
- தொழில், மனை, அபிவிருத்தி, முன்னேற்றம், லட்சுமிகடாட்சம்.
- வாகன மனைப்பொருத்தங்கள், வீசாப் பிரச்சனைகள், கோட்டு வழக்கு.
- ஆரோக்கியப் பாக்கியம், வியாழ முன்னேற்றம், சேவன கோளாறும்.
- பேய் பிசாசு தொந்தரவா, எதிர்ப்பால தொந்தரவா, கண்திருஸ்டி.
- நாகதோசம் போன்ற எந்தப் பிரச்சினையாக இருந்தாலும்.

உடனே பண்டித் ஜெகதீஸ் சாஸ்திரி அவர்களை சந்தியுங்கள் வெற்றி நிச்சயம். ஏற்கனவே வேறு பல சாஸ்திரிகளை சந்தித்து மனவேதனையுடன் இருந்திருப்பீர்கள். ஒருதரம் பண்டித் ஜெகதீஸ் சாஸ்திரி அவர்களை சந்தியுங்கள் வெற்றி நிச்சயம்.

An Expert Spirtualist treats Black Magic, Witchcraft, Jaadu, Obeau and gives 100% Immediate Protection

880 Markham Rd, Scarborough ON M1H 2Y2
(MARKHAM RD. & PAINTED POST DR.)

437-213-3305



**மொன்றியால்**
**வீணைமைந்தன்**
**எழுதுகின்றார்**




**அத்தியாயம் - 06**

"பாரதியின் பாட்டொலிக்கக் கேட்பாராகில், படித்தறியா
ஏழைக் கிழவர்கூடத் துள்ளியெழுந்து,
தொடைகள் தட்டி
வீறு கொண்டெழுவர்" என்று செவிவழி கேட்டு பிரமிப்புக் கொண்டவன் நான்!
அது எவ்வளவு சத்தியம் என பாரதியை வாசிக்கும் தோறும் உணர்ந்து வருகிறேன்!

"கவிமணி" சி. தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் பாரதி பற்றி எழுதி வைத்த கவிதை வரிகளை மீண்டும் நினைவு கொள்வது இக்காலத்தில் பொருத்தமென எண்ணுகிறேன்!

"ஊரறிய நாடறிய உண்மையெல்லாம்
ஒருவரையும் அஞ்சாமல் எடுத்துரைத்தோன்
ஆரமுதம் அனையகவி பாடித் தந்தோன்
அமரகவி என்றெவரும் புகழப்பெற்றோன்
சீருயரும் தமிழ்மக்கள் செய்தவத்தால்
தென்னாடு சிறக்க வந்த சுப்ரமண்ய
பாரதியார் பெயர் போற்றி ஏத்துவோமே
பாமாலை புனைந்தவற்குச் சாத்துவோமே!"

சினிமாக் காட்சிகளில் கதைக்களத்திற்கு பாரதி பாடல் பொருத்தமாக அமைகிறதோ இல்லையோ, பாரதி பாடல்களைப் பிரபலப்படுத்தி மக்கள் மனதில் இடம் பெறச் செய்ய வேண்டும் எனும் நல்நோக்கம் கொண்ட தயாரிப்பாளர்களையும், இயக்குநர்களையும் பாராட்டியே தீர வேண்டும்.

அவ்வகையில் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் "மேகலா பிக்சர்ஸ்" தயாரிப்பில் 1956ல் வெளியான படம் "ரங்கோன் ராதா". இப்படத்தின் திரைக்கதையை அறிஞர் அண்ணாவும், வசனத்தை கலைஞர் மு. கருணாநிதியும் எழுதியிருந்தனர். நடிகர் திலகம், பி. பானுமதி, எம்.என்.ராஜம், எஸ்.எஸ். இராஜேந்திரன், ராஜசுலோசனா, முத்துராமன் ஆகியோர் முக்கிய பாத்திரங்களையேற்று நடித்த சிறந்த படமாகும். நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் ஏற்றுக் கொண்ட பாத்திரம் ஒரு எதிர்மறைக் கதாபாத்திரமாகும். இதை ஒரு சவாலாகவே சமாளித்திருந்தார். கதாநாயகன் "இமேஜ்" கெட்டுவிடும் என்று கிஞ்சித்தும் நினைக்காமல் தனது நடிப்பாற்றலை மட்டுமே நம்பி ஏற்றுக் கொண்ட பாத்திரம் சிவாஜியினுடையது.

சரி, இப்படத்திற்கும் பாரதி பாடலுக்கும் என்ன சம்பந்தம்? இத்திரைப்படம் சுபமாக நிறைவடையும் காட்சியில் "மகாகவி" எழுதிய "ஒளிபடைத்த கண்ணினாய் வா... வா... வா"! எனும் பாடலை திருமதி. ராஜசுலோசனா தனது காதலன் எஸ்.எஸ்.இராஜேந்திரனைப் பார்த்துப் பாடுவதாக அமைத்திருந்தார்கள்.

அறிஞர் அண்ணாவும், கலைஞர் மு.க.வும் பகுத்தறிவுக் கொள்கைகளையும், மூட நம்பிக்கைக்கான காரண காரியங்களை எதிர்த்தும் மக்கள் விழிப்புணர்வு அடைவதற்கு சினிமாவையும், நாடகங்களையும் வெகுஜன ஊடகமாகப் பாவித்து வந்த காலமது!

"ரங்கோன் ராதா" திரைக்கதையில் சொல்லப்பட்ட மூடநம்பிக்கைகளை ஒதுக்கி விரட்டிவிட்டு அறிவுசார்ந்த முற்போக்கான செயல்களை மக்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்ற நம்பிக்கையுடன் கதாநாயகி மூலம் பாடப்படுவதாக இக்காட்சியும், பாடலும் இடம் பெற்றதாக நம்பலாம்.

திரையில் இடம்பெற்ற பாரதியின் சில வரிகளை மட்டும் பதிவு செய்கிறேன்.

"ஒளி படைத்த கண்ணினாய் வா... வா... வா
உறுதி கொண்ட நெஞ்சினாய் வா... வா... வா
தெளிவு பெற்ற மதியினாய் வா... வா... வா
சிறுமை கண்டு பொங்குவாய் வா... வா... வா
எளிமை கண்டு இரங்குவாய் வா... வா... வா
ஏறுபோல் நடையினாய் வா... வா... வா...




பிரபல இசையமைப்பாளர் ரி.ஆர். பாப்பா அவர்கள் முப்பத்திரெண்டு வரிகள் கொண்ட பாடலில் ஆறு வரிகள் மாத்திரம் கொண்ட பாடலாக திருமதி.பி.சுசீலா அம்மையாரின் குரலில் "ஒளி படைத்த கண்ணினாய் வா... வா.. வா..." பாடலுக்கு இசையமைந்திருந்தார்.

அடுத்து 1957ல் வெளியான "நாலு வேலி நிலம்" படத்தில் மகாகவி பாரதியாரின் முருகன் தோத்திரப் பாடலொன்று இடம் பெற்றிருந்தது. "நாலு வேலி நிலம்" பிரபல நாவலாசிரியர் தி. ஜானகிராமன் அவர்களது கதையாகும். புகழ்பெற்ற நாடக, திரைப்பட நடிகரான "சேவா ஸ்டேஜ்" (Seva Stage) நிறுவனர் திரு. எஸ்.வி.சகஸ்ரநாமம் அவர்கள் மேடையேற்றிய நாடகம், பின்னாளில் அவரால் சினிமாவாகத் தயாரிக்கப்பட்டது.

கிராமியப் பின்புலத்தில் பின்னப்பட்ட இக்கதையின் தலைப்புப் பாடலாக (Title song) முருகப்பெருமான் வீதிவலம் வரும் திருவிழாவில் பாரதியாரின் இப்பாடல் இடம் பெற்றிருந்தது.

முருகன் பாட்டு - நாட்டைக்குறிஞ்சி ராகத்தில் எழுதப்பட்டிருந்தது. "இசைமணி" தெய்வீகக் குரலோன் டாக்டர் சீர்காழி எஸ். கோவிந்தராஜன் குரலில் ஒலித்த பாடலிது. இப்பாடலுக்கு "திரையிசைத் திலகம்" திரு.கே.வி.மகாதேவனுடன் இணைந்து திரு.எம்.கே.ஆத்மநாதன் ஆகியோர் இசையமைத்திருந்தனர்.
இதோ "மகாகவி" இயற்றிய முருகன் பாட்டு:

பல்லவி: முருகா! முருகா! முருகா!
சரணங்கள்

வருவாய் மயில் மீதினிலே
வடிவேலுடனே வருவாய்!
தருவாய் நலமும் தகவும் புகழும்
தவமும் திறமும் தனமும் கனமும் (முருகா)
அடியார் பலரிங்குளரே
அவரை விடுவித் தருள்வாய்!
முடியா மறையின் முடிவே! அசுரர்
முடிவே கருதும் வடிவேலவனே! (முருகா)

சுருதிப் பொருளே வருக
துணிவே கனலே வருக!
கருதிக் கருதிக் கவலைப்படுவார்
கவலைக் கடலைக் கடியும் வடிவேல்! (முருகா)

அமராவதி வாழ் உறவே
அருள்வாய்! சரணம்! சரணம்!
குமரா பிணியாவையுமே சிதறக்
குமுறும் சுடர்வேலவனே சரணம்! (முருகா)

குருவே! பரமன் மகனே!
குகையில் வளரும் கனலே!
தருவாய் தொழிலும் பயனும் அமரர்
சமராதிபனே! சரணம்! சரணம்! (முருகா)

அடுத்த இதழில்

"மகாகவி" பாரதியார் எழுதிய "அழகுத் தெய்வம்" தலைப்பில் இடம்பெற்ற "மங்கியதோர் நிலவினிலே" பாடல் வரிகள் இடம் பெற்ற அந்த இரு படங்கள் எவை? பாடியவர் யார்? பாடலுக்கு நடித்தவர் யார்? இசை அமைத்தவர் யார்?

ஆவலுடன் காத்திருங்கள்

- வீணைமைந்தன்

## "வீணைமைந்தனின்" கவிதைப் பொங்கல்

பொங்கலுக்கு முன்தினம்,
"சிரியடா தம்பி சிரி!
குரோனாவையும் ஒமிக்கிரானையும்
விரட்டிவிட்டேன் என்று!
எக்காளமிட்டுச் சிரியடா தம்பி சிரி

அடிக்கரும்பை கடித்துக் குதப்பும்
இளங்காளையை நோக்கிக் கூறுகிறாள்
அந்தக் குலவிளக்கு!

கொழுநனோ...
உடைத்தெடுத்த தேங்காயின் வெண்மை
எப்படி ஒட்டிற்று...?
என் பைங்கிளியின் பல் வரிசையில் எனக்
கண்ணாளன் அவள் முகத்தை
வியந்து நோக்க...

கட்டான முத்தழகி அருகில் வந்தாள்,
காதருகே கிசுகிசுத்து அத்தான் என்றாள்!
மோதி வந்த தென்றலிலே விலகியது மாராப்பு!
மாதுளை உதடுகளால் தந்திட்டாள் முத்தமழை!

விடிந்தது இரவு...!

கங்குலிலே துயில் நீங்கி
கங்கையிலே நீராடி
மங்கையவள் பொன்மேனி
மணக்கோலம் தாங்கி வர,
மார்பகத்தில் தாலி கொஞ்ச,
மான் விழியாள் மணிக்கரதாதல்
மண்மகளின் மேனியிலே
வண்ணநிறக் கோலமிட
செந்திறக் கதிரவனும்
சிரித்த முகம் காட்டி நின்றான்!

பொங்கற் புதுநாள் தமிழர் திருநாள்
எங்ஙனமோ ஓர் விழாக்கோலம்
நாடெங்கும் நேற்றுவரை வந்த சங்கடம்
ஓய்வு எடுத்துக் கொள்கிறது!
எங்கிருந்தோ ஓர் மகிழ்ச்சி!
இல்லம் வந்து இதயம் புகுந்து
தமிழரை பொலிவுள்ள
பேசும் பொற் சித்திரமாக்கி விடுகிறது!

புத்தாடை! பாற்பொங்கல்! புன்னகை!
மழலை கொஞ்சும் மொழி! கனிவு!
மகிழ்ச்சி! தாய்மையின் அழகொளி!
குடும்ப பாசம்! விழாக் கோலம்!
அட்டியின்றி அரும்பும் மலர்களின்
பட்டியல் சுடறின் விரியும்!

வறுமை ஒழிந்து விடுவதில்லை,
அன்று தலைகாட்ட மறுக்கிறது!
விசாரத்திலிருந்தும் மக்கள் விடுபடுவதில்லை
அன்று ஓய்வு எடுத்துக் கொள்கிறது!

உருமாறும் குரோனாக்கள்
உருக்குலைந்து சாம்பலாக,
சிறுபிறையின் நுதலுடையாள்
செங்கரத்தால் தீ மூட்டி
தீயவற்றைப் பொசுக்கிவிட்டு

மண்ணில் நெல் விளைத்த
மாந்தர் தம் உழைப்பதனை
பொங்கலோ பொங்க லென்று
பூரித்துப் பாடுகையில்...

மஞ்சள் இலை செவ்விளநீர்
மணம் வீசும் மலர்க்கொத்து
மா - பலா - வாழையுடன்
கற்கண்டு - கரும்பு - கருணை நிறைப் பசும்பால்
புதுப்பானை - புத்தரிசி
புதுப்பயறு - புதுவெல்லம்
புத்தாடை அணிந்து
பூவிழியால் புன்னகை
எல்லாமே புதிதிங்கே!

எங்களில் பலருக்குப்
பொங்கலின் தத்துவம்
புரியாமல் போனதேனோ!
பழமையை விரட்டிவிடு!
புதிய சிந்தனைக்குப் புதுப்பாதை
அமைத்துவிடும் பொங்கல் விழா இது!
புதுமையின் பிறப்பிடம்!

உழைப்பவன், உழுபவன்
சிந்திடும் வியர்வையில்
முளைக்கின்ற பயிரிது! முற்றிய கதிரிது!
வீளை நிலத்தில் களை அகற்றிக் காத்திடும் உழவரி-
வர்
கவலைகள் அகலட்டும், கடுந்துயர் நீங்கட்டும்!
கதிரவன் ஒளிபட்டு காரிருள் மறையட்டும்!

பூவினும் மெல்லிய பூவிரலாலே
"காவினில்" பறித்த மலர்களைத் தொடுத்து
நாவினில் இனித்திடும் தமிழ்மொழி உரைத்து
ஆவியில் கலந்த மன்னவன் திருமுகம் நோக்கி
பாயினில் வந்து அமர்க! என விழியாலே ஜாடை
காட்டி அத்தான் என்றாள் சித்திரப்பாவை!

முதல் தலைப்பொங்கல் அமுது எடுத்து
குமரி வாழையின் குருத்தில் விரித்து
தண்ணீர் தெளித்து கையால் தடவி
முத்தென துளிகள் முகத்திடை உதிர
சக்கரைப் பொங்கல் உண்ணுக என்றாள்!

அன்பும் அறனும் எங்கும் பொங்குக!
கல்வியின் பயன் பெற கற்றவர் பொங்குக!
சூதும் வாதும் சூழ்ச்சியும் அழியட்டும்!
ஒற்றுமை பொங்கி ஒருருக்கொண்டு
ஒன்றே உலகமென ஓங்குக பொங்கல்!

பாசம் நேசம் பற்றுக் கொண்டு
பசியும் பிணியும் பறந்திடச் செய்து
பார் சிறக்கப் பொங்குக பொங்கல்!
சித்திரைப் பொங்கலில் மீண்டும் எழுதுவேன்...!

*- வீணைமைந்தன்*


30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்
ஸ்காபுறோ
சங்கர் அன் கோ
இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.
Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...
Tasty தமிழா
உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்
யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்
Tasty Tamila தயாரிப்புகள் இப்போது சங்கர் அன் கோவில் கிடைக்கும்.
மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள், மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.
பனங்கருப்பட்டி
இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers, Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti, Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.
தேன் நெல்லி
பொங்கல் பொதி
PONGAL POTHI
ABC
Tasty Tamila புதிதாக அறிமுகம் செய்துள்ள பொங்கல் பொதிகள் சங்கர் அன் கோ வில் கிடைக்கும்
காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்
SHANKAR & CO
2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

# இவ்வார ராசிபலன்

**14-01-2022 வெள்ளி தொடக்கம் 20-01-2022 வியாழன் வரையும்**




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்

'ராஜயோகம்'

**Dr. K. RAM.Ph.D (USA)**

தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377





**மேஷம்:** அனுகூலமும், ஆதாயமும் கிடைக்கக் கூடிய வாரம். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். திடீர் மாற்றங்கள் நிகழும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். கடன் சுமை குறையும். தாய்வழி தகராறுகள் குறையும். கனவு பலிதமாகும். கனிவான பேச்சு அவசியம். பேச்சில் நிதானம் தேவை. உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். சோதனைகள் நீங்கும். இனம் புரியா சந்தோஷம் ஏற்படும். பிள்ளைகளால் தனவரவு உண்டு. வெளியூர் பயணம் வெற்றி தரும். வாய்பேச்சில் நிதானம் தேவை. வெகுமானம் கிடைக்கக் கூடிய காலம். அன்யோன்யம் திருப்தி தரும். அவமானங்கள் அகலும். ஆண்களின் அதி-காரம் உயரும். பெண்களால் பெருமை சேரும். எதிர்ப்புகள் உருவாகி மறையும். வறுமையின் வாட்டம் குறையும். தாய்வழி உறவில் விரிசல் ஏற்படும். அலைபே-சியால் அலைச்சல் அதிகமாகும். கலவரமான சூழ்நிலை காணப்படும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். வாழ்க்கைப் பிடிப்பு அதிகரிக்கும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். காதல் கைக்கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பொன்காளியம்மன், அதிர்ஷ்ட எண்: 2,7,8,2
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம் அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,R




**ரிஷபம்:** சகாயமான சூழ்நிலை அமையும் வாரம். குடும்ப சந்தோஷம் அதிகரிக்கும். எதிர்கால சிந்தனை ஏற்றம் தரும். வீண் வம்புகள் அகலும். கூட்டுத்தொழில் லாபம் தரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. செயல்பாட்டில் கவனம் தேவை. உறவினர் வருகையால் கலகலப்புக் குறையும். கடன் விஷயத்தில் கவனம் தேவை. புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். இல்லத்தில் மேன்மை ஏற்படும். புகழ் கூடும். விலகி சென்றவர் விரும்பி வருவர். வரன் வாயில் தேடி வரும். அந்நிய தேச பயணம் உண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். முயற்சிகள் தாமதம் ஏற்படும். வீடு, மனை யோகம் உண்டு. காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். புத்தி சாதுர்யம் பெருகும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. பணவரவு சுமாராக இருக்கும். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். சட்டம் சாதகமாகும். நட்டம் இல்லாத காலம். பட்டம் பதவி வந்து சேரும். கற்பனை வளம் அதிகரிக்கும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். முன்னேற்றம் அதிகரிக்கும். பகையாளிகளின் நிலை மாறும். புதிய முதலீடு உருவாகும். பொது வி'யங்களில் நாட்டம் ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அஷ்ட தேவதை, அதிர்ஷ்ட எண்: 3,9,1,7
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,R




**மிதுனம்:** ஆசைப்பட்ட பொருட்கள் சேரும். அரசு வகையில் ஆதாயம் கிட்டும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. மனமகிழ்ச்சி அதிகரிக்கும். தொலைதூரப் பயணம் ஏற்படும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். காதலர்களுக்கு கையிருப்பு குறையும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். கோரிக்கைகள் நிறைவேறும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடும். வம்பு வழக்குகள் தீரும். எண்ணங்கள் வண்ணமயமாகும். உறவினரால் உதவிகள் கிட்டும். அரசியலில் ஆதரவு பெருகும். திருப்பங்கள் ஏற்படும். அரசு வகையில் ஆதாயம் பெருகும். சம்பளம் எதிர்பார்த்தபடி அமையும். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். நீண்ட தூரப் பயணம் லாபம் தரும். சேமிப்பு வளரும். உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். அரசியல்வாதிகள், ஆன்மீகவாதிகள் ஏற்றம் அடைவார்கள். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். நட்பு வட்டம் விரிவடையும். வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் தரும். உதவிகள் கிடைக்கும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளி வட்டாரப் பழக்கம் அதி-கமாகும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பாதாள வடிவு அம்மன், அதிர்ஷ்ட எண்: 8,7,3,1
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,M




**கடகம்:** வகையான வாழ்வும் முறையாகக் கூடிய வாரம். திருப்தி ஏற்படும். வறுமையின் வாட்டம் குறையும். இனம் புரியாத சந்தோஷம் ஏற்படும். வேதனைகள் சாதனையாகும். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். இடையூறு அகலும். கருத்து வேறுபாடுகள் விலகும். வளமான சிந்தனை உருவாகும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். ஊதிய உயர்வு கிட்டும். புதிய முயற்சி பலிதமா-கும். வாயில் தேடி வாய்ப்பு வரும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். மேன்மை தரும் காலம். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. ஆபத்துக்கள் விலகும். நினைத்த விஷயம் நிறைவேறும். வீடு, மனை யோகம் உண்டு. பேச்சில் நிதானம் தேவை. உடல் ஆரோக்கியம் சீராகும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. கலைஞர்களுக்கு புகழ் கூடும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். நீண்ட நாளைய நோய் விலகும். சுமூகமான சூழ்நிலை பெருகும். பங்குச்சந்தை லாபம் தரும். ஆபரணச் சேர்க்கை உண்டு. இடமாற்றம் ஏற்படும். மனைவியின் அன்பு அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ எல்லையப்பன், அதிர்ஷ்ட எண்: 3,5,3,9
அதிர்ஷ்ட நிறம்: ஊதா நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,W




**சிம்மம்:** சுப விரயம் ஏற்படக்கூடிய வாரம். உற்சாகம் அலைமோதும். நல்லோர்களின் வாழ்த்துக் கிடைக்கும். வாகன மாற்றம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். பூர்வீக சொத்துக்கள் கிடைக்கும். புதிய நாட்டம் ஏற்படும். உறவினர் வருகை உண்டு. மறைமுக எதிர்ப்புக்கள் மாறும். வாழ்த்துச் செய்திகள் வரும். அரசுதுறையில் ஆதாயம் உண்டு. புதுமையை விரும்புவீர்கள். இடமாற்றம் நன்மை தரும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். மதிப்பும், மரியாதையும் உயரும். உடன் பிறப்புக்களின் உதவி கிடைக்கும். பணவரவு திருப்தி தரும். பொதுவாழ்வில் புகழ் கூடும். பூமியால் நன்மை உண்டு. செயல்பாட்டில் தீவிரம் கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. இனம் புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. தோஷங்கள் ஒதுங்கும். தேக பலம் கூடும். உடல் நலம் சிறக்கும். குடும்பத்தில் குழப்பங்கள் நீடிக்கும். புதிய முயற்சி கைகூடும். சுபக்காரியம் கைக்கூடும். சொந்தபந்தங்களால் உதவி உண்டு. பால் தானம் பாக்கியம் சேர்க்கும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். புதிய கடன் நேரிடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கைலாசநாதப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 4,9,7,1
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,B




**கன்னி:** சாமார்த்தியமாக செயல்படும் வாரம். நினைத்ததை சாதிக்கும் காலம். உடல் ஆரோக்கியம் சீராகும். மன ஆரோக்யம் சிறக்கும். பணத்தேவைகள் அதிகரிக்கும். செய்தொழில் லாபம் தரும். புதிய நட்பில் கவனம் தேவை. நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். பேச்சில் நிதானம் தேவை. வங்கி சேமிப்பு உயரும். நட்பு வட்டம் விரிவடையும். மனதில் மகிழ்ச்சி கூடும். இல்லத்தில் அமைதி பெருகும். சுபகாரியங்கள் நடந்தேறும். முகப்பொலிவு கூடும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். உடல்பொலிவு கூடும். கல்வியில் கவனம் தேவை. காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். கடன் வசூலாகும். கல்வியில் மேன்மையுண்டு. சிக்கனம் தேவை. விரக்திகள் மறை-யும். வீடு, மனை யோகம் உண்டு. வியாபாரத்தில் கவனம் தேவை. புத்தி சாதுர்யம் பெருகும். கூட்டுத்தொழில் சுமாராக இருக்கும். பயண முயற்சி பலன் தரும். நினைத்த விஷயம் நிறைவேறும். கட்டிட தொழில் ஒப்பந்தங்கள் குவி-யும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். அன்னிய தேச பயணம் உண்டு. ஆபரணச் சேர்க்கையுண்டு. அதிகாரம் குவியும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ வாஞ்சியம்மன், அதிர்ஷ்ட எண்: 5,7,9,1
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,K




**துலாம்:** மனதில் பெறக்கூடிய வாரம். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். கடன் கச்சைகள் தீரும். இல்லத்தில் மகிழ்ச்சியும், மன அமைத-ியும் கூடும். வெற்றிப்பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள். திட்டமிட்ட காரியங்கள் வெற்றியாகும். காதலர்களுக்கிடையே புரிந்துணர்வு ஏற்படும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை வளரும். அரசு ஆதாயம் பெருகும். சம்பளம் எதிர்பார்த்தபடி அமையும். சொத்துப் பிரச்சனை தீர்வு ஏற்படும். குடும்பத்தில் அமைதி உண்டு. தொழில் போட்டி மறையும். புதிய முயற்சி கைகூடும். நண்பர்கள் உதவி கிட்டும். உடல்நலனில் கவனம் தேவை. ஞாபகத் திறன் அதிகரிக்கும். திட்டமிட்ட காரியங்கள் ஒன்றிரண்டு நடந்தேறும். காதலில் வெற்றிக் காண்பீர்கள். மனஅமைதி தேடி அலைவீர்கள். கடன் கச்சைகள் தீரும். கர்ம வினைகள் அகலும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். மனக்குழப்பங்கள் தீரும். மங்கையருக்கு திருமணம் கைகூடும். தொட்ட காரி-யம் ஜெயமாகும். மனக்குழப்பங்கள் தீரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். குடும்பத்தில் அமைதி நிலவும். வாகனங்களில் முதலீடு உண்டாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ செல்லாண்டியம்மன், அதிர்ஷ்ட எண்: 6,2,1,8
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,S





**விருச்சிகம்:** ஆன்மீக எண்ணம் அதிகரிக்கக்கூடிய வாரம். வெளியூர் பயணம் உண்டு. பழையக்கடன் வசூலாகும். தொழில் அபிவிருத்தி அடையும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். மனக்கசப்பு வந்து நீங்கும். வீடு, மனை ஆசைகள் நிறைவேறும். சிரமப்பட்ட காரிங்கள் நிறைவேறும். வீட்டுத்தொல்லைகள் விலகும். பாராட்டுக் கூடும். வம்புதும்புகள் ஒழியும். இடமாற்றம் நன்மை தரும். பிரார்த்தனை நிறைவேறும். சேமிப்பு வளரும். புதியக் கடன் வாங்க நேரிடும். குடும்பத்தில் அமைதி நிலவும். எதிர்பார்த்த உதவி உயர்வு கிட்டும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். வெளியூர் பயணம் தேவை. உறவினர் வருகை உண்டு. காதலர்கள் ஒற்றுமை அதிகரிக்கும். வேலை பளு கூடும். அரசு வழியில் ஆதாயம் உண்டு. உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். திருமண முயற்சி பலன் தரும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. ஏற்றுமதித் தொழில் லாபம் தரும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உறவி-னர் வழியில் செலவுகள் உண்டு. எதிரிகள் உதிரியாகும் காலம். நல்லோர்களின் வாழ்த்துக் கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சிவபெருமான், அதிர்ஷ்ட எண்: 8,2,9,7
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,S





**தனுசு:** மாற்றங்கள் ஏற்படும் வாரம். சூழ்ச்சிகளிலிருந்து வெற்றி பெறுவீர்கள். இனிய தகவல் வந்து சேரும். வங்கி சேமிப்பு உயரும். விருந்தினர் வருகை உண்டு. பயணம் வெற்றி தரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். நண்பர்கள் பாராட்டு கிடைக்கும். உத்தியோக உயர்வு உண்டு. வார்த்தைகளில் நிதானம் தேவை. மங்களச் செய்தி வரும். பங்குச்சந்தை லாபம் தரும். உடன்பிறப்பால் நன்மை உண்டு. அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடல் உஷ்ணம் வந்து போகும். பொதுப் பிரச்சனைகள் விலகும். வழக்குகள் சாதகமாகும். வாய்ப்புக்கள் வந்து சேரும். நிர்வாகச் செலவுகள் கூடும். பொறுமையை கையாள வேண்டும். பழையக் கடன் தீரும். முன்கோபம் தவிர்க்கவும். இரும்புத்தொழில் லாபம் தரும். பயணம் பலன் தரும். புதிய முயற்சிகள் கவனம் தேவை. புத்தி சாதுர்யம் கூடும். வர்த்தக தொழில் லாபம் தரக்கூடும். பதவி உயர்வு தடைப்படும். பிரச்சனை முடிவுக்கு வரும். வியாபாரத்தில் கவனம் தேவை. பொருளாதார சிக்கல் நீடிக்கும். பிரியமானவர்களை சந்திப்பீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ செல்லாண்டியம்மன், அதிர்ஷ்ட எண்: 1,4,5,8
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,D




**மகரம்:** அலைச்சல் அதிகரிக்கும் வாரம். கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். கட்டிடத் தொழில் கவனம் தேவை. கற்பனை வளம் கூடும். கடன் தொல்லை தீரும். பிள்ளைகளிடத்தில் முன்னேற்றம் உண்டு. பகையாளிகளின் நிலை மாறும். பெண் வழிப் பிரச்சனை முடிவிற்கு வரும். முன்னேற்றம் அதிகரிக்கும். முத்தான வாய்ப்புகள் பெருகும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகரிக்கும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். எதிர்கால எண்ணங்கள் நிறைவேறும். மற்றவரிடத்தில் மரியாதை உயரும். பெற்றோர் பாராட்டு கிடைக்கும். புதிய நண்பர்களால் தகுதி மேம்படும். வரவு திருப்தி தரும். காரிய தாமதம் ஏற்படும். கன்னிப் பெண்களுக்கு சுபச்செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். மனசஞ்சலம் ஏற்பட்டு மறையும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ ஏரிக்கரை பகவதி, அதிர்ஷ்ட எண்: 2,4,8,9
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,J




**கும்பம்:** சந்தோஷம் அலைமோதும். வியாபாரத் தடை ஏற்படும். ஆரோக்கியம் கவனம் தேவை. விவாக முயற்சி வெற்றி தரும். உடல் உபாதை நீங்கும். உறவினரால் பணவிரயம் உண்டு. சுபக்காரியம் கைகூடும். வேலை பளு அதிகரிக்கும். வெறுப்புக்கள் கூடும். பொறுப்புக்கள் சேரும். நல்லோர்கள் நட்பு கிட்டும். தொழில் வாய்ப்பு ஏற்படும். பிரச்சனைகள் தீரும். பிரபல்ய ஆசை ஏற்படும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிள்ளைகள் தேவைகள் பூர்த்தியாகும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். புதிய நட்பு உருவாகும். மனைவியால் மரியாதை உயரும். மேலதிகாரியிடம் பாராட்டு கிடைக்கும். கன்னிப் பெண்களுக்கு திருமண வாய்ப்பு கூடி வரும். மரத் தொழில் லாபம் தரும். பாராட்டுக்கள் வந்து சேரும். பயணம் அனுகூலம் தரும். கல்வியில் ஈடுபாடு குறையும். போட்டிகள் கடுமையா-கும். வியாபாரம் சுமாராக இருக்கும். நிர்வாக அலைச்சல் கூடும். சிரமங்கள் குறையும். உள்ளம் மகிழும். சக ஊழியர்களின் உதவி உண்டு. சம்பள உயர்வு உண்டு. உறவினரால் அலைச்சல் உண்டு. மனபயம் நீங்கும். முதுகில் வலி வந்து சேரும். திடீர் பயணம் உண்டு. படிப்பில் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பச்சையம்மன், அதிர்ஷ்ட எண்: 4,2,6,9
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,Q




**மீனம்:** விருப்பங்கள் நிறைவேறும் வாரம். மனதில் சந்தோஷம் அதிகரிக்கும். பொன்னான நேரம் உங்களை வந்தடையும். நினைத்த காரியங்களில் வெற்றி பெறுவீர்கள். இனிதான செய்திகள் தேடி வரும். சுறுசுறுப்புடன் செயல்படுவீர்கள். பயணம் வெற்றி தரும். மெத்தனப் போக்கு விலகும். உடல் வலியிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள். வேற்று மதத்தினரால் லாபம் உண்டு. தேகப் பலம் கூடும். நண்பர்களை சந்திக்க நேரிடும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். புதிய சொத்து சேரும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. மருத்துவச் செலவு உண்டு. பெண்களுக்கு கவனம் தேவை. புதிய எண்ணங்கள் உருவாகும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். ஏற்றுமதி தொழில் கவனம் தேவை. முகப்பொலிவு கூடும். பொற-ியியல் துறை லாபம் தரும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். திருமண வாய்ப்புக் கூடி வரும். மன அமைதி குறையும். உடல்நலம் திருப்தி தரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். பாதகமான சூழ்நிலை அகலும். நினைத்ததை சாதித்துக் காட்டுவீர்கள். நல்லோர்கள் வாழ்த்துக் கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ காளியம்மன், அதிர்ஷ்ட எண்: 8,9,2,1
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,Z

# மரண அறிவித்தல்

பிறப்பு:

20 - 05 - 1963



இறப்பு:

13 - 01 - 2022

## திருமதி. விக்னேஸ்வரி மனோகரன்

**(உடுப்பிட்டி)**

**இமயாணன் உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும், தற்போது கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. விக்னேஸ்வரி மனோகரன் அவர்கள் 13-01-2022 அன்று இறைவனடி சேந்தார்.**

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையகுட்டி நடேசு - ரட்ணம் தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான ரட்ணம் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும்,

மனோகரன் அவர்களின் அன்பு மனைவியும்,

சிந்துஜாவின் பாசமிகு தாயாரும், யுத்தன்ராஜ் அவர்களின் அன்பு மாமியாரும்,

யோகநாதன் (கனடா), ஜெயநாதன் (ராணி, ஜேர்மனி), விமலநான் (கனடா), திலகநாதன் (SriLanka), சிறீஸ்வரி (கனடா), இந்துநான் (கனடா) ஆகியோரின் அன்பு சகோதரியும்,

மஞ்சிதா (மஞ்சு - கனடா), சாந்தினி (ஜெர்மனி), மலர் (சிங்கப்பூர்), சியானி (SriLanka), திருநாதன் (கனடா), யாழினி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும்,

செல்வம், புஸ்பமலர், சிவமலர், நேசமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியும்,

சகானா, அடானா, ஜதுசன், பானுஜன், டாபினி, லெவிசா, ஜோட்ஸ்னா, ஜஸ்வின், ஜாஸ்லின் ஆகியோரின் அன்பு அத்தையும்,

ருத்வா, ஸகஸ்திரா ஆகியோரின் அன்பு பாட்டியும் ஆவார்.

***அன்னாரின் பூதவுடல் பார்வைக்காக 16-012022 ஞாயிற்றுக்கிழமை மாலை 6:00 மணி தொடக்கம் 9:00 மணி வரையும், 17-01-2022 திங்கட்கிழமை காலை 6:30 மணி தொடக்கம் 8:00 மணி வரையும் Chapel Ridge Funeral Home & Cremation Centre (8911 Woodbine Ave, Markham) இல் பார்வைக்காக வைக்கப்பட்டு, பின்னர் 17-01-2022 காலை 8:30 மணிக்கு ஈமைக்கிரியைகள் நடைபெற்று Highland Hills Crematorium (12492 Woodbine Ave., Gormley) இல் தகனம் செய்யப்படும்.***

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:** மனோகரன் (கணவர்): (416) 474-3646
சிந்து (மகள்): (416) 917-2434
யோகன்: (647) 985-1301
திலக்: 94 76311 1135
ராணி: 49 1521 6956041
ஈசா: (416) 303-8902
விமல், இந்து: (647) 629-3810

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள்,
பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும்
அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca



25ஆவது வெள்ளி விழா 2021
UTHAYAN உதயன்



LOOKING FOR YOUR Dream House?
647-401-9211
416-321-0110
@REALTOR.SEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM
7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8
Call SEYON CHANDRAKUMAR
RE/MAX ROYAL PROPERTIES
BUYING
SELLING
INVESTING



உதயம் 1345 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday January 14, 2022


# கனடிய வர்த்தகப் பிரமுகர் கணேசன் சுகுமாரின் துணைவியார் ஷீலா சுகுமார் அம்மையார் காலமானார்



கனடாவின் முன்னணி வர்த்தகப் பிரமுகர்களில் ஒருவரும் தமிழ்நாட்டின் புகழ்பெற்ற சரவணபவன் உணவகங்களின் மூன்று கிளைகளை கனடாவில் நிர்வகித்து நடத்தி வருபவரும் கனடாவின் ஆளும் கட்சியான லிபரல் கட்சின் நீண்ட கால சிரேஸ்ட் உறுப்பினரும் தாயகத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொடர்ச்சியாக உதவிகள் புரிந்து வருபவருமான கணேசன் சுகுமார் அவர்களின் துணைவியார் 'ஷீலா சுகுமார் அம்மையார் கடந்த சனிக்கிழமை ரொறன்ரோவில் காலமானார் என்ற செய்தியை எமது வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்.

கணக்கியல் துறையில் பல உயர் சான்றிதழ்களைப் பெற்றவராக விளங்கிய ஷீலா சுகுமார் அம்மையார் இலங்கையிலும் கனடாவிலும் பல நிறுவனங்களில் பணியாற்றியவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த செவ்வாய்கிழமை காலை மார்க்கம் நகரத்தில் உள்ள செப்பல் ரிட்ஜ் அந்தியக்கிரியைகள் இடம்பெறும் மண்டபத்தில் நடைபெற்றன. பல துறைகளைச் சார்ந்து முக்கிய பிரமுகர்கள் மற்றும் தமிழர் சமூகத்தின் பிரதிநிதிகள் என நூற்றுக்கணக்கானவர்கள் மறைந்த ஷீலா சுகுமார் அம்மையாருக்கு தங்கள அஞ்சலியைச் செலுத்தினர்.

# நாடுகள் எம்மைப் பிரித்தாலும் மொழியால் நாம் இணைவோம் என்கிறார் தமிழக முதல்வர் ஸ்டாலின்



"நாடுகள் எம்மைப் பிரித்தாலும் நாம் எமது மொழியாலும் பண்பாட்டாலும் ஒன்றுபட்டு வாழ்வோம்" என்று தமிழக அரசின் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நேற்று வியாழக்கிழமை இணையவழி ஊடாக நடைபெற்ற அயலகத் தமிழர் நாள் விழாவில் சிறப்புரையாற்றிய தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார்.

'தமிழால் இணைவோம்' என்ற அடிப்படையில் நாம் ஒன்றுசேர்ந்துள்ளோம். தமிழுக்குத்தான் அந்த வலிமை இருக்கிறது. மத மாயங்களையும் சாதி பேதங்களையும் வீழ்த்தும் வல்லமை மொழிக்குத்தான் உள்ளது. அதனால்தான் 'தமிழால் இணைவோம்' என்பதை நமது முழக்கமாகக் கொண்டுள்ளோம்.

*(தொடர்ச்சி உள்ளே 5ம் பக்கத்தில்)*

# கியூபெக் மாகாணத்தில் இரவு 10 மணி முதல் அதிகாலை வரை அமுலில் இருந்த ஊரடங்கு திங்கட்கிழமை முதல் நீக்கப்படுகின்றது

கியூபெக் மாகாணத்தில் இரவு 10 மணி முதல் அதிகாலை வரை அமுலுக்கு வந்திருந்த ஊரடங்கு உத்தரவானது எதிர்வரும் திங்கட்கிழமை முதல் நீக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், எதிர்வரும் நாட்களில் இரவு நேரங்களிலும் உணவகங்கள் திறந்து செயல்பட வாய்ப்பாக அமையும் என தெரிவித்துள்ளார் மாகாண முதல்வர் பிரான்சுவா லெகால்ட் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ஓமிக்ரான் பரவல் உச்சத்தை தொட்டுள்ளதாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர் என குறிப்பிட்டுள்ள மாகாண முதல்வர் குசயஉெழளை டுநபயரடவ, நாம் இதுவரை முன்னெடுத்த கட்டுப்பாடுகள் அதன் பலனை அடைந்துள்ளது என்பது இதனால் தெரிய வருகிறது என்றார்.

கியூபெக் மாகாணத்தில் கடந்த டிசம்பர் 31ம் திகதி முதல் இரவு 10 மணியில் இருந்து 5 மணி வரையில் ஊரடங்கு அமுலுக்கு கொண்டுவரப்பட்டது. மட்டுமின்றி, உணவகங்கள், மதுபான விடுதிகள், உடற்பயிற்சி கூடங்கள் உட்பட மூடப்பட்டன. தற்போது ஜனவரி 17ம் திகதி முதல் இரவு ஊரடங்கு உத்தரவு நீக்கப்படுவதால், இனி மேல் உணவகங்கள், மற்றும் அவை சார்ந்த வர்த்தக நிறுவனங்கள் திறந்து செயல்படும் என்று நம்பப்படுபவதாக எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

# தமிழ்நாடு திருச்சியில் நடைபெற்ற இனிய நந்தவனம் வெள்ளிவிழாவும் நூல் வெளியீடுகளும்



தமிழ்நாடு திருச்சியிலிருந்து 25 ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கும் "இனிய நந்தவனம்" மாத இதழின் 25ஆம் ஆண்டு விழா 10.:.01.:. 2022 அன்று சிறப்பாக நடைபெற்றது. அவ்வமயம்" இனிய நந்தவனம் வெள்ளிவிழா மலர்" மற்றும் அதன் ஆசிரியர் திரு. நந்தவனம் சந்திரசேகரன் எழுதிய "சுகமாய் ஒரு ஞானம்", "இளவேனிற் காலத்து உரையாடல்கள்" என்ற இரு நூல்களும் வெளியிடப்பட்டன.

விழாவிற்குத் தலைமை தாங்கிய வி.ஜி.பி. ஹவுசிங் பிரைவேட் லிமிடெட், திருச்சி கிளையின் துணைத்தலைவர் திரு. இரா. தங்கையா நூலை வெளியிட, இலங்கையிலிருந்து வருகை புரிந்து விழாவிற்கு முன்னிலை வகித்த இலக்கியப் புரவலர் திரு.ஹாசிம் உமர் நூலின் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

*(தொடர்ச்சி உள்ளே 8ம் பக்கத்தில்)*


தமது நற்சேவையினால் தமிழ் மக்களின்
உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan
Broker
Homelife/Future Realty Inc., Brokerage
Joy H.Selvanayagam
Broker